விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk


கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 சித்திரை 06 செவ்வாய்க்கிழமை (19.04.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 122

# நான் வழங்கிய சுதந்திரத்தாலேயே வடக்கு மக்கள் இன்று பேசுகின்றனர்

## அபிவிருத்தியையும் அள்ளிக் கொடுத்தேன் என்கிறார் மகிந்த



(கொழும்பு)

வட மாகாண மக்களுக்கு பூரண சுதந்திர நடமாட்டத்தையும் கருத்துச் சுதந்திரத்தையும் ஏற்படுத்திக் கொடுத்தது தாமே என தெரிவித்துள்ள முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, அந்த சுதந்திரத்தை வைத்துக் கொண்டுதான் அவர்கள் இன்று பல எதிர்பார்ப்புகளை முன்வைத்து வருகின்றனர் என குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டார். மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தை விடவும் நல்லாட்சி

23ஆம் பக்கம் பார்க்க....




## பெறுமதிசேர் வரி அதிகரிப்பால் தொலைபேசி, மின் கட்டணம் உயரும்!

(கொழும்பு)

பெறுமதிசேர் வரி அதிகரிக்கப்பட்டால் அதற்கேற்ப தொலைபேசி, மின்சாரம், நீர் போன்றவற்றின் கட்டணங்களும் உயர்வடையும் என பொருளாதார நிபுணர்கள் எதிர்வுகூறியுள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் தெரிவித்திருக்கும் முக்கிய கருத்துகள் வருமாறு,

வரி அதிகரித்தால் சகல அத்தியாவசியப் பொருட்களின் விலைகளும் அதற்கேற்ப அதிகரிக்கும்.

தனியார் சுகாதார சேவைகள், தனியார் பாடசாலைகள் உள்ளிட்ட சகல துறைகளும் கட்டண உயர்வுக்கு உட்படும்.

அதன் பிரகாரம் நிலையான தொலைபேசியொன்றுக்கு விதிக்க

24ஆம் பக்கம் பார்க்க....

## வரலாற்றிலேயே அதிக வெப்பநிலை!

(கொழும்பு)

இலங்கை வரலாற்றிலேயே அதிகூடிய வெப்பநிலையைக் கொண்ட நாட்களாக கடந்த சில நாட்கள் கணிக்கப்பட்டிருப்பதாக வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

இந்து சமுத்திரத்தில் காற்றின் வேகம் வெகுவாகக் குறைவடைந்துள்ளமை, வானத்தில் மேகங்கள் குறைந்துள்ளமை, சூரியன் பூமிக்கு சரி நேராக சஞ்சரித்தல் போன்ற காரணங்களாலேயே இந்த அதி உஷ்ண காலநிலை தோன்றியிருப்பதாக வானிலை அவதான நிலை

24ஆம் பக்கம் பார்க்க....

## பொருத்து வீடுகளைப் பெற வடக்கு மக்கள் முண்டியடிப்பு!

### இப்படி கூறுகிறார் சுவாமிநாதன்



(யாழ்ப்பாணம்)

கோப்பாய் மற்றும் தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவுகளில் அமைக்கப்பட்டுள்ள இரண்டு மாதிரி பொருத்து வீடுகள் போன்ற வீட்டுத் திட்டத்தைப் பெறுவதற்கு வடக்கிலுள்ள மக்கள் முண்டியடிப்பதாகத்

23ஆம் பக்கம் பார்க்க....

## வாளால் வெட்டிவிட்டு பணம், நகை கொள்ளை

(யாழ்ப்பாணம்)


மோட்டார் சைக்கிளில் சென்ற நபரை இடைமறித்த கொள்ளையர்கள் அவரது இடது காலை வெட்டி காயப்படுத்தியதுடன் அவர் அணிந்திருந்த தங்க நகை மற்றும் பணத்தை கொள்ளையடித்துச் கொண்டு தப்பிச் சென்றுள்ளனர்.

இச் சம்பவம் நேற்று இரவு 7.30 மணியளவில் யாழ். செம்மணி வீதி சுடலைக்கு அருகில் இடம் பெற்றுள்ளது.

23ஆம் பக்கம் பார்க்க....

## மன்னாரில் ஹயஸ் விபத்து

### பாஸ்டர் மரணம்; 8 பேர் படுகாயம்



08ஆம் பக்கம் பார்க்க....

### மாலைதீவிலிருந்து மீட்கப்பட்ட மூவரை

## 10 வருடங்களின் பின் உறவுகள் வெலிக்கடச் சிறையில் பார்வை

மாலைதீவு சிறைச்சாலையில் இருந்து அழைத்து வரப்பட்டு கொழும்பு வெலிக்கடச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 3 தமிழ் கைதிகளையும் 10 வருடங்களுக்கு பின்னர் நேற்றையதினம் அவர்களுடைய உறவினர்கள் வெலிக்கடச்சிறையில் சந்தித்துள்ளனர்.

மன்னார் மற்றும் வவுனியா மாவட்டத்தை சேர்ந்தவர்களான கணேஸ் இராமச்சந்திரன், முத்துலிங்கம் யோகராசா, நவரத்தின ராஜா ரஞ்ஜித் ஆகிய மூன்று பேருமே கடந்த 10ஆம் திகதி மாலைதீவு அரசாங்கத்தின் உதவியுடன் இலங்கைக்கு கொண்டு வரப்பட்டு தற்போது கொழும்பு வெலிக்கடச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

24ஆம் பக்கம் பார்க்க....

## பாதாள உலக குழுவின் துப்பாக்கிதாரியாக செயற்பட்ட முன்னாள் புலி உறுப்பினர் கைது!

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் அமைப்பின் சார்ள்ஸ் அன்ரனி படைப் பிரிவின் முன்னாள் உறுப்பினர் ஒருவரை காலி, தெவட்டே பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் கைது செய்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சார்ள்ஸ் அன்ரனி படைப் பிரிவின் உறுப்பினரான எழிலன் என்ற நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

போர் நடைபெற்ற போது இராணுவத்திடம் சரணடைந்த எழிலன், கொஸ்கொட பிரதேசத்தில் இயங்கும் பாதாள உலக குழுவின் துப்பாக்கிதாரியாக செயற்பட்டு வந்து

24ஆம் பக்கம் பார்க்க....

## கோத்தா நேற்று ஆஜராகவில்லை

(கொழும்பு)

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ நேற்றைய தினம் பாரிய நிதி மோசடிகள் மற்றும் அதிகார துஷ்பிரயோகம் தொடர்பிலான ஜனாதிபதி ஆணைக் குழுவில் ஆஜராகவில்லை.

அமெரிக்காவிற்கு பயணம் செய்துள்ள காரணத்தினால் கோத்தபாய ராஜபக்ஷ நேற்றைய விசாரணை

24ஆம் பக்கம் பார்க்க....

## சிறுநீரக வர்த்தகம் இந்தியர் தப்பிப்பு

(கொழும்பு)

சட்டவிரோத சிறுநீரக உறுப்பு மாற்று வர்த்தகத்துடன் தொடர்புடைய ஒரு இந்தியர் தப்பித்து விட்டதாக நீதிமன்றில் அறிவிக்கப்பட்டுள்ளது.

குற்ற விசாரணைப் பிரிவினர் இது குறித்து கொழும்பு நீதிமன்றில் அறிவித்துள்ளனர்.

சம்பவத்துடன் தொடர்புடைய

23ஆம் பக்கம் பார்க்க....

### விக்னேஸ்வரனுக்கு உடல்நலக்குறைவு

## ஜனாதிபதி-பிரதமர்-முதலமைச்சர் சந்திப்பு பிற்போடப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி, பிரதமர், வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் ஆகியோருக்கிடையில் நடைபெறவிருந்த சந்திப்பு பிற்போடப்பட்டுள்ளது. முதலமைச்சருக்கு ஏற்பட்ட திடீர் சுகவீனம் காரணமாகவே நேற்று 18ஆம் திகதி திங்கட்கிழமை இடம்பெறவிருந்த மேற்படி சந்திப்பு இடம்பெறவில்லை.

வடக்கில் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்படும் காணி அபகரிப்பு மற்றும் காணிப் பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடுவதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன,

24ஆம் பக்கம் பார்க்க....

## புதிய பொலிஸ்மா அதிபராக பூஜிதவின் பெயர் பரிந்துரை

(கொழும்பு)

நாட்டின் புதிய பொலிஸ் மா அதிபர் பதவிக்கு முன்னாள் மூத்த துணைப் பொலிஸ் மா அதிபர் பூஜித ஜயசுந்தரவின் பெயர் அரசியலமைப்பு பேரவையினால் பரிந்துரை செயயப்பட்டுள்ளது.

இந்தப் பரிந்துரை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு அனுப்பப்பட்டுள்ளது.



24ஆம் பக்கம் பார்க்க....

# 194 குடும்பங்களுக்கு காணி உரிமைப் பத்திரம்

சிதம்பரபுரம் இடம்பெயர்ந்தோர் நலன்புரி முகாமில் தற்காலிகமாக வாழ்ந்து வரும் 194 குடும்பங்களுக்கு இன்று செவ்வாய்க்கிழமை தற்காலிக காணி உரிமைப் பத்திரங்கள் கையளிக்கப்படவுள்ளன.

இதன்படி, இந்த நலன்புரி முகாமில் வாழ்ந்து வரும் ஒவ்வொரு குடும்பத்துக்கும் 16 ஆயிரத்து 500 சதுர அடி காணிகள் வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் இடம்பெயர்ந்த மக்கள் தங்கியிருந்த காணிகளின் உரிமை அவர்களுக்கே வழங்கப்படுவது இதுவே முதல் முறையாகும்.

இந்தப் பகுதி மக்களுக்கான அடிப்படைத் தேவைகளை நிறைவேற்ற வடமாகாண சபை 13.5 மில்லியன் ரூபாயை வவுனியா பிரதேச செயலகத்துக்கு வழங்கியுள்ளது.

வவுனியாவில் இருந்து 20 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள சிதம்பரபுரம் நலன்புரி முகாம் கடந்த முப்பது ஆண்டுகளாக இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (செ-12)

# நாடு திரும்பியவரிடம் விசாரணை

(யாழ்ப்பாணம்)


மலேசியாவில் இருந்து இலங்கைக்கு திரும்பிய மன்னார் பகுதியை சேர்ந்தநபர் ஒருவர் நேற்றையதினம் பயங்கரவாத தடுப்புப் பிரிவினரால் அழைக்கப்பட்டு கொழும்பு 2 ஆம் மாடியில் வைத்து விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

குறித்த நபர் மலேசியாவில் இரண்டரை வருடங்களாக பணியாற்றி வந்துள்ளார். இவர் கடந்த 16 ஆம் திகதி மலேசியாவில் இருந்து இலங்கைக் திரும்பிய நிலையில் இவர் விமான நிலையத்தில் வைத்து விசாரணை செய்யப்பட்ட பின்னர் நேற்றைய தினம் கொழும்பில் உள்ள பயங்கரவாத தடுப்பு பிரிவினரின் விசாரணைக்காக 2 ஆம் மாடிக்கு அழைக்கப்பட்டிருந்தார்.

அந்த வகையில் நேற்றையதினம் 5 மணித்தியாலங்கள் விசாரணை மேற்கொள்ளப்பட்ட பின்னர் அவர் மீண்டும் வீட்டிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை இவ்வாறான விசாரணைகள், கைதுகள் வடக்கில் உள்ளவர்கள் மீது நாளுக்கு நாள் தொடர்சியாக அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (செ-9)

# சாரதிகள் 1710 பேர் கைது!



(கொழும்பு)

சித்திரை புத்தாண்டு காலப்பகுதியில் மது போதையில் வாகனம் செலுத்தும் சாரதிகளை கைது செய்வதற்காக கடந்த 10 ஆம் திகதி முதல் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட செயற்திட்டத்தில் நேற்று அதிகாலை வரை ஆயிரத்து 710 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் காலை முதல் நேற்றுக் காலை வரை நிறைவடைந்த கட ந்த 24 மணித்தியாலத்தில் மட்டும் 164 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 10 ஆம் திகதியிலிருந்து நேற்று வரை கைது செய்யப்பட்டவர்களில் மோட்டார சைக்கிள் ஓட்டுநர்கள் 924 பேர் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-12)

---

மானம்பராயானைத் தொழ தானாய் வினைகள் அறும்

## வயாவிளான் மானம்பராய் பிள்ளையார் ஆலய தீர்த்தவாரித் திருநாள் வழிபாடு

எமது ஆலய தீர்த்தவாரித் திருநாள் 21.04. 2016 வியாழக்கிழமை நடைபெற இருப்பதால் அத்தருணம் சகல அடியவர்களும் சென்று வழிபடும் வாய்ப்புகிட்டி உள்ளது.

சித்திரைக்கஞ்சி ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பங்கு பற்றும் அடியவர்கள் அன்று காலை 8.30 மணியளவில் வயாவிளான் மத்திய கல்லூரியில் சந்திக்கும் வண்ணம் அழைக்கின்றோம்.

**தொடர்பு : 077 507 8025**
**077 780 2466**

(4239) **ஆலய பரிபாலன சபையினர்**

---

## கண்ணீர் அஞ்சலி

### திருமதி சரஸ்வதி சரவணபவான்



எமது கல்லூரி ஆசிரியர்களான திருமதி **நித்தியகலா குணராஜா**, திருமதி **கோமதி கனகலிங்கம்** ஆகியோரின் அன்புத் தாயாரான திருமதி சரஸ்வதி சரவணபவான் அவர்கள் 16.04.2016 அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் கழகம், அச்சுவேலி மத்திய கல்லூரி.

---

## கேள்வி அறிவித்தல்

### செயற்திட்ட அலுவலகம் வாடகைக்கு பெற்றுக்கொள்ளல்
### புள்ளிவிபரக்கிளை, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.

தற்காலிகமாக செயற்திட்ட அலுவலகம் ஒன்றை மே 01 தொடக்கம் யூலை 31 வரையான மூன்று மாத காலப்பகுதிக்கு வாடகைக்கு பெற்றுக்கொள்வதற்காக வழங்குநர்களிடமிருந்து கேள்வி கோரப்படுகின்றன.

**தற்காலிகமாக வாடகைக்கு பெற்றுக்கொள்ளும் செயற்திட்ட அலுவலகத்தில் காணப்படவேண்டிய வசதிகள்**

- உத்தியோகத்தர்கள் எண்மர்(8) கூடி அலுவலக நடவடிக்கைகளை மேற்கொள்ளக்கூடிய மேசை ஒன்றும் மற்றும் 6 கதிரைகளை கொண்ட விறாந்தை, தேவைப்படுமிடத்து சாப்பாடு மற்றும் தேநீர் பருகக்கூடிய வசதியுடைய சாப்பாட்டறை.
- சுத்தமான குடிநீரை தடையின்றி பெற்றுக்கொள்ளக்கூடிய வசதி இருத்தல்.
- 6 கணனிகள் வேலை செய்யக்கூடிய மின்சார இணைப்பு வசதிகள்.
- போதியளவு நீர் வசதி மற்றும் இரண்டு பாதுகாப்பான குளியலறை மற்றும் இரு மலசலகூட வசதிகள்.
- அளவீட்டு குழுவினருக்கான வாகனத்திற்கான பொருத்தமான தரிப்பிடம்.
- தொலைத்தொடர்பு சமிஞ்ஞைகள் சிறந்த முறையில் உள்ள இடமாக கட்டடம் அமைந்திருத்தல் வேண்டும்.
- குறித்த காலத்திற்கான மின்சாரக்கட்டணம் மற்றும் நீர்க்கட்டணம் போன்றவை வீட்டு உரிமையாளரினால் செலுத்தப்படல் வேண்டும்.
- குறைந்தது நான்கு மெத்தை கட்டில்கள் கொண்ட நான்கு அறைகள் இருத்தல் வேண்டும்.

ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கேள்வி படிவங்களை **19.04.2016-ம** திகதியிலிருந்து **25.04.2016-ம** திகதி வரை அலுவலக நாட்களில் காலை 9.00மணி முதல் மாலை 4.00வரை யாழ்ப்பாண மாவட்டச் செயலக புள்ளிவிபரக்கிளையில் பெற்றுக்கொள்ளலாம்.

முறையாக பூர்த்திசெய்யப்பட்ட கேள்விகளை, கடிதஉறையின் இடதுபக்க மேல் மூலையில் **"செயற்திட்ட அலுவலகம் வாடகைக்கு பெற்றுக்கொள்ளல"** எனகுறிப்பிட்டு **26.04.2016-ம** திகதி பி.ப 3.00 மணிக்கு முன்னர் நேரடியாக **மாவட்ட புள்ளிவிபரவியலாளர், புள்ளிவிபரக்கிளை, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்** எனும் முகவரியில் சமர்ப்பிக்கவும். அதன்பின்னர் சமர்ப்பிக்கப்படும் எந்தவொரு கேள்விகளும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. கேள்வியானது கேள்விநேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர்கள் அல்லது அவர்களால் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் நிர்வாக உத்தியோகத்தர் அலுவலகத்தில் திறக்கப்படும். பெறுகைக் குழுவின் முடிவே இறுதியானது.

மேலதிக தகவல்களுக்கு மாவட்ட புள்ளிவிபரவியலாளருடன் தொடர்பு கொள்ளவும்.

**தொலைபேசி இலக்கம் : 021 222 3330 / 077 764 2379**

நா.வேதநாயகன்,
அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலாளர்,
யாழ்ப்பாண மாவட்டம்.

**18.04.2016** (சி-4373)

---

## 8-ம் நாள் நினைவஞ்சலி



அமரர்

### விசுவலிங்கம் செல்லம்மா

கடந்த 15.04.2016 அன்று சிவபதமடைந்த அமரர் விசுவலிங்கம் செல்லம்மா அவர்களின் 8-ம் நாள் நிகழ்வு இன்று (19.04.2016) செவ்வாய்க்கிழமை காலை பால் தெளிப்பு நிகழ்விலும், இரவு போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள்அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.


**தகவல் : லோஜிதன்**
**(நியூ வெஸ்டன் ஜுவலர்ஸ்)**
(போதுச்சச்தை முன்பாக முல்லை)

கடந்த 17.04.2016 அன்று மரண அறிவித்தலில் தவறுதலாக வெஸ்டன் யூனியன் என வெளிவந்ததாக விளம்பரதாரர் தெரிவித்தார். அதனை திருத்தி வாசிக்கவும்.

(சி-4378)

---

## கண்ணீர் அஞ்சலி



மன்னார் மடு பிரதேச செயலக சமூக சேவைகள் உத்தியோகத்தர் திரு.**செ.செபதாசன்** அவர்களின் அன்புத் தந்தையார்

### மனுவேல் செபரத்தினம்

*(செபவாசா –விடத்தல்தீவு, மன்னார்)*

18.04.2016 திங்கட்கிழமையன்று காலமானார் அன்னாரின் பிரிவுத் துயரில் நாமும் பங்கு கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

சமூக சேவைகள் உத்தியோகத்தர்
சங்கம் வட மாகாணம்

(சி-4375)

# மக்களுக்கு சுமையாக அமையும் எந்தவொரு வரி விதிப்பையும் மேற்கொள்ளப்போவதில்லை

## ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு



(கொழும்பு)

**சாதாரண பொது மக்களுக்கு சுமையாக அமையும் எந்தவொரு வரி விதிப்பும் மேற்கொள்ளப்பட மாட்டாதென ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.**

வற்வரி திருத்தத்திற்கு அரசு தயாராவதாக அண்மையில் ஒருசில ஊடகங்கள் பல்வேறு அறிக்கைகளை வெளியிட்டதாக தெரிவித்த ஜனாதிபதி நாட்டின் ஏழை பொதுமக்களுக்கு இன்னல் தரும் எந்தவிதமான வரி அதிகரிப்பிற்கும் தான் இடமளிக்கப் போவதில்லையெனத் தெரிவித்தார்.

அவ்வாறான யோசனைகளை முன்வைக்கும் பொருளியல் நிபுணர்கள் இருப்பார்களாயின் அவர்களை வீட்டுக்கு அனுப்புவதை விடுத்து நாட்டின் பொருளாதார வேலைத்திட்டத்திற்கு அவர்களின் கருத்துக்களை பெற்றுக்கொள்வதற்கு தான் தயார் இல்லை என ஜனாதிபதி தெரிவித்தார்.

மலர்ந்த தமிழ், சிங்கள புதுவருடத்திற்காக புலத்திசிபுர மக்களுக்கு வாழ்த்து தெரிவிப்பதற்கு நேற்று முறபகல் பொலநறுவை புத்தி மண்டபத்தில் இடம்பெற்ற வைபவத்தில் உரையாற்றிய போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

பொதுமக்களின் அரசாங்கம் என்ற ரீதியில் பொது மககளுக்கு கூடுதலான பொருளாதார நன்மைகளை வழங்கி அவர்களுக்கு நிவாரணம் வழங்குவது தற்போதைய அரசின் கொள்கையாகுமென ஜனாதிபதி இதன் போது குறிப்பிட்டார்.

இங்கு தொடர்ந்து கருத்து தெரிவித்த ஜனாதிபதி மக்கள் நேய அரசாங்கம் என்ற வகையில் முன்னோக்கி பயணித்த அரசு தொடர்ந்தும் முன்னோக்கிப் பயணிக்குமே தவிர பின்னோக்கி பயணம் செய்யாதென் தெரிவித்தார்.

2015 ஜனவரி 8ஆம் திகதி இந்த நாட்டில் இடம்பெற்ற மாற்றத்தைத் தொடர்ந்து ஊழல், மோசடி, திருட்டு, சர்வாதிகாரம் போன்றே குடும்ப ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டு மக்கள் நேய அரசாங்கம் கட்டியெழுப்பப்பட்டதை நினைவுகூர்ந்த ஜனாதிபதி ஊழல், மோசடி, சண்டித்தனம், சர்வாதிகாரம் மற்றும் குடும்ப ஆட்சி என்பன காரணமாக நாட்டை அழிவுப்பாதையில் இட்டுச் சென்ற சக்திகள் மீண்டும் ஆட்சி செய்வதற்கு இடமளிக்காது. நாட்டு மக்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்றுவதற்கு உயர்ந்தபட்ச அர்ப்பணிப்பினை மேற்கொள்வதாக மலர்ந்த இப்புத்தாண்டில் தீர்க்கமாகதான் இவற்றைத் தெரிவிப்பதாக ஜனாதிபதி தெரிவித்தார்.

இந்த நாட்டை சிறந்த மற்றும் அபிவிருத்தி அடைந்த ஒரு நாடாக முன்னேற்றுவதற்கு புதிய அரசு அர்ப்பணிப்புடன் செயற்படும். இவ்வேளையில், தோல்வியடைந்த ஒரு சில அரசியல் சக்திகள் இன்னோரன்ன போலி முகங்களுடன் களத்தில் குதிப்பதாகவும் இப்போலி முகங்களை தன்னால் தெளிவாக இனங்காண முடிவதுடன் அரசியல் மனநோயாளர்களின் கூற்றுக்கள் மற்றும் பொய்ப் பிரசாரங்கள் அரசின் பயணத்திற்கு தடையாக அமையாதெனவும் ஜனாதிபதி தெரிவித்தார். (இ-5)

## இலங்கைக்கு கடன் வழங்க

# 5அம்ச கோரிக்கை விடுத்த சர்வதேச நாணய நிதியம்

சர்வதேச நாணய நிதிய (IMF)த்திடம் இலங்கை கோரியிருந்த 1.2 பில்லியன் டொலர் கடன் தொடர்பில் பேச்சுவார்த்தை ஒன்றை முன்னெடுப்பதற்காக அண்மையில் சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் இலங்கைக்கு வருகை தந்திருந்தனர்.

இதன்போது, இலங்கை, சர்வதேச நாணய நிதிய அதிகாரிகளிடம் 3 பில்லியன் டொலரினை கடனாக அதிகரித்து வழங்குமாறு அரசு கோருவதாக முன்னிலை சோசலிசக் கட்சியின் அரசியல் துறைப் பொறுப்பாளர் புபுது ஜாகொட தெரிவித்தார்.

நேற்று கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

குறித்த கடன் தொகையினை வழங்க சர்வதேச நாணய நிதியத்தால் 5 அம்சக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக் காட்டினார்.

1. உள்நாட்டு வருமானத்தை தற்போதைய நிலையில் பேணுதல்

2.வரி அறவிடலில் மாற்றத்தைக் கொண்டு வருதல்

3.வற்வரி அறவிட்ட துறைகளை அதிகரிக்க வேண்டும்

4.பொருளாதார திட்டங்களை சரிவர நடைமுறைப் படுத்த வேண்டும்

5.வழங்கப்படும் கடன்களை உரிய முறையில் மீள வழங்க உரிய வகைகளை பேண வேண்டும் என்பனவே அக் கோரிக்கைகளாகும்.

மேலும், கருத்து தெரிவித்த புபுது ஜாகொட வரவு செலவு திட்டத்தில் வருமானத்தின் ஸ்திரத்தன்மையை பேணுவதற்காக மக்களுக்கான சலுகைகள் குறைக்கப்பட்டுள்ளதாகவும், இதற்காக கல்வி, போக்குவரத்து, விவசாயம், நெடுஞ்சாலை, சுகாதாரம் போன்ற அமைச்சுகளின் செலவீனங்கள் குறைக்கப்பட்டுள்ளதாகவும் இதன் மூலம் மக்களுக்கே பாதிப்பு எனவும் தெரிவித்தார்.

அரசு, தான் அளித்த வாக்குறுதிகளை மறந்து செயற்படுவதாகவும், ஆட்சிக்கு வரும போது நாட்டுக்கு வருமானம் கிடைக்கும் வழிமுறைகளை செய்வோம் என கூறியிருந்தது. ஆனால் இப்போது அவற்றை மறந்து தன்னிச்சையாக செயற்படுவதாகவும் புபுது ஜாகொட குற்றம் சுமத்தியுள்ளார்.

மாளிகை வரி, கோடீஸ் வரர் வரி என்பவற்றை அதிகரித்து நாட்டின் பொருளாதார ஸ்திரத்தன்மையினை பேணுவோம் என கூறியிருந்தது.

ஆனால், இன்று அவற்றை நீக்குவதாகவும் மக்கள் மீதான பாரிய வரிச் சுமைகளை அதிகரிக்கும் அரசாங்கமாக இவ் அரசாங்கம் மாறுவதாகவும் முன்னிலை சோசலிசக் கட்சியின் அரசியல் துறைப் பொறுப்பாளர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# அனல் பறக்கும் வெப்பம் மே மாதமும் தொடரும்!

(கொழும்பு)

இலங்கை மக்கள் எதிர்வரும் மே மாதத்திலும் அதிகளவு வெப்பத்துடன் கூடிய காலநிலையை அனுபவிக்க நேரிடும் என இலங்கை வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மே மாதம் இறுதி வரையில் காற்று வீசக்கூடிய சாத்தியங்கள் கிடையாது எனவும் தற்போதைய நிலைமையை விடவும் எதிர்வரும் மாதத்தில் வெப்பநிலை அதிகரிக்கும் எனவும் அறிவித்துள்ளது.

பிற்பகலில் அல்லது மாலை நேரங்களில் இடியுடன் கூடிய மழை பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (இ-5)

# தெற்கு அதிவேக பாதையின் 3 நாள் வருமானம் 3 கோடி

(கொழும்பு)

புத்தாண்டு தினங்களில் (13,14,15) தெற்கு அதிவேக பாதையினால் கிடைக்கப் பெற்ற வருமானம் 3 கோடி ரூபாவையும் தாண்டியுள்ளதாக அதிவேகப் பாதையின் முகாமைத்துவப் பணிப்பாளர் சமன் ஓபநாயக்க தெரிவித்துள்ளார்.

இந்த மூன்று தினங்களிலும் தெற்கு அதிவேக பாதையில் 5 இலட்சத்து 50 ஆயிரத்துக்கும் அதிகமான வாகனங்கள் பயணித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ஏப்ரல் 15 ஆம் திகதி மாத்திரம் ஒரு கோடியே 76 இலட்சம் ரூபா வருமானம் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# கூட்டு எதிரணியின் மேதினக் கூட்டத்தில் பங்கேற்றால் ஒழுக்காற்று நடவடிக்கை

## மகிந்தவை எச்சரிக்கிறார் எஸ்.பி.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் பொது எதிரணியின் மேதினக்கூட்டத்தில் பங்கேற்றால் அவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என அக்கட்சியின் பொருளாளரும் அமைசசருமான எஸ்.பி திஸாநாயக்க எச்சரித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி சார்பில் மே தினக்கூட்டமும் பேரணியும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் காலியில் இடம்பெறவுள்ள நிலையில் பொது எதிரணியின் கூட்டத்தில் பங்குபற்றும் அக்கட்சி உறுப்பினர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் மே தினக்கூட்டத்திற்கு அழைப்புவிடுக்கப்படவில்லை எனவும் பொது எதிரணியின் கூட்டத்தில் பங்கேற்கவுள்ளதாகவும் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்திருந்தார். மே தினக்கூட்டம் தொடர்பில் மத்திய செயற்குழுவே முடிவு எடுத்தது என தெரிவித்த எஸ்.பி. திஸாநாயக்க, கட்சி உறுப்பினர்களுக்கு அழைப்பு விடுத்து தான் பங்கேற்க வைக்கவேண்டிய அவசியமில்லை. கட்சி மீது பற்றுள்ளவர்கள் கட்டாயம் வருவார்கள். முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவிற்கு கூட அழைப்பு விடுக்கப்படவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# சீனாவுக்கு தன்னுடன் அழைத்துச்சென்று சஜித்தை சமாதானப்படுத்தினார் ரணில்

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, வீடமைப்பு அமைச்சர் சஜித் பிரேமதாசவை எதற்காக சீனாவிற்கு அழைத்து சென்றார் என்பது பற்றிய தகவல்கள் வெளியாகியுள்ளன.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தனது சீனாவுக்கான விஜயத்தில் அமைச்சர் சஜித் பிரேமதாசவின் மனக்காயங்களை ஆற்றும் வகையில் நடந்து கொண்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சியின் அண்மைய செயற்குழுக் கூட்டத்தின் போது கட்சியில் புதிதாக உருவாக்கப்பட்டிருந்த பல பதவிகள் இரத்துச் செய்யப்பட்டிருந்தன.

கட்சியில் பலரிடம் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்த அதிகாரங்கள் மீண்டும் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிடமே வழங்கப்பட்டுள்ளன.

இதன் காரணமாக கட்சியின் துணைத் தலைவர் அந்தஸ்தில் இருந்த அமைச்சர் சஜித் பிரேமதாச கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளார்.

கட்சியில் அவருக்கு இருந்த பதவி பறிபோயுள்ளதுடன், புதிதாக அவருக்கு எந்தவித பொறுப்புகளும் வழங்கப்பட்டிருக்கவில்லை.

இந்நிலையில் சீனாவுக்கான தனது விஜயத்தின் போது அமைச்சர் சஜித்தையும் உடன் அழைத்துச் சென்றிருந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அங்கு வைத்து சீன அரசாங்கத்தின் முக்கியஸ்தர்களிடம் சஜித்தை சிறப்பான முறையில் அறிமுகப்படுத்தியுள்ளார். தனது அரசாங்கத்தின் முக்கிய அமைச்சர் என்று அவர் சஜித் பிரேமதாசவை குறிப்பிட்டுள்ளார்.

இதன் காரணமாக கட்சிப் பதவியும் அதிகாரமும் பறிபோன கவலையில் இருந்த சஜித் பிரேமதாசவின் மனக்காயம்வெகுவாக ஆறியுள்ளது.

அத்துடன் முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசவே தன்னை முதன்முதலாக சீனாவுக்கு அழைத்து வந்ததாக குறிப்பிட்டு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நன்றியறிதலை தெரிவித்த போது சஜித் பிரேமதாசவின் மனக்காயம் முற்றாகவே ஆறிப் போனதாக சிங்கள ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது. (இ-5)

# வோர்னர் அதிரடியில் மும்பையை வீழ்த்தி சன்ரைசர்ஸ் அபார வெற்றி



வோர்னரின் அதிரடியான. ஆட்டம் மூலம மும்பை இந்தியன்ஸ் அணிக்கு எதிரான போட்டியில் சன்ரைசர்ஸ் அணி 7 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

முன்னதாக நாணயச் சுழற்சியில் வென்ற சன்ரைசர்ஸ் அணி முதலில் பந்து வீசசை தேர்வு செய்தது.

இதனையடுத்து களமிறங்கிய மும்பை இந்தியன்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 142 ஓட்டங்கள் எடுத்தது.

துடுப்பாட்டத்தில் ராயுடு 54 ஓட்டத்தினையும் பாண்டியா ஆட்டமிழக்காமல் 49 ஓட்டத்தினையும் பெற்றனர். சரன் 3 விக்கெட்டினை கைப்பற்றினார்.

இதனையடுத்து 143 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய சன்ரைசர்ஸ் அணி 17.3 ஓவரில் 3 விக்கெட்டுகளை இழந்து வெற்றி பெற்றது.

துடுப்பாட்டத்தில் அதிரடியாக கலக்கிய சன்ரைசர்ஸ் அணித் தலைவர் வோர்னர் ஆட்டமிழக்காமல் 90 ஓட்டத்தினை பெற்று ஆட்டநாயகன் விருதினைத் தட்டிச் சென்றார்.

இன்று செவ்வாய்க்கிழமை மொகாலியில் இரவு 8 மணிக்கு நடைபெறும் போட்டியில் கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணியை எதிர்த்து கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி மோதவுள்ளது (கு)


## INVITATION FOR BID (IFB)
## ZONAL EDUCATION OFFICE - THUNUKKAI

**01.** The Chairman, **Regional Procurement Committee** on **behalf of the Zonal Education Office, Thunukkai** now invites sealed bids from eligible and qualified bidders for the Construction works listed in the table below.

**02.** To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered in the field of building construction for the Grade mentioned in the table below with the Institute for Construction Training and Development (ICTAD).

**03.** Qualifications requirements are indicated in Section 4 of the Bidding document. Additional details are provided in the Schedule (Section 5).

**04.** Interested bidders may obtain further information from the addresses given below in paragraph 6 for respectively and inspect the bidding documents at the same place on any working days from 9.00 hrs to 16.00 hrs

**05.** A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the below mentioned address **from 12-April-2016** until **04-May-2016** from 9.00 hrs to 15.00 hrs on working days upon payment of a non – refundable fees of Rs. 2,500.00. The method of payment should be by cash.

School Works Branch, Zonal Education Office, **Thunukkai** (T.No: **0212060031**, Fax: **0212260030**)

**06.** Bids (original & Duplicate) shall be delivered or sent by registered post to the **Chairman, Regional Procurement Committee, Zonal Education Office, Thunukkai on or before 13.00 hrs on 05-May-2016** Late Bids will be rejected. Bidders must write Bid ID on left hand upper corner of envelop for each. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.

**07.** Pre bid meeting will be held at the **Zonal Education Office, Thunukkai on 22-April-2016 at 10.00 hrs**

**08.** Bid shall be valid up to **20-July-2016.**

**09.** Bids shall be accompanied by a Bid Security as per the information given in the table.

**10.** Each package will be evaluated separately and accordingly substantially responsive lowest evaluated bidder will be selected for award.

| Bid No | Description of Work | Estimated Cost (Rs. In Millions) | Contract Period (Days) | Required Grade | Required Bid Security | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | Security Amount | Valid Till |
| PSDG/NP/TU/SW/2016/01 | Repairs of 120'x25' Class room Building at Mu/Thirumurukandy H.V | 4.25 | 90 | C8 or above (Buildings) | 45,000.00 | 17.08.2016 |
| PSDG/NP/TU/SW/2016/02 | Construction of 40'x20' Teachers Quarters Building at Mu/Naddankandal GTMS | 4.85 | 90 | C8 or above (Buildings) | 50,000.00 | 17.08.2016 |
| PSDG/NP/TU/SW/2016/03 | Construction of 60'x25' Teachers Quarters Building at Mu/Thunukkai GTMS | 4.64 | 90 | C8 or above (Buildings) | 50,000.00 | 17.08.2016 |

**The Chairman,**
**Regional Procurement Committee,**
**Zonal Education Office,**
**Thunukkai.**

(சி-4372)


## 500 கோல் அடித்து மெஸ்ஸி புதிய சாதனை




லா லீகா தொடரில் வெலென்சியா அணிக்கு எதிரான ஆட்டத்தில் தனது 500வது கோலை அடித்து பார்சிலோனாவின் மெஸ்ஸி சாதனை படைத்துள்ளார்.

லா லீகா தொடரில் ஸ்பெயினின் பார்சிலோனாவின் நடைபெற்ற ஆட்டத்தில் வெலென்சியா மற்றும் பார்சிலோனா எப்.சி. அணிகள் மோதின.

இதில் 1-2 என்ற கோல் கணக்கில் வெலென்சியா அணியிடம் பார்சிலோனியா தோல்வியடைந்தது.

எனினும் இந்த ஆட்டத்தில் பார்சிலோனாவின் மெஸ்ஸி அடித்த கோல் சர்வதேச ஆட்டத்தில் அவரது 500வது கோலாக பதிவானது.

இதுவரை 632 போட்டிகளில் விளையாடி இந்த சாதனையை மெஸ்ஸி படைத்துள்ளார்.

இதுவரை அடித்துள்ள கோல்களில் 80 சதவீதம் அதாவது 406 கோல்களை இடது கால் மூலமாகவே மெஸ்ஸி அடித்துள்ளார்.

71 கோல்களை வலது கால்மூலமாகவும். 21 கோல்கள்ளை தலையை முட்டியும் அவர் அடித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (கு)

## ஐபிஎல் போட்டியில் மலிங்க விலகல்



ஐபிஎல் கிரிக்கெட்டில் மும்பை இந்தியன்ஸ் அணியில் இருந்து மலிங்க விலகியுள்ளார்.

நடந்துவரும் ஐபிஎல் போட்டியில் இலங்கை வீரர் மலிங்க, மும்பை இந்தியன்ஸ் அணியில் இடம்பெற்றிருந்தார்.

இந்நிலையில், மலிங்கவின் உடலில் ஏற்பட்டுள்ள காயத்தன்மை காரணமாக. இந்த போட்டியில் விளையாடுவதற்கான உடல்தகுதி அவருக்கு இல்லை என மருத்துவ நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

இதில் அவரது காயம் குணமடைய குறைந்தது 4 மாதங்கள் வரை ஆகும் என்று தெரிவித்துள்ளனர்.

இதன் காரணமாக மலிங்க, ஐபிஎல். தொடரில் இருந்து விலகினார். உடனடியாக தாயகம் திரும்பிய அவருக்கு இலங்கை கிரிக்கெட் வாரிய மருத்துவர்கள் நாளை பரிசோதனை செய்ய இருக்கிறார்கள். (கு)

## இன்றைய போட்டிகள்

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகம் நடத்தும் யாழ்.மாவட்ட ரீதியிலான உதைபந்தாட்டப் போட்டியில் இன்று செவ்வாய்க்கிழமை திக்கம் யூத் விளையாட்டுக்கழக மைதானத்தில் பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கொலின்ஸ் விளையாட்டுக் கழகமும், மாலை 4.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் நியூட்டன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ஆதிசக்தி விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளது. (கு)

# ஜனாதிபதியின் 7G பயணம் நாட்டிற்கு வரப்பிரசாதமே

## மகிந்த சமரசிங்க தெரிவிப்பு



ஜனாதிபதியின் 7G பயணமானது நாட்டிற்கு பெரும் வரப்பிரசாதமென அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்தார்.

நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், ஏழு நாடுகளின் தலைவர்கள் கலந்துகொள்ளும் குறித்த மாநாட்டிற்கு ஜனாதிபதிக்கு ஜப்பான் அழைப்பு விடுத்துள்ளது.

யுத்தத்திற்கு பின்னர் நாடு, கடந்து வந்த பாதை மற்றும் எதிர்கால முன்னெடுப்புகள் தொடர்பில் இதன்போது அங்கு கருத்து தெரிவிக்க சந்தர்ப்பம் கிடைத்துள்ளதாக அமைச்சர் தெரிவிததார்.

மேலும், பொருளாதார ரீதியில் பாரிய முன்னேற்றத்தை இதன்போது எதிர்பார்க்கலாம் என சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, கடந்த வெளிநாட்டு சந்திப்புக்களை ஜனாதிபதி நாட்டிற்கு சாதகமாக பயன்படுத்தியதை போன்று இதுவும் சிறந்த காலமாக அமையும் என அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்தார்.

குறிப்பாக மனித உரிமை ரீதியில் அறிக்கை வெளியிட்ட தலைவர்கள் முன்னிலையில் ஜனாதிபதி உரையாற்ற உள்ளமை எதிர்பார்க்கப்படும் சந்தர்ப்பமாக அமையும் என அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்தார். (இ-5)

# ஹிருணிகா மீதான வழக்கு விசாரணை ஒத்திவைப்பு!



(கொழும்பு)

நபர் ஒருவரை கடத்தியமை தொடர்பில் குற்றஞ்சுமத்தப்பட்டுள்ள ஹிருணிகாவின் எம்.பி.வழக்கு மீதான விசாரணை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 26ஆம் திகதி நடைபெறும் என நீதிமன்றம் அறிவித்துள்ளது.

அத்துடன், இந்த வழக்கின் முன்னேற்றமான விசாரணை அறிக்கையை நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறு நீதிமன்றத்தினால் பொலிஸாருக்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்த வழக்கு விசாரணையில் குற்றஞ்சுமத்தப்பட்டுள்ள ஹிரு ணிகா உள்ளிட்ட 8 பேருக்கு எதிரான வழக்கிற்காக சட்டமா அதிபரின் அறிவுறுத்தல் பெறுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் நீதிமன்றில் தெரிவித்துள்ளனர்.

மேலும், குறித்த வழக்கு விசாரணை நீதிமன்றில் இடம்பெற்ற வேளை ஹிருணிகா உள்ளிட்ட சந்தேக நபர்கள் நேற்று நீதிமன்றில் ஆஜராகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன், நீதிபதியின் அறிவுறுத்தலுக்குப் பின்னர் மேலதிக விசாரணை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என பொலிஸார் நேற்று நீதிமன்றில் தெரிவித்திருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

# தலையணைச் சண்டையால் நொண்டுகிறார் எம்.பி.

தமிழ்–சிங்கள புதுவருட தினத்தன்று பாராளுமன்றத்திற்கு முன்பாகவுள்ள விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற போட்டியில் தலையணைச் சண்டையின் போது பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் விழுந்ததினால் காயமடைந்துள்ளார். வேறுபாடுகளை ஒருபுறம் வைத்துவிட்டு புதுவருடத்தை கொண்டாடுவதற்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் முன்வந்தனர்.

பாராளுமன்ற ஊழியர்களால் ஒழுங்கு செய்யப்பட்ட இந்த நிகழ்வில் பேராசிரியர் யு.மாரசிங்க மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரும் தலையணைச் சண்டை யில் பங்குபற்றினர்.

தாக்குதலில்நிலைகுலைந்தஎம்பிதடுமாறிக் கீழே விழுந்தார். இப்பொழுது அவர் நொண்டுகிறாராம். (3)

# பொதுக்கூட்டம்

• வேலணை மேற்குப் பெரியபுலம் மகா கணபதிப் பிள்ளையார் (முடிப்பிள்ளையார்) கோயில் வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 24ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10மணிக்கு ஆலய மணிமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மேலும் இப்பொதுக் கூட்டத்திற்கு பொ. அருணகிரிநாதன் தலைமை தாங்கவுள்ளார். (இ


# 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 16 09 1981

இறப்பு 19 04 2013

**மகாதேவன் சதீஸ்குமார் (லண்டன்)**

அன்பின் அண்ணா அழியாத ஓவியமே
அழைத்து விட்டாரோ ஆண்டவன் தம்முடனே
ஆண்டுகள் மூன்று ஆகியதோ நீங்கள் எமை பிரிந்து
ஆறுதல் சொல்ல சொந்தங்கள் இருந்தும்
உம்மைப்போல் பந்தமொன்று எம்மருகில் இல்லையே
இனிதான உம் புன்சிரிப்பு இயல்பான உங்கள் கதை பேச்சு
இதையெல்லாம் தந்து விட்டு இவ்வுலகை நீக்கி விட்டீர்களே!
உம்முடன் சேர்ந்து உண்டு களித்த உம் நட்புகளை கண்டு
கதறி அழும் தாயின் உள்ளமும்
தவித்து கிடக்கும் தந்தை உள்ளமும்
பரிதவிக்க தனியாய் சென்றீர்களோ !

(4233)

வல்வை வீதி,
தொண்டைமானாறு.

உன் பிரிவால் வாடும்
அப்பா, அம்மா, சகோதரர்கள்,
பெரியப்பா சி.ஜெயக்கொடி



# மீண்டும் ஸ்ரீதேவி வில்லிசைக்குழு



(10.07.2016 வரை)
உங்கள் ஆலய
திருவிழாக்களில்
அழைத்து மகிழுங்கள்

தொடர்பு-வில்லிசை சக்கரவர்த்தி
**கலைமாமணி Dr.S.S.குருஜீ**
T.P:-0757428011, 0767256024
**நந்தாவில் அம்மன் கோவிலடி, கொக்குவில்.**

(3926)


# இராசி பலன்

19.04.2016
(சித்திரை 06, செவ்வாய்க்கிழமை)
சூரிய உதயம் காலை 6.01 மணிக்கு
திரயோதசி முழுவதும்
உத்தரம் பின்னிரவு 2.21 மணிவரை
சுபநேரம் 10.32-12.02 மணிவரை
இராகுகாலம் 3.02-4.32 மணிவரை
பிரதோச விரதம்

**வளவன்**

| | | | |
|---|---|---|---|
| சுக் | சூரி புத | | |
| | கிரகநிலை சந்திராஷ்டமம் அவிட்டம், சதயம் பகல் 6.59 இற்கு கன்-சந் | | |
| | | | குரு ராகு |
| செவ் சனி | | | சந் |

**மீனம்** நீண்ட நாளைய ஆசையொன்று நிறைவேறும் நாள், சொந்த பந்தங்களின் வருகையால் சிந்தை மகிழ்வீர்கள், மனதிற்கினிய தகவல்கள் வந்து சேலாம்.

**மேடம்** தொலைபேசி வழியில் கேட்டும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், மற்றவர்களின் மனநிலையை அறிந்து செயற்படுவீர்கள், தேகநலன் கருதி எடுத்த முயற்சிகள் வெற்றிதரும்.

**இடபம்** மனமகிழ்ச்சியோடு செயற்படுவீர்கள், பிள்ளைகளின் தேவையறிந்து பூர்த்தி செய்வீர்கள், கனவுகள் நனவாக பரம்பொருளை வழிபட வேண்டிய நாள்.

**மிதுனம்** பயணங்களின் போது பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட வெற்றி கிடைக்கலாம், சுப செலவுகள் அதிகரிக்கும் நாள்.

**கும்பம்** நிதானத்துடன் செயற்பட்டு நிம்மதி காண வேண்டிய நாள், குடும்பப் பொறுப்புக்கள் அதிகரிக் கும் நாள், வேலைகளில் தாமங்கள் ஏற்படலாம், மனச் சோர்வான நாள்.

**கடகம்** புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், உடன் பிறப்புக்கள் உங்களின் கருத்துக்களை ஏற்க முன்வருவர், வாக்கு மேன்மையுண்டு, பயணங்களால் பலனுண்டு.

**மகரம்** உங்களின் நிர்வாகத் திறமைக்கு பாராட்டுக்கள் கிடைக்கும், வர வேண்டிய பணவரவுகள் வந்து சேரலாம், வழிபாட்டில் கவனம் செலுத்துவீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**சிம்மம்** புண்ணிய காரியங்களில் ஈடுபாடு காட்டுவீர்கள், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், நாவன்மையால் நல்ல பெயர் எடுப்பீர்கள், வழிபாட்டில் அக்கறை காட்டுவீர்கள்.

**தனுசு** புதிய முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், தொழில் வளர்ச்சி கூடும்.

**விருச்சிகம்** வெளிநாட்டுத் தொடர்புகள் அனுகூலம் தரும், குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும் நாள், புதிய பொருட் சேர்க்கையுண்டு, பெரிய மனிதர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**துலாம்** நடப்பதெல்லாம் நன்மைக்கேயென நினைக்க வேண்டிய நாள், புகழ் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள்.


**கன்னி** விரும்பிய உணவுப் பொருட்களை வாங்கிச் சாப்பிடுவதில் அக்கறை காட்டுவீர்கள், பணத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், தேகநலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

## வில்லூன்றியில் சித்திரா பூரணை

யாழ்ப்பாணம் வில்லூன்றி வீரகத்தி புனித தீர்த்தத்தில் சித்திரா பூரணை நிகழ்வுகள் எதிர்வரும் 21 ஆம் திகதி வியாழக்கிழமை வழமை போல் சிறப்பாக நடைபெறவுள்ளது.

வில்லூன்றி விநாயகராலயத்தில் அதிகாலை விசேட அபிஷேகம், பூசைகளும் காலை 7 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் இடம்பெறும். காலை 8 மணிக்கு வில்லூன்றி புனித தீர்த்தத்தில் தீர்த்தவாரி நடைபெற்றபின் பொதுமக்கள் தீர்த்த சங்கற்பம் செய்து தீர்த்த மாடவும் பிதிர்த் தர்ப்பணங்கள் செய்து கொள்ளவும் விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (இ

# 165 பேருக்கு நிரந்தர நியமனம்



(யாழ்ப்பாணம்)

வடமாகாண இணைந்த சேவை பதவிகளுக்குரிய 165 பேருக்கான நிரந்தர நியமனம் வழங்கும் நிகழ்வு நேற்றையதினம் யாழ்.பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

வடமாகாண பிரதிப் பிரதம செயலாளர் (நிர்வாகம்) சரஸ்வதி மோகனநாதன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வடக்கு மாகாணத்தை சேர்ந்த 97 பேருக்கு முகாமைத்துவ உதவியாளர் பதவிக்கான நிரந்தர நியம ணங்களும் 19 பேருக்கு சாரதி பதவிக்கான நிரந்தர நியமனங்களும் 49 பேருக்கு அலுவலக பணியாளர் பதவிக்கான நிரந்தர நியமனங்களுமாக 165 பேருக்குமான நிரந்தர நியமனங்கள் வழங் கப்பட்டன.

இந்த நிகழ்வுக்கு வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன், வடக்கு மாகாண சபை அவைத் தலைவர் சீ.வீ. கே.சிவஞானம், வடக்கு மாகாண சபை உறுப்பினர் விந்தன் கனகரத்தினம், வடமாகாண பொதுச் சேவை ஆணைக்குழு செயலாளர் ரூபினி வரதலிங்கம், முதலமைச்சர் அமைச்சின் செயலாளர் விஜயலட்சுமி கேதீஸ்வரன், வடக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளர் பற்றிக் நிரஞ்சன், மீன்பிடி அமைச்சின் செயலாளர் சத்தியசீலன் உட்பட பலர் கலந்து கொண்டனர். (இ-9)

## ஆங்கில எழுத்துக்கூட்டல் போட்டிகள் கொக்குவிலில்

பண்டத்தரிப்பு, காலையடி மறுமலர்ச்சி மன்றத்தினால் Spelling Bee Sri Lanka-2016 என்ற தலைப்பில் நடத்தப்படுகின்ற ஆங்கில எழுத்துக்கூட்டல் போட்டியின் முதல் சுற்று போட்டித் தொடரின் இரண்டாவது போட்டி கொக்குவிலில் இடம்பெறவுள்ளது.

தெல்லிப்பழை, ஏழாலை, அளவெட்டி, மல்லாகம் சுன்னாகம், மருதனார்மடம், கோண்டாவில், இணுவில், கொக்குவில், உடுவில், ஆனைக்கோட்டை, மானிப்பாய், யாழ்ப்பாணம், திருநெல்வேலி, நல்லூர் ஆகிய பிரதேசங்களில் வசிக்கும் மாணவர்களுக்கான முதற் சுற்றுப் போட்டி கள எதிர்வரும் 21.22.04.2016 (வியாழன், வெள்ளி) ஆகிய தினங்களில் இல. 62, கே.கே.எஸ். வீதி, கொக்குவில் சந்தி, கொக்குவில் என்ற முகவரியில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையில் இடம்பெறவுள்ளது.

இப் போட்டிக்காக விண்ணப்பித்த மேற் குறிப்பிட்ட பிரதேசங்களைச் சேர்ந்த அனைத்து மாணவர்களினதும் வீட்டு முகவரிகளுக்கு அனுமதி அட்டைகள் அனுபபிவைக்கப்பட்டுள்ளன. அதில் குறிப்பிடப்பட்டுள்ள நேரத்திற்கு வருகைதந்து போட்டியில் கலந்துகொள்ளுமாறு மாணவர்கள் அனைவரும் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

இதுவரை முதலாவது சுற்றுப்போட்டி இடம்பெறாத யாழ்ப்பாணத்தின் ஏனைய பிரதேசங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கான போட்டிகள் எதிர்வரும் நாட்களில் இடம் பெறவுள்ளதுடன், அவர்களுக்கான அனுமதி அட்டைகள் வெகு விரைவில் அனுப்பிவைக்கப்படும்.

மேலதிக தகவல்களுக்கு 071 847 3926, 077 002 7621 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும். www. marumalarchy.org என்ற இணையத் தளத்திலும் அறிவிப்புக்களைப் பார்வையிட முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

## திருமுறை மனனப்போட்டி

வண்ணை-சாந்தையர்மடம் ஸ்ரீகற்பகவிநாயகர்கோவில் சைவசமய அபிவிருத்திக்கழகம் சைவச்சிறார்களின் மனனம் செய்யும் ஆற்றலையும் சைவசமய அறிவை விருத்தி செய்யும் பொருட்டு திருநாவுக்கரசு நாயனார் குருபூசையை முன்னிட்டு திருமுறை மனனப் போட்டியை நடத்தவுள்ளது.

இப்போட்டி தரம் 1, 2 பாலர் பிரிவிலும் தரம் 3, 4 கீழ் பிரிவிலும் நடத்தப்படவுள்ளது.

பாலர் பிரிவிற்கு "மாசில் வீணையும் மாலைமதியமும்" - "சொற்றுணை வேதியன் சோதி வானவன்" ஆகிய இரு திருமுறைகளும்

கீழ் பிரிவிற்கு "கூற்றாயினவாறு விலக்ககலீர்" - "நிலை பெறுமா றெண்ணுதியேல்" ஆகிய இருதிருமுறைகளும்மனனம் செய்யப்படல் வேண்டும்.

திருமுறை மனனப்போட்டி எதிர்வரும் 26 ஆம் திகதி பி.ப.3.30 மணிக்கு யாழ். இந்து ஆரம்ப பாடசாலையில் நடைபெறவுள்ளது. இதற்கான விண்ணப்ப முடிவுத் திகதி எதிர்வரும் 23 ஆம் திகதியாகும்.

பரிசில்கள் எதிர்வரும் மே 2 ஆம் திகதி திருநாவுக்கரசு நாயனார் குருபூசை அன்று வழங்கப்படும்.

மேற்படி திருமுறை மனனப் போட்டியில் பங்குபற்ற விரும்புபவர்கள் சைவசமய அபிவிருத்திக்கழக அறிவகம் இல. 82, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியுடன் பி.ப. 3.30 மணி முதல் 6 மணி வரை தொடர்புகொண்டு மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம் என சைவ சமய அபிவிருத்திக்கழக சமய பிரசாரகரும் பரீட்சைச் செயலருமான சு.சிறிகாந்தன் அறிவித்துள்ளார். (இ

## ஒன்றுகூடல்

மாவட்ட தேசோதய சபையின் மாதாந்த ஒன்றுகூடல் நிகழ்வு நாளை மறுதினம் 21 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9.30 மணிககு சர்வோதய மாவட்ட நிலையத்தில் நடைபெறும்.

இதன்போது சமாதான நீதவான்களுக்கான ஒன்றுகூடலும் மற்றும் சமூகமட்டத்தில் சேவையாற்றியவர்களுக்கு விருது வழங்கலுக்கான விண்ணப்பப்படிவமும் வழங்கப்படவுள்ளது. (இ-5)




## மருத்துவ சபையின் நியாயமற்ற செயலினால் சித்த மருத்துவத்துறைப் பட்டதாரிகள் பாதிப்பு

30.07.2015 ஆம்ஆண்டு இலங்கை ஆயுள்வேத மருத்துவசபையினால் பதிவிலக்கம் வழங்கி விட்டு 01.05. 2015 க்கு முன்னர் பதிவு இலக்கம் மற்றும் பதிவுச் சான்றிதழ்களைப் பெற்றவர்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும் எனக் கேட்டுக்கொள்வது நியாயமற்ற செயல் என பாதிக்கப்பட்ட சித்தமருத்துவத்துறை பட்டதாரி மாணவர்களினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் சித்தமருத்துவத் துறை, கிழக்குப் பல்கலைக்கழகம் சித்தமருத்துவத் துறை ஆகிய பல்கலைக்கழகங்களில் 5 வருட கற்கை நெறியுடன் சித்த போதனா வைத்தியசாலைகளில் ஒரு வருட உள்ளகப்பயிற்சி நெறியையும் பூர்த்தி செய்து ஆயுள வேத மருத்துவ சபைமூலம் பதிவுச்சான்றிதழையும் பெற்றுக்கொண்ட சித்த வைத்தியர்கள் (BSMS) மத்திய சுதேச மருத்துவத்துறை அமைச்சினால் கோரப்பட்டுள்ள நிரந்தர நியமனங்களில் விண்ணப்பிக்க முடியாத நிர்ப்பந்தத்துக்காளாகி இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

காரணம் இவர்களுக்கான மருத்துவ பதிவு இலக்கம் மற்றும் சான்றிதழ் 30. 07.2015 அன்று கொழும்பில் வைத்து ஆயுள்வேத மருத்துவ சபையால் வழங்கப்பட்டிருந்தது. ஆனால் கடந்த 12.04.2015இல் வெளியாகிய விசேட வர்த்தமானி அறிவிப்பில் 01.05.2015 இல் பதிவிலக்கம் பெற்ற சித்த மருத்துவர்கள் இதற்கு விண்ணப்பிக்க முடியும் என நியதி விதி அறிவிக்கப்பட்டுள்ளது. 30.07.2015 இல்பதிவிலக்கம் பதிவுச்சான்றிதழ்களை வழங்கிவிட்டு தற்போது வேலை வாய்ப்புகளை எதிர்நோக்கும் சித்தமருத்துவர்களது eligible date (30.07.2015)ஐ கருத்தில் கொள்ளாது 01.05. 2015 பதிவுபெற்றவர்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும் என்று கோருவது அப்பட்டமான ஒரு புறக்கணிப்பாக பாதிக்கப்பட்ட BSMS துறை மாணவர்களினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போதுபோன்றநிலைமை கடந்த கால நியமனங்களிலும் ஏற்பட்டு கடுமையான அழுத்தங்களூடாக நியாயம் பெற்றுக்கொள்ளவேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டதாகவும் தமிழ் மக்களின் பாரம்பரிய மருத்துவ அறிவு பொக்கிஷமாக கருதப்படும் சித்தமருத்துவத் துறையின் மீது விசேட அக்கறை கொண்ட வடமாகாண முதலமைச்சர் மற்றும் வடமாகாண சுகாதார சுதேச வைத்திய அமைச்சர் ஆகியோர் இது விடயத்தில் தீவிர கவனம் செலுத்தி தங்களுக்கு விமோசனம் பெற்றுத்தரவேண்டும் என பாதிக்கப்பட்ட BSMS பட்டதாரிகள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

இது சம்பந்தமான அமைச்சர்களை தொடர்புகொள்ள முயற்சி மேற்கொண்டுள்ளனர்.


சுதேச மருத்துவத்துறையில் ஆயுள்வேதமருத்துவம், சித்தமருத்துவம், யுனானி மருத்துவம்முறைகள்முறையே சிங்கள, தமிழ், இஸ்லாமிய கலாசாரங்களில் வேரூன்றிய மருத்துவ முறைகளாகும்.

எனினும் சித்தமருத்துவத்துறைக்கான இந்நிலைமை ஏனைய மருத்துவத்துறைகளில் ஏற்படுவதில்லை என்பது உற்றுநோக்கப்பட வேண்டியதாகும்.






இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கம் இம்முறை தனது சித்திரை புத்தாண்டு நிகழ்வுகளை கைதடி முதியோர் இல்லத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடத்தியிருந்தது. முதியவர்களுடன் கதை பேசி, விளையாட்டு நிகழ்வுகள்,கலைநிகழ்வுகள் மற்றும் போட்டிகளுக்கான பரிசளிப்பு என பல்வேறு நிகழ்வுகளை முன்னெடுத்து முதியவர்களை சங்க உறுப்பினர்கள் மகிழ்வித்தனர்.



# பொருத்து வீடுகள் பொருத்தமானதல்ல

## மொரட்டுவ பல்கலைக்கழக நிபுணர்கள் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

வடக்கு, கிழக்கில் போரினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்காக அமைக்கப்படவுள்ள 65 ஆயிரம் உருக்கு வீடுகள் போதிய அத்திவாரங்களோ, கூரை தொடர்பான ஆதாரங்களோ இல்லாதவையாக காணப்படுவதாகவும், காற்றோட்ட வசதிகளும் இல்லாதிருப்பதாகவும் மொரட்டுவ பல்கலைக்கழக நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். இந்த வீடுகள் தொடர்பில் தொழில்நுட்ப ரீதியான ஆய்வை மேற்கொண்ட பின்னர் இந்த கருத்தை வெளியிட்டுள்ளனர்.

பேராசிரியர் பிரியன் டயஸ், டாக்டர் நக்கிகா கல்வத்துற மற்றும் கட்டடக் கலைஞர் வருண டீ.சில்வா ஆகியோரின் அறிக்கையிலே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.


இந்த சர்ச்சைக் குரிய வீடுகள் லக்ஸம்பேக்கை தளமாகக்கொண்ட ஆசிலோமிட்டல் நிறுவனத்தினால் நிர்மாணிக்கப்படவுள்ளன. குறித்த வீடுகளை விஸ்தரிக்கவோ அல்லது திருத்தவோ முடியாது எனவும் நிபுணர்கள் குழு சுட்டிக் காட்டியுள்ளது.

சீமெந்து கற்களால் கட்டப்படும் வீடுகளிலும் பார்க்க இதன் ஆயுட்காலம் குறைவாக இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த வீடுகளை நிர்மாணிப்பதால் உள்ளூர் பொருளாதாரத்திற்கு அனுகூலங்கள் கிடைக்காது எனவும் தெரிவிக்கப்படுகிறது. (இ-5)

இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா:28<br>உயரம்: 5’7"<br>தகைமை/தொழில்:A/L/அரசதொழில்<br>எதிர்பார்ப்பு:சைவபோசனம்<br>தொ.இ: B/5757 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>கி.பா: 15<br>உயரம்: 4’11"<br>தகைமை/தொழில்: MSc/தனியார் தொழில்<br>தொ.இ: G/5799 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: 72செவ் 1 இல்<br>உயரம்: 5’7"<br>தகைமை/தொழில்:A/L.சிங்கப்பூர்<br>தொ.இ: B/5758 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 39செவ் 7 இல்<br>உயரம்: 5’5"<br>தகைமை/தொழில்:BBA<br>தொ.இ: G/3125 |
| பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா: 10<br>உயரம்: 5’8"<br>தகைமை/தொழில்:MA, Med, SLEAS/அரசதொழில்<br>தொ.இ: B/5759 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 60<br>உயரம்: 5’4"<br>தகைமை/தொழில்:BA/ஆசிரியர்<br>தொ.இ: G/4541 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 53செவ் 7 இல்<br>உயரம்: 5’4"<br>தகைமை/தொழில்BITலண்டன் NOTPR<br>தொ.இ: B/5760 | பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 48சூரிசெவ் 11 இல்<br>உயரம்: 5’6"<br>தகைமை/தொழில்:A/L/ஆசிரியர்<br>தொ.இ: G/5405 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.



இணுவில் திருப்பதி அருள்மிகு ஸ்ரீவேங்கடேஸ்வரர் ஆலய வசந்தோற்சவ விழா-2016

இணுவைத் திருப்பதியிலே பக்தர்களுக்கு வேண்டியவற்றைத் தந்தருளும் வண்ணம் கோயில் கொண்டு எழுந்தருளி இருக்கும் திருவேங்கடேஸ்வரப் பெருமானுக்கு வருடாந்த வசந்தகாலத் திருவிழா நடைபெறத் திருவருள் கைகூடியுள்ளது. நிகழும் மங்களகரமான துர்முகி வருடம் சித்திரைத் திங்கள் 06 ஆம் நாள் (19.04.2016) இன்று செவ்வாய்க்கிழமை முதல் ஆரம்பமாகி சித்திரைத் திங்கள் 8 ஆம் (21.04.2016) வியாழக்கிழமை நிறைவுறத் தெய்வத்திருவருள் கூடியுள்ளது.

கிரியா விபரம்

காலம்: 19.04.2016 செவ்வாய்க்கிழமை முதல் 22.04.2016 வெள்ளி வரை
நேரம்: தினமும் காலை 6.30 மணி முதல் நண்பகல் 12.00 மணிவரையும் யாக பூசை, ஸ்ரீநிவாசர் நந்தவனத்தில் திருமஞ்சனம்
மாலை 4.00 மணி முதல் இரவு 7.00 மணிவரை
யாகபூசை ஸ்ரீநிவாசர் திருமஞ்சனம், ஆராதனை.

சித்திரை 21.04.2016 வியாழன் காலை 6.00 மணிமுதல்
யாக பூஜை, 81 கலச மகா திருமஞ்சனம், தீர்த்தவாரி, விசேட பூஜை, மாலை 4.00 மணிமுதல் மகா பூர்ணாகுதி, ஸ்ரீநிவாசர், கருட சேனையுடன் கும்ப வீதியுலா, ஸ்ரீநிவாசருக்கு கும்ப புரோட்சணம்.

சித்திரை 22.04.2016 வெள்ளி மாலை 4.00 மணிமுதல்
இலக்சுமி நாராயணர் திருக்கல்யாண வைபவம் ஊஞ்சல் சேவை மலர் பூந்தண்டிகையில் ஸ்ரீநிவாசர் திருமகளுடன் சேவை கண்டருளுவார்.

இணுவில் திருப்பதியானின்
வசந்த காலத் திருவிழா ஆண்டாண்டு காலமாக பெரும் சக்கரவர்த்திகளும் மன்னர்களும் வசந்தகாலத்தில் சகல போகங்களையும் அனுபவிப்பது வழக்கம். அதுபோன்று இவ்வாண்டு வசந்தகாலம் ஆரம்பமாகின்றது. எனவே இவ் வசந்த காலம் ஆரம்பத்தில் இந்த அண்ட சராசரங்களுக்கெல்லாம் அரசனாகிய திருப்பதி வேங்கடேஸ்வரரும் சகல போகங்களையும் அனுபவிக்கும் பொருட்டு 19.04.2016 செவ்வாய் முதல் 21.04.2016 சித்திரை பூரணை வரை இணுவில் திருப்பதியில் இச்சேவையினை ஏற்க இருக்கிறார். இம்மூன்று தினங்களும் காலையும் மாலையும் சகல வித மூலிகைகளாலும் அபிஷேகத் திரவியங்களாலும் மூலிகை தூபத்தினாலும் அபிஷேகமும் நறுமலர் பூக்களினால் அர்ச்சனையும் ஆடல் பாடல் போன்ற சகல விதமான உபசாரங்களையும் எம் பெருமானுக்கு சமர்ப்பிக்கப்பட இருக்கிறது.
எனவே இக்காலத்தில் அடியவர்கள் யாவரும் வந்து எம் பெருமான் மகிழ்ச்சியான உல்லாச போகத்தில் இருக்கும் போது தங்களின் வேண்டுதல்களை சமர்ப்பித்து எம்பெருமானின் திருவருளை பெற்றுய்யும் வண்ணம் வேண்டிக் கொள்கின்றோம்.

பிரதம குரு: பிரம்ம ஸ்ரீ வை.சோ.பிரசன்னக்குருக்கள்
சர்வசாதகம்: பிரம்ம ஸ்ரீ சபரீசர்மா
நித்திய அர்ச்சகர்: பிரம்ம ஸ்ரீ கோபிகிருஷ்ண சர்மா

உபயகாரர்கள்
தொ.பே.இல. 021 224 2300

ஆலய தர்மகர்த்தா
சி.கணேசலிங்கம்

(4236)

# முள்ளிவாய்க்காலுடன் முடிந்துவிட்டதாக நினைத்தார்கள் இருப்பதை வைத்துக்கொண்டு மீண்டெழுவான் தமிழன்

## காத்தவராயன் கூத்துப்போட்டியில் எம்.பி.சிவமோகன் வீராப்பு





ஒரு இனத்தின் அடையாளம் கலாசாரமே. அதுவே இன்று எஞ்சியுள்ளது என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் தெரிவித்துள்ளார்.

வன்னிகுறோஸ் கலாசாரப் பேரவையின் ஒழுங்குபடுத்தலுடன் காத்தவராயன் சிந்துநடைக் கூத்து போட்டி நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை முல்லைத்தீவு, வித்தியானந்தா கல்லூரியில் நடைபெற்றது. இதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்தும் அவர் தெரிவிக்கையில்,

உலகின் ஒவ்வொரு இனமும் தனது அடையாளத்தை நிலைநிறுத்த பயன்படுத்தும் ஆயுதம் அவ்வினத்தின் கலாசாரமாகும். தமிழ் நாட்டு மக்களுக்கும் இலங்கை தமிழ் மக்களுக்கும் பாலமாக அமைவது கலாசாரமே. பணத்தால் என்றும் விலைபேச முடியாதது எமது கலாசாரம் ஆகும். முள்ளிவாய்க்கால் முடிவின் பின் தமிழரின அனைத்து அடையாளங்களும் அழிந்து விட்டன என எக்காளம் இட்டது சிங்கள அரசு. இன்று எமது கையில் எஞ்சியிருப் பது எமது கல்வியறிவும் கலா சாரமுமே. எஞ்சியிருப்பதனை வைத்துக்கொண்டு மீண்டெழுவான் தமிழன் என்பதனை மீண்டும் ஒருமுறை நிரூபித்திருக்கிறது இந்த நிகழ்வு.




இந்த வன்னி மண்ணை ஒரு கலாசார பூமியாக்குவது, அரிய வகை மரங்கள் நிறைந்த சோலையாக்குவது மட்டுமே என் இலட்சியம். அதை செய்து முடிக்க எனக்கு அரசியல் தேவையில்லை. என் வாழ்நாளில் வன்னி மண்ணில் எதை சாதிக்கலாம் என்பது மட்டுமே என் இலட்சியமாக இருக்கும்.

மருத்துவம் தான் எனது அரசியல் ஆரம்பம். நோயாளிகளாக என்னிடம் வந்த மக்களே எனது ஆதரவாளர்கள். அது முல்லை. மாவட்டத்துடன் நின்று விடாமல் மன்னார், வவுனியா வரை வியாபித்திருக்கின்றது. அந்த மருத்துவத்தின் புதிய வன்னிநில பரிமாணம் உங்கள் கண்ணின் முன் எதிர்காலத்தில் பரிணமிக்கும் என்றார்.

இந்நிகழ்வில் துணுக்காய் தமிழதாய் கலாமன்றம், பெரிய புளியங்குளம் சுந்தராலய கலாமன்றம், கூழாமுறிப்பு அண்ணா கலாமன்றம், முள்ளியவளை பொன்னகர் பாரதி கலாமன்றம், முள்ளியவளை பொன்னகர் இளந்தளிர் கலாமன்றம், புதுக்குடியிருப்பு சிறி முத்துமாரி கலாமன்றம் மற்றும் வேனாவில் கலைமகள் கலாமன்றம் ஆகிய மன்றங்கள் கலந்து கொண்டன என்பது குறிப்பிடத்தக்கது. (3-250)

# தள்ளாடியில் தடம்புரண்டது ஹயஸ் வாகனம் பெந்தகோஸ்துசபை போதகர் பலி;8 பேர் காயம்

## நேற்றுக்காலை கோரச் சம்பவம்

(மன்னார்)

யாழ்ப்பாணத்தில் இருந்து மன்னார் நோக்கி நேற்றுக்காலை பயணித்த ஹயஸ் ரக வாகனம் விபத்துக்களானதில் போதகர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.



மேலும் 8 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

ஹயஸ் ரக வாகனத்தில் பயணித்த இலங்கை பெந்தகோஸ்து சபையின் போதகர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதோடு 6 பெண்கள் உட்பட 8 பேர் காயமடைந்துள்ளனர்.

குறித்த விபத்தானது, இலங்கை பெந்தகோஸ்து சபைக்கு சொந்தமான ஹயஸ் ரக வாகனம் மன்னார் தள்ளாடி பிரதேசத்தில் காணப்படும் விமானப்படைத்தள பகுதியினூடாகச் செல்லும் பிரதான வீதியில் விபத்துக்குள்ளாகியுள்ளதாக பொலிஸார் சுட்டிக்காட்டியுள்ளனர்.

குறித்த விபத்தின் போது, தாவீது ராஜா(வயது-58) என்ற போதகரே உயிரிழந்திருப்பதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இலங்கை பெந்தகோஸ்து சபையின் மன்னார் மாவட்டத்திற்கு பொறுப்பான போதகர் தாவீது ராஜா தலைமையில் இரண்டு அருட்சகோதரர்கள் மற்றும் ஆறு அருட்சகோதரிகள் உள்ளடங்கலாக 9 பேர் யாழ்ப்பாணத்திற்கு சென்ற நிலையில், நேற்று திங்கட்கிழமை காலை யாழ்ப்பாணத்தில் இருந்து மன்னார் நோக்கி திரும்பிக் கொணடிருந்தனர்.

இதன்போது, மன்னார் தள்ளாடி பிரதான வீதியில் உள்ள விமானப்படைத்தள பிரதேசத்தில் குறித்த ஹயஸ் ரக வாகனத்தில் ஏற்பட்ட திடீர் கோளாறு காரணமாக வாகனம் வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு தூக்கி வீசப்பட்டுள்ளது.

இவ்விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (3)

# இ.போ.ச.-தனியார் ஊழியர் தாக்குதல் இன்று முல்லை.நீதிமன்றில் விசாரணை

முல்லைத்தீவு வள்ளிபுனம் பகுதியில் இ.போ.ச.-தனியார் பேருந்து சாரதிகளுக்கிடையிலான முறுகல் முற்றிய நிலையில் இ.போ.ச. சாரதி மற்றும் நடத்துநர் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பான விசாரணைகள் இன்று முல்லைத்தீவு நீதிமன்றில் நடைபெறவுள்ளது.

வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த சாரதி சிகிச்சை முடிவுற்ற நிலையில் வீடு திரும்பியுள்ளார்.

சம்பவம் தொடர்பான விசாரணைக்கு இன்று நீதிமன்றுக்கு சமுகமளிக்குமாறு பொலிஸார் அழைப்பாணை அனுப்பியுள்ளனர்.

இந்த விசாரணைக்கு நடத்துநரும் கிளிநொச்சி சாலை அலுவலரும் ஆஜராகவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

மேற்படி தாக்குதல் சம்பவத்தினால் புத்தாண்டு தினத்தன்று இ.போ.ச.- தனியார் பேருந்துகளில் திருகோணமலைக்குப் பயணித்துக் கொண்டிருந்த பயணிகள் பெரும் அசௌகரியங்களைச் சந்தித்தமை குறிப்பிடத்தக்கது. (3)

# 2 கட்டாக்காலி மாடுகள் ஏல விற்பனைக்கு இதுவரை 25 மாடுகள் பிடிக்கப்பட்டன

## கரைச்சி பிரதேச சபைச் செயலாளர் தெரிவிப்பு

கிளிநொச்சி கரைச்சி பிரதேசசபைக்குட்பட்ட ஏ-9 வீதியில் கட்டாக்காலிகளாக காணப்பட்ட 3 மாடுகள் கரைச்சி பிரதேச சபையினால் கடந்த வாரம் பிடிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு பிடிக்கப்பட்ட இரண்டு மாடுகள் உரிமை கோரப்படாத நிலையில் அவற்றை ஏலத்தில் விற்பனை செய்வதற்கான அனுமதி நீதிமன்றத்தினூடாக பெறப்படவுள்ளதாக கரைச்சி பிரதேச சபைச் செயலாளர் க.கம்சநாதன் தெரிவித்தார்.

அத்துடன் பிடிக்கப்பட்ட மற்றைய மாடு தொடர்பான நடவடிக்கை நேற்றைய தினம் நீதிமன்றத்தினூடாக மேற்கொள்ளப்பட்டது. இதேவேளை கட்டாக்காலி மாடுகளைப்பிடிக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து இதுவரை 25இற்கும் மேற்பட்ட கட்டாக்காலி மாடுகள் பிடிக்கப்பட்டு நீதிமன்ற நடவடிக்கையினூடாக தண்டப்பணம் அறவிடப்பட்டு உரிமையாளர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

தற்போது கரைச்சிப் பிரதேச சபைக்குட்பட்ட ஏ-9 பிரதான வீதியில் கட்டாக்காலி மாடுகளின் நடமாட்டம் குறைவடைந்துள்ளதாக கரைச்சி பிரதேச சபைச் செயலாளர் க.கம்சநாதன் தெரிவித்துள்ளார். (3)



பூநகரி வினாசியோடை பாடசாலையில் கடந்த 9 ஆம் திகதி இடம்பெற்ற பரிசளிப்பு விழாவில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம்.

(படம்:-கிஷோர்)

# வடமாகாணத்தின் சிவில் நிர்வாகத்தில் இராணுவத் தலையீடு அதிகரித்து வருகிறது

## இது நல்லிணக்கத்தை ஏற்படுத்தாது என்கிறது வடபிராந்திய திருச்சபைகளின் ஒன்றியம்

வடமாகாணத்தின் சிவில் நிர்வாகத்தில் இராணுவ தலையீடு அதிகரித்து வருவதை வடபிராந்திய கிறிஸ்தவ திருச்சபைகளின் ஒன்றியம் வன்மையாகக் கண்டித்துள்ளது.

இராணுவத்தின் அத்துமீறிய நடவடிக்கைகளை அறிக்கையொன்றின் மூலம் சுட்டிக்காட்டியுள்ள இந்த ஒன்றியம் தனது கண்டனத்தை வெளிப்படுத்தியிருக்கின்றது. இராணுவ மயமாக்கலை அகற்றுவது இன்றைய அவசரத் தேவையாக உள்ளது என்றும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

சிவில் நிர்வாகத்தில் இராணுவ தலையீடு அதிகரித்து வருவதை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். இலங்கையில் அனைவரும் இயல்பாக வாழும் சூழ்நிலை ஏற்படுத்தப்படுமாயின் மட்டுமே நீதிமைய உரிமை சார் நல்லிணக்கம் நனவாகும்.

எந்த அனுமதியுமின்றி தென்னிலங்கை மீனவர்கள் முல்லைத்தீவில் கடற்றொழிலில் ஈடுபட்டுள்ளனர். கொக்குத்தொடுவாய் வடக்கிலுள்ள புலி பாய்ந்த கல் அருகாமையில் அத்துமீறி குடியேறி கடற்றொழிலில் ஈடுபட்ட இவர்களைப் பற்றி தகவல்கள் சேகரிக்க சென்ற கிராம அலுவலர் சீவரட்ணம் யேசுரட்ணம் இம்மீனவர்களால் தாக்கப்பட்டுள்ளார். அதன்பின் இவர்களது தகவலின் அடிப்படையில் அங்கு வந்த 593 ஆவது படைப்பிரிவு இராணுவ அதிகாரி கேணல் சமந்த சில்வா கிராம அலுவலரின் தேசிய அடையாள அட்டை, உத்தியோக அடையாள அட்டை என்பவற்றை எடுத்துக் கொண்டதுடன் தகாத வார்த்தைகளாலும் திட்டியுள்ளார். தென்னிலங்கை மீனவர்களினதும் இராணுவத்தினதும் பொறுப்பற்ற இந்நடவடிக்கையை நாம் கண்டனம் செய்கிறோம்.

சிவில் நிர்வாகத்தில் இராணுவம் தலையிடுவது அறத்துக்கு மாறானது. இது ஆரோக்கியமானதல்ல. இது நல்லிணக்கம் நடைமுறைக்கு பொருத்தமற்றது என்பதையே வெளிப்படுத்தும். இதனால் சிவில் நடைமுறைகளை தென்னிலங்கை மீனவர்கள் மதிக்கப்பழக வேண்டும். இராணுவம் சிவில் நிர்வாகத்தில் தலையிடக்கூடாது.

ஏற்கனவே வடமாகாணத்தில் இராணுவத்தலையீடு கல்வி அமைச்சின் பொறுப்பிலுள்ள முன்பள்ளிகளிலும் காணப்படுகின்றது என்பது அனைவரும் அறிந்ததே. சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் ஊடாக, முன்பள்ளிகளில் கற்பிப்போரை சிவில் பாதுகாப்பு படையினராக நியமித்து, மாதாந்த சம்பளத்தை வழங்கி, அவர்களது இயலாமையை தமது தலையீட்டுக்கு பாவிப்பதும் நல்லிணக்கத்தை ஏற்படுத்த பொருத்தமானதல்ல.

இராணுவத்தை அகற்றுவதன் மூலம் தான் இப்பிரச்சினைகளை முடிவுக்கு கொண்டுவரலாம். இராணுவத்தலையீடின்றி அரச சிவில் நிர்வாகம், அரச அதிபர், பிரதேச செயலாளர், கிராம அலுவலர், பொலிஸ், நீதிமன்றம் என இயங்குவது உடனடியாக உறுதி செய்யப்பட வேண்டும். அரச இராணுவம், அரச சிவில் நிர்வாக செயற்பாட்டுக்கு தடையாகவுள்ள இந்நிலை தொடரக்கூடாது என்றும் அந்த ஒன்றியம் வலியுறுத்தியுள்ளது. (3-9)




## தலைக்கவசத்தை கழறவிடாது பிடித்தபோது சைக்கிளுடன் மோதுண்டு ஏற்பட்டது விபத்து




வவுனியா - மன்னார் வீதியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை மோட்டார் சைக்கிளில் சென்றவர் துவிச்சக்கர வண்டியுடன் மோதி விபத்துக்குள்ளானதில் மூவர் காயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். மன்னார் வீதி வழியாக வவுனியா நோக்கி சென்று கொண்டிருந்த துவிச்சக்கர வண்டியை அதே வீதி வழியாக வந்த மோட்டார் சைக்கிள் வேப்பங்குளம் பகுதியில் மோதியதில் இவ்விபத்து இடம் பெற்றது.

இதன்போது துவிச்சக்கர வண்டியில் பயணித்த சிறுவனும் தந்தையும் காயமடைந்துள்ளதுடன் மோட்டார் சைக்கிளில் வந்தவரும் காயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதில் துவிச்சக்கரவண்டியில் பயணித்தவர் ஆபத்தான நிலையில் மேலதிக சிகிச்சைக்காக அநுராதபுரம் வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். இதே வேளை, இவ் விபத்துச் சம்பவத்திற்கு காரணமான மோட்டார் சைக்கிள் சாரதி மது போதையில் வந்ததாகவும் தனது தலைக் கவசத்தை கழறவிடாது பிடித்த போதே வேகக் கட்டுப்பாட்டை இழந்து துவிச்சக்கர வண்டியுடன்மோதிவிபத்துக்குள்ளானதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இவ்விபத்து தொடர்பில் வவுனியா போக்குவரத்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகிறார்கள். (3-250)

## மன்னார் வஞ்சியன் குளம் கிராமத்தில் 40மாணவருக்கு கணனி பயிற்சி சான்றிதழ்

(மன்னார்)

நண்பனின் தேவை நற்பணி மன்றத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்டு மன்னார் நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட வஞ்சியன்குளம் கிராமத்தில் கடந்த இரண்டரை மாதம் நடத்தப்பட்ட கணனி பயிற்சி நெறியினை பூர்த்தி செய்த 40 மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கும் நிக ழ்வு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற்றது.

வஞ்சியன்குளம் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையில் இடம்பெற்ற சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நண்பனின் தேவை நற்பணி மன்றத்தின் தலைவர் பவமொழி பவன் தலைமையில் இடம்பெற்றது.

குறித்த நிகழ்விற்கு வடமாகாண சபை உறுப்பினர் வைத்திய கலாநிதி ஜீ.குணசீலன், தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்எஸ்.வினோநோத ராதலிங்கம், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனின் பிரதிநிதி ஜஸ்ரின், சிவன் அறக்கட்டளை நிதியத்தின் தலைவர் கணேஸ் வேலாயுதம்,சமூக சேவையாளர் என்.கணேசலிங்கம்,வஞ்சியன் குளம் பங்குத்தந்தை எஸ்.ஞானாதிக்கம், கிராம சேவையாளர் எம்.ஜெ.பீரிஸ் ஆகியோர் விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.

இதன்போது பயிற்சி நெறியை பூர்த்தி செய்த 40 மாணவர்களும் சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். (3)

# 70 ஏக்கர் குடியிருப்புக் காணியை அடாத்தாக கையகப்படுத்தும் தென்னை அபிவிருத்திச்சபை

## இயக்கச்சி கரந்தாயில் பொதுமக்கள் நேற்று எதிர்ப்பு; கைது செய்யும் முயற்சி கைகூடவில்லை

(பளை)

கிளிநொச்சி இயக்கச்சி கரந் தாய் பகுதியில் நீண்டகாலத்திற்கு முன்னர் பொதுமக்களுக்கு வழங்கப்பட்ட காணிகளை தென்னை அபிவிருத்திச் சபை அடாத்தான முறையில் கையகப்படுத்த எத்தனித்துள்ளது. இந்நிலையில் நேற்றையதினம் 32 குடும்பங்களைச் சேர்ந்த பொது மக்கள் தமது காணிகளை அடையாளப்படுத்த முற்பட்ட நிலையில் அங்கு சென்ற பொலிஸார் பொது மக்களைக் கைது செய்ய முயன்றுள்ளனர். சுமார் 70 ஏக்கர் கொண்ட இக்காணியில் இருந்த வீடுகள், கிணறுகள் என்பன ஏற்கனவே இடித்து தரைமட்டமாக்கப்பட்டன.எல். ஆர்.சியினால் இக்காணிகள் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு அங்கு மக்கள் குடியேறி வாழ்ந்த நிலையில் யுத்தம் முடிந்த தறுவாயில் அங்கு காணப்பட்ட வீடுகள் இடித்து தரைமட்டமாக்கப்பட்டதாகவும் அங்கிருந்த பல கிணறுகள் இடித்து மூடப்பட்டு அக்காணிகள் தென்னை அபிவிருத்திச் சபைக்கு சொந்தமானது என்று உரிமை கொண்டாடப்படுவதாகவும் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். மேற்படி விடயம் தொடர்பாக கொழும்பு எல்.ஆர்.சிக்கு இரண்டு தட வைகள் காணி உரிமையாளர்கள் சென்று மேற்படி சிக்கலுக்கு சட்டரீதியாக தீர்வுகாண முற்பட்டபோதும் தென்னை அபிவிருத்திச் சபையினர் முன்வரவில்லை. இதனால் தென்னை அபிவிருத்திச் சபையினர் அடாத்தான முறையில் செயற்படுவதாக காணி உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்விடயம் குறித்து கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் பேசப்பட்டதுடன் மேற்படி காணி பொதுமக்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டிருப்பதால் அது பற்றிய தீர்மானத்தை அரசாங்கதிபரிடம் ஒப்படைப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டிருந்தது. அத்துடன் மீள்குடியேற்ற அமைச்சிடம் இருந்தும் காணிகளைப் பகிர்ந்தளிர்க் குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு கடிதம் அனுப்பப்பட்டிருப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரன் தெரிவித்தார்.

இந்நிலையில் நேற்றுக்காலை காணி உரிமையாளர்கள் தமது காணிகளுக்கு செல்ல முற்பட்டவேளை தென்னை அபிவிருத்தி சபைக்கு அது சொந்தமானது என்று தெரிவித்து அங்கு சென்ற பொலிஸார் அவர்களைக் கைது செய்ய முயன்றனர். இதனையறிந்து அங்கு சென்ற பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரன் பொதுமக்களைக் கைது செய்யாது தன்னைக் கைது செய்யுமாறு பொலிஸாருக்குக் கூறிய நிலையில் தமது முயற்சியை பொலிஸார் கைவிட்டதுடன் இது சம்பந்தமாக சிவில் வழக்கு ஒன்றை தாக்கல் செய்யுமாறு அறிவுறுத்தினர். எனினும் அதற்கு மறுப்பு தெரிவித்ததையடுத்து இரண்டு கிழமைகளில் நல்லதோர் முடிவைப் பெற்றுத்தர கால அவகாசம் வழங்குமாறு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது சம்பந்தமாக கருத்துத் தெரிவித்த எம்.பி, தென்னை அபிவிருத்திச் சபையில் முழுக்க முழுக்க தென் பகுதியைச் சேர்ந்தவர்களே உள்ளனர். அவர்கள் இங்குவந்து காட்டுச் சட்டம் போடுகிறார்கள். மேற்படி காணிகளில் வீடுகள் கட்டி கிணறுகள் கட்டி வாழ்ந்த மக்களின் சொத்துக்கள் யுத்தத்தில் இடித்து தரைமட்டமாக்கப்பட்டுவிட்டன. இப்போது தென்னை அபிவிருத்திச் சபை உரிமை கொண்டாடுகிறது. பாதிக்கப்பட்டுள்ள அத்தனை குடும்பங்களும் தாம் வாழ்ந்த இடத்தில் மீளவும் குடியமர்த்தப்பட வேண்டும். இல்லாவிடில் எதிர் காலத்தில் போராட்டங்கள் முன்னெடுக்கப்படும் என்று தெரிவித்தார். (3)

# SLEAS போட்டிப் பரீட்சைக்கான மாதிரி வினாக்கள்

## விடய ஆய்வு (சம்பவக்கற்கை) மாதிரி வினாத்தாள்



நடராஜா அனந்தராஜ்
B.A.(Hons.), M.A
Dip-In-Edu., Dip-In Jour
SLPS, SLEAS

விடய ஆய்வு தொடர்பான பிரச்சினைகளுக்கான விடைக் குறிப்புக்களை எழுதுவதற்கு முன்னர் தரப்பட்ட பந்தியை முழுமையாக வாசித்துக் குறிப்பெடுத்த பின்னரே வினாக்களை ஒவ்வொன்றாக வாசித்து விடைகளை எழுதவேண்டும். இந்த இதழில், ஒரு அதிபரின் முகாமைத்துவப் பண்புகள் தொடர்பான சம்பவக் கற்கை இடம்பெறுகின்றது:

பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன்கீழ் உள்ள எல்லா வினாக்களுக்கும்விடை எழுதுக:

வடக்கு கிழக்கு மாகாணத்தில் உள்ள ஒரு பிரபலமான 1 AB பாடசாலையில் அதிபரால் கையாளப்படுகின்ற சில முகாமைத்துவ உத்திகள் பற்றிய பின்வரும் சம்பவம் ஒரு அதிபர் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டுமென்பதைப் புலப்படுத்துகின்றது.

தேவிபுரம் என்ற நகரத்தில் உள்ள இப்பாடசாலை தரம் 1 முதல் 13 வரையான வகுப்புகளையும், 2 ஆயிரத்து 500 இற்கு மேற்பட்ட மாணவர்களையும் 89 ஆசிரியர்களையும், 11 சிற்றூழியர்களையும்கொண்ட ஒருபெரிய பாடசாலை.

இப்பாடசாலையின் அதிபர் திருக்குமரன் பாடசாலை ஆரம்பமாவதற்கு முன்னரே பாடசாலைக்கு வருகை தந்து, தனது முதல் வேலையாக பாடசாலையைச் சுற்றிப் பார்வையிடுவார். பாடசாலையின் சுற்றுச்சூழல் மற்றும் கழிப்பறைகள் என்பனவற்றை நேரடியாகச் சென்று பார்வையிடுவார். ஏதாவது குறைபாடுகள் காணப்பட்டால், அந்தப் பாடசாலையில் சுகாதாரத் தொழிலாளியாகக் கடமையாற்றும் சண்முகத்தின் கவனத்திற்குக் கொண்டுவருவார். காலையில் பாடசாலையைச் சுற்றிப் பார்வையிடும் பொழுது பாடசாலைக்கு வந்து கொண்டிருக்கும் ஆசிரியர்களைப் பார்த்து, "Good Morning" என்று சொல்லி இன்முகத்துடன் வரவேற்றபடி செல்வார். அப்பொழுது சிறிது தாமதமாக வரும் ஆசிரியர்களையும் பார்த்து வணக்கம் சொல்லி வரவேற்றபடி போய்க் கொண்டிருக்கும் பொழுது. அத்தகைய ஆசிரியர்கள் குற்ற உணர்வினாலோ என்னவோ தலை குனிந்தபடி போவார்கள்.

அதிபர் திருக்குமரன் பாடசாலையின் பிரதி அதிபர்கள்,உதவி அதிபர்கள்,பகுதித் தலைவர்கள் மற்றும் ஒழுக்கத்திற்குப் பொறுப்பான ஆசிரியர்களுடன் எப்பொழுதும், தொடர்ச்சியான தொடர்புகளை வைத்திருக்கின்றார். இந்தப் பாடசாலையில் பகுதித்தலைவர்களால் தீர்க்கமுடியாத பிரச்சினைகள் பிரதி அதிபரின் கவனத்திற்குக் கொண்டு வரப்படும். அதேபோன்று. பிரதி அதிபர்களால் தீர்க்கப்பட முடியாத பிரச்சினைகள் அதிபரின் கவனத்திற்குக் கொண்டு வரப்படும். பாடசாலை ஆரம்பமாகி அரை மணித்தியாலத்திற்குள், ஒவ்வொரு பகுதித் தலைவர்களும் தத்தமது பகுதிகளில் உள்ள ஆசிரியர்களின் வரவு பற்றியும்.வருகை தராத ஆசிரியர்களுக்கான பதில் ஏற்பாடுகள் பற்றியும் பிரதி அதிபர்கள் ஊடாக அதிபருக்கு எழுத்து மூலம் அறிவிப்பார்கள்.அடுத்த அரை மணித்தியாலத்தில், மாணவர் வரவு பற்றியும், பாடசாலை நேரத்திற்குத் தாமதமாக வருகை தந்தோர் பற்றியும் அறிக்கைகளாக அதிபருக்குச் சமர்ப்பிப்பார்கள். அதேபோன்று வரவு ஒழுங்கீனமான மாணவர்கள் பற்றிய குறிப்புக்களையும், பிரதி அதிபர்கள்.அதிபர்களிடம் சமர்ப்பிப்பார்கள்.

இந்த அறிக்கைகளைப் பார்வையிட்டபின்னர் அதிபர் திருக்குமரன் மீண்டும் ஒரு தடவை பாடசாலையைச் சுற்றிப் பார்வையிடுவார். ஏதாவது பகுதியில் அல்லது வகுப்புகளில் பிரச்சினைகள் எழக்கூடும் என்று அதிபர் கருதினால், அப்பகுதிகளையும், வகுப்புகளையும் குறிப்பாகப் பார்வையிடுவார். சிலவேளைகளில் ஆசிரியர்கள் இல்லாத வகுப்புகளுக்குள் சென்று ஏதாவது ஒரு பாடத்தைப் பற்றிக் கற்பிக்கத் தொடங்கி விடுவார். இதனால் எந்த ஒரு ஆசிரியராவது வகுப்புகளுக்குச் செல்லாது இருப்பதில்லை.

வகுப்புகளில் கற்பிக்கப்பட்ட தேர்ச்சிகள் மற்றும் கற்பித்து முடிக்காத தேர்ச்சிகள் போன்ற கற்பித்தல் நடவடிக்கைகளையும் மதிப்பீட்டுப் புள்ளிகளையும் தொகுத்து.வகுப்பு மற்றும் பாடரீதியாக வெள்ளிக் கிழமைகளில் ஒவ்வொரு பகுதித் தலைவரும். பாடம் முடிவதற்கு ஒரு பாடவேளை முன்னதாக அதிபருக்கு அறிவிப்பார்கள். அவற்றை அதிபர் தனது முகாமைத்துவ உதவியாளரிடம் கொடுத்து தகவல்களாகத் தொகுத்து அட்டவணைகளாகக் காட்சிப்படுத்துவார். அதேவேளை ஏற்கனவே அதிபரின் வழிகாட்டலுக்கு அமைய ஒவ்வொரு வெள்ளிக் கிழமைகளிலும், பாடவேளைகள் முடிந்தபின்னர் சுமார் 45 நிமிடங்கள் பாடரீதியான தர வட்டக் குழுக்களின் (Quality Circle) சந்திப்பு நிகழ்ந்து.அந்த வாரத்தில் இடம்பெற்ற குறை நிறைகள் ஆசிரியர்களால் கலந்துரையாடப்பட்டு அவை அறிக்கைகளாக அதிபரிடம் சமர்ப்பிக்கப்படும்.

அதனைத் தொடர்ந்து.அதிபர் தனது பிரதி அதிபர்கள், உதவி அதிபர்கள், பகுதித் தலைவர்களுடன் கலந்துரையாடி அடுத்து வரும் திங்கட்கிழமை பாடசாலையில் மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகளைத் தீர்மானிப்பார்.

இறுதியாக நடைபெற்ற முகாமைத்துவக் குழுக்கூட்டத்தின் பொழுது, தான் தரிசித்த சில வகுப்புகளில் உள்ள குறைபாடுகளையும் கலந்துரையாடி அந்தந்த வகுப்புகளில் ஒரு சில மெல்லக் கற்கும் மாணவர்கள் இருப்பதைத் தான் அவதானித்ததாகவும் கூறி, அத்தகைய மாணவர்களுக்கான ஆறு மாதத்திற்குரிய விசேட செயற்றிட்டம் ஒன்றை அமைத்து அத்தகைய மாணவர்களுக்கான பரிகாரக் கல்வியின் முக்கியத்துவத்தைப் பற்றியும் விளக்கி அவற்றைத் துரிதமாகச் செயற்படுத்துவதற்கான குறுங்காலச் செயற்றிட்டம் ஒன்றையும் நடைமுறைப்படுத்துமாறு தனது பிரதி அதிபரிடம் அதற்கான பொறுப்புக்களையும் கையளித்தார்.

மேலும் இணைப்பாட விதானச் செயற்பாடுகள்,பாடசாலையின் ஒழுங்கு கட்டுப்பாடுகள் மற்றும் வேறு விடயங்கள் தொடர்பாகவும் காலத்திற்குக் காலம் இவைபோன்று மீள்பரிசீலனைக்கு உட்படுத்துவார்.

தனது முகாமைத்துவ ஆளணியினரின் ஆலோசனைகள், கருத்துக்களின் அடிப்படையில் வகுப்பு ரீதியாகப் பெற்றோர்களின் சந்திப்புக்களை அந்தந்த வகுப்பாசிரியர்களின் தலைமையில் சந்தித்துக் கலந்துரையாடுவார். அதேபோன்று பழைய மாணவர்சங்கப் பிரதிநிதிகள் மற்றும் அந்தப் பிரதேசத்தில் இயங்கும் அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் போன்ற பாடசாலைச் சமூகத்தினருடனும் நல்லுறவைப்பேணி வந்ததனால், அவர்களிடம் இருந்து பாடசாலைக்குத் தேவைப்படுகின்ற உட்கட்டமைப்பு அபிவிருத்திகளையும் செய்து முடித்துவிடுவார்.

1.அதிபர் திருக்குமரன் அவர்கள் தினமும் இரண்டு வேளைகள் பாடசாலையைச் சுற்றிப் பார்வையிடுவதன் மூலம் அவர் தனது நேரத்தை விரயமாக்குவதாகக் கருத முடியாதா? இது தொடர்பாக உங்கள் கருத்துக்களைக் குறிப்பிடுக

2.அதிபர் திருக்குமரன் தனது பாடசாலையின் முகாமைத்துவப் பிரச்சினைகளை அறிந்து கொள்வதற்காக கையாண்ட உத்திகள் எவை?

3.அதிபரிடம் காணப்பட்ட சிறப்பான தலைமைத்துவப் பண்புகள் எவை?

4.பாடசாலைக் கல்வி அபிவிருத்தியை மேலும் உயர்த்துவதற்காக அதிபர் மேற்கொண்ட சில முன்னேற்றகரமான நடவடிக்கைகள் எவை?

5.குறுங்காலச் செயற்றிட்டம், நீண்டகாலச் செயற்றிட்டம் என்பவற்றை விளக்கி பாடசாலை ஒன்றில் இலகுவில் நடைமுறைப் படுத்தப்படக் கூடிய வகையில் எவ்வாறு ஒரு குறுங்காலச் செயற்றிட்டத்தை அமைக்கலாம் என்பதை கான்ற் சட்டகத்தை அடிப்படையாகக் கொண்டு விளக்குக?

(தொடரும்...)

# பயணிகள் விமானத்தின் மீது மோதிய ஆளில்லா விமானம்






இங்கிலாந்து தலைநகர் லண்டனில் உள்ள ஹீத்ரோ விமான நிலையத்தில் தரையிறங்கும்போது பிரிட்ஷ் ஏர்வேஸ் விமானத்தின் மீது ஆளில்லா விமானம் மோதிய சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

விமான நிலையங்கள் மற்றும் உயர் பாதுகாப்பு நிறைந்த பகுதிகளில் ரிமோட் மூலம் இயக்கப்படும் ஆளில்லா விமாணங்களை பறக்க விட வேண்டாம் என லண்டன் நகர பொலிஸார் ஏற்கனவே எச்சரித்துள்ள நிலையில் நேற்று முன்தினம் நிகழ்ந்த இந்த மோதல் விமான நிலைய அதிகாரிகளை பரபரப்படைய வைத்துள்ளது.

ஜெனிவா நகரில் இருந்து வந்த அந்த பிரிட்டிஷ் ஏர்வேஸ் விமானம் பிற்பகல் 12.50 மணியளவில் லண்டனில் உள்ள ஹீத்ரோ சர்வதேச விமான நிலையத்தில் தரையிறங்க முயன்றது. அப்போது விமானத்தின் முன் பகுதி மீது ஒரு சிறியரக ஆளில்லா விமானம் மோதியதாக கட்டுப்பாட்டு அறையை தொடர்பு கொண்ட விமானி தெரிவித்தார்.

அதிர்ஷ்டவசமாக இந்த மோதலால் பிரிட்டிஷ் ஏர்வேஸ் விமானத்துக்கு எவ்விதசேதமும் ஏற்படவில்லை. 132 பயணிகள் விமானிகள் உள்ளிட்ட ஐந்து பணியாளர்களுடன் ஹீத்ரோ சர்வதேச விமான நிலையத்தின் ஐந்தாவது ஓடுபாதையில் அந்த விமானம் பத்திரமாக தரையிறங்கியது.

தீவிரமாக சோதனையிட்டபோது அந்த விமானத்துக்கு பெரியளவிலான பாதிப்பு ஏதும் ஏற்படவில்லை என்பது உறுதிப்படுத்த பின்னர் அந்த விமானம்தொடர்ந்துபறக்கஅதிகாரிகள் அனுமதி அளித்துள்ளனர். (இ-5)





யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி 2009 உயர்தர பிரிவு மாணவர்கள் ஏற்பாட்டில் இடம்பெற்ற இரத்ததான நிகழ்வுகளின் போது 20 இற்கு மேற்பட்ட இந்துக்கல்லூரி மாணவர்கள் குருதி கொடையில் தங்களை இணைத்துக் கொண்டனர்.

# தொலைபேசியில் உரையாடல்; மின்சாரம் பாய்ந்து பெண் பலி

மலேசியாவில்கையடக்க தொலைபேசியை சார்ஜ் செய்யும் போதே பேசிய பெண் மின்சாரம் பாய்ந்து பலியானார்.

மலேசியாவின் ஷெராஸ் நகர்ப் பகுதியைச் சேர்ந்தவர் சுஹானா முகமது (வ்யது-30). இவர் கடந்த வெள்ளிக்கிழமை இரவு தொலைபேசியை சார்ஜ் செய்தபடியே உறவினர்களிடம் பேசியுள்ளார்.

அப்போது எதிர்பாராத விதமாக அந்தப் பெண்மீது மின்சாரம் பாய்ந்தது. இந்தச் சம்பவத்தின்போது அவரது கணவர் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்துள்ளார். விபத்து குறித்து தகவல் அறிந்து சம்பவம் நடந்த இடத்துக்கு வந்த வைத்தியர்கள் அதிகாரிகள் சுஹானாவை பரிசோதித்ததில் அவர் இறந்துவிட்டதாக தெரிவித்தனர். (இ-5)


யாழ்.துன்னாலை வடக்கு வல்லியானந்தம் ஆயில் நின்நெல்லை பிள்ளையார் ஆலயத்தில் அண்மையில் நடைபெற்ற வருடாந்த தேர் உற்சவத்தின் போது.. (படங்கள்:- கரணவாய் செய்தியாளர்)




கரவெட்டி ஸ்ரீ பரமானந்த முதியோர், சிறுவர் இல்லம் நடத்திய ஸ்ரீ பரமானந்த சுவாமிகளின் குருபூசை நிகழ்வு அண்மையில் நடைபெற்ற போது...



யாழ். ஆரியகுளம் சந்தியில் அமைந்துள்ள கோணேஸ்வரன் ஜேர்மன் கல்லூரியின் ஊடாக கொழும்பில் நடத்தப்பட்ட டொச் ஏ.மொழி பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்து சான்றிதழ்கள் பெற்றுக்கொண்ட மாணவர்கள், ஆசிரியர் கோணேஸ்வரனுடன் நிற்பதை படத்தில் காணலாம்.





யாழ்.அராலி மத்தி ஸ்ரீமுருகன் சனசமூக நிலைய 76ஆம் ஆண்டு விழா கடந்த வியாழக்கிழமை நிலையத்தலைவர் ச.மோகனதாசன் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் விருந்தினராக வடமாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் கலந்துகொண்டதுடன், வலி.மேற்கு (சுழிபுரம்) பிரதேசசபையின் செயலாளர் திருமதி.கு.சண்முகலிங்கம் மற்றும் பலரும் கலந்துகொண்டனர். நிகழ்வில் கலைநிகழ்வுகள் இடம்பெற்றதுடன் நிகழ்வில் வெற்றிபெற்றோருக்கான பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன.

(படங்கள்:-கிஷோர்)




திருநெல்வேலி சிறுவர் பூங்கா முன்பள்ளியின் நூலகத் திறப்பு விழாவும் பெற்றோர்களுக்கான சிறுவர் பாதுகாப்பு அறிவுறுத்தல் நிகழ்வும் அண்மையில் நடைபெற்ற போது...





நெல்லண்டையான் வெளியீட்டுக் கழகம் நடத்திய பேராசிரியர் அருணாசலம் சண்முகதாஸ், பேராசிரியர் மனோன்மணி சண்முகதாஸ் ஆகியோரின் நூல்களின் வெளியீட்டு நிகழ்வு அண்மையில் நெல்லியடி தடங்கன் புளியடி முருகன் ஆலய திருமண மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டிருந்தார்.

(படங்கள்: கரணவாய் செய்தியாளர்)

# பயங்கரவாதத்திற்கு அடிபணிய மாட்டோம்



## பிரஸல்ஸில் அணி திரண்ட மக்கள்

தீவிரவாதத்திற்கு எதிராக பெல்ஜியம் தலைநகர் பிரஸல்ஸில் குவிந்த ஆயிரக்கணக்கானோர், பெல்ஜியம் பயங்கரவாதிகளுக்கானதல்ல என முழக்கங்களை எழுப்பினர்.

கடந்த மார்ச் மாதம் பிரஸல்ஸ் நகரில் நடந்த தீவிரவாத தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்காக அஞ்சலி செலுத்தும் நோக்கில் இந்த ஊர்வலத்தை நேற்று முன்தினம் ஒருங்கிணைத்திருந்தனர்.

ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என சுமார் 7 ஆயிரம் பேர் இந்த ஊர்வலத்தில் பங்கேற்றுள்ளதாக பொலிசார் தெரிவித்துள்ளனர். பிரஸல்ஸ் தாக்குதலில் கொல்லப்பட்டவர்களின் உறவினர்களும், படுகாயம் அடைந்தவர்களின் உறவினர்களும் இந்த ஊர்வலத்தில் கலந்து கொண்டு தங்கள் ஆதரவை தெரிவித்துள்ளனர்.

ஊர்வலத்தில் கலந்து கொண்ட மக்களில் சிலர் ஐ.எஸ்.அமைப்பிற்கு எதிரான வாசகங்கள் பொறிக்கப்பட்ட பதாகைகளை தாங்கியிருந்தனர்.

அதில், பெல்ஜியம் பயங்கரவாதிகளுக்கான நாடல்ல, ஐ.எஸ். அமைப்பே வெளியே போ போன்ற வாசகங்கள் பொறிக்கப்பட்டிருந்தது.

ஊர்வலத்தின் முடிவில் பாதிக்கப்பட்டவர்களை நேரில் சந்தித்து பிரதமர் சார்லஸ் ஆறுதல் தெரிவித்தார். கடந்த மார்ச் மாதம் 22 ஆம் திகதி பிரஸல்ஸ் நகரில் இரு வேறு இடங்களில் வெடிகுண்டு தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் 32 பேர் கொல்லப்பட்டனர் 300 இற்கும் அதிகமானோர் படுகாயமடைந்தனர். (இ-5)

# ஆப்கானில் 161 குழந்தைகள் கொடூரக் கொலை!

## ஐ.நா.அதிர்ச்சித் தகவல்

ஆப்கானிஸ்தானில் கடந்த 3 மாதங்களில் மட்டும் 161 குழந்தைகள் கொடூரமாக கொல்லப்பட்டுள்ளதாக ஐ.நா. சபையின் மனித உரிமைகள் அமைப்பு அதிர்ச்சி தகவலை வெளியிட்டுள்ளது.

ஆப்கானிஸ்தான் அரசாங்க ஆதரவு படைகள் மற்றும் தலிபான் தீவிரவாதிகளுக்கு இடையே தொடர்ந்து யுத்தம் நடைபெற்று வருகிறது.

இது தொடர்பாக ஆப்கானிஸ்தான் நாட்டுக்கான மனித உரிமைகள் அமைப்பின் (UNAMA) இயக்குநரான Danielle Bell நேற்று அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அதில், கடந்த ஜனவரி முதலாம் திகதி முதல் மார்ச் 31 ஆம் திகதி வரை இருதரப்பினருக்கு இடையே நடைபெற்ற மோதல்களில் 161 குழந்தைகள் கொல்லப்பட்டுள்ளனர்.

இதே மாதங்களில் கடந்த 2015 ஆம் ஆண்டு நிகழ்ந்த குழந்தைகள் உயிரிழப்புகளை ஒப்பிடுகையில், இந்த எண்ணிக்கை 29 சதவிகிதம் அதிகரித்துள்ளது.

பாடசாலைகள், விளையாட்டு மைதானங்கள், குடியிருப்புகள், வைத்தியசாலைகள் உள்ளிட்ட பகுதிகளில் தாக்குதல்கள் நிகழ்ந்ததால் இந்த உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன. இதுமட்டுமல்லாமல், இதே மாதங்களில் நிகழ்ந்த பல்வேறு தாக்குதல்களில் 52 பெண்கள் உட்பட 600 பேர் கொல்லப்பட்டுள்ளதாகவும், 1,343 பேர் படுகாயம் அடைந்துள்ளதாகவும் அந்த அறிக்கையில் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், இந்த எண்ணிக்கையை கடந்த 2015 ஆம் ஆண்டின் முதல் 3 மாதங்களை ஒப்பிடுகையில் 2 சதவிகிதம் அதிகரித்துள்ளதாக Danielle Bell கண்டனம் தெரிவித்துள்ளார். (இ-5)

# தென்கிழக்காசிய நாடுகளில் கடுமையான தண்ணீர் பஞ்சம்

## அணையைத் திறக்கும் சீனா

தென்கிழக்கு ஆசிய நாடுகளில் கடுமையான தண்ணீர் பஞ்சம் ஏற்பட்டுள்ளதால் தங்களது அணைகளில் இருந்து தண்ணீரை திறந்துவிட சீனா முடிவு செய்துள்ளது.

எல்நினோ விளைவு காரணமாக பூமியில் திடீர் மழை, கடும் வெயில் போன்றவை ஏற்பட்டு வருகின்றன. இந்த எல்நினோ தென்கிழக்கு ஆசிய நாடுகளையும் விட்டு வைக்கவில்லை.

இதனால் கடந்த பத்து ஆண்டுகளில் சந்திக்காத வறட்சியை தாய்லாந்து சந்தித்து வருகிறது. அங்குள்ள 76 மாகாணங்களில் 14 மாகாணங்கள் தண்ணீர் பஞ்சத்தில் தவித்து வருகின்றன.

வியட்நாமின் நிலையோ இன்னும் மோசமாக உள்ளது. கடந்த 90 ஆண்டுகளில் பார்த்திராத பஞ்சத்தை அந்நாட்டு மக்கள் அனுபவித்து வருகின்றனர்.

1.8 மில்லியன் குடிமக்கள் தண்ணீர் இல்லாமல் அவதிப்படுகின்றனர். இதேபோல் லாவோஸ், கம்போடியா ஆகியவையும் தண்ணீர் இல்லாமல் தவித்து வருகின்றன.

இந்நிலையில் வறட்சியை ஓரளவு போக்கும் விதமாக தங்கள் நாட்டில் உள்ள அணைகளில் இருந்து தண்ணீரை திறந்துவிட சீனா முடிவு செய்துள்ளது.

இது தொடர்பாக சீனாவின் வெளியுறவுத்துறை அமைச்சகத்தின் செய்தி தொடர்பாளர் லூ காங் கூறுகையில், நீர் குறைந்துள்ள இந்த காலம் முழுவதுமே அணைகள் திறந்திருக்கும்.

இதன் மூலம், தாய்லாந்து வியட்நாம், லாவோஸ், மியன்மார் போன்ற நாடுகள் நன்மை பெறும் என்று தெரிவித்துள்ளார். (இ-5)

# ஈக்குவடோரில் நிலநடுக்கத்தால் 272 பேர் இதுவரை உயிரிழப்பு

## 1500 பேர் படுகாயம்



ஈக்குவடோரில் நாட்டில் ஏற்பட்ட சக்தி வாய்ந்த நிலநடுக்கத்தில் சிக்கி பலியானவர்களின் எண்ணிக்கை 272 ஆக அதிகரித்துள்ளதுடன், ஆயிரத்து 500 பேர் வரை படுகாயம் அடைந்துள்ளதாக அதிர்ச்சி தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடந்த சனிக்கிழமை நள்ளிரவு 11 மணியளவில் ரிக்டரில் 7.8 என்ற அளவில் பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்த நிலநடுக்கத்தில் ஏராளமான கட்டடங்கள் இடிந்து விழுந்ததில் நூற்றுக்கணக்கான மக்கள் இடிபாடுகளுக்குள் சிக்கி உயிரிழந்தனர்.

தற்போது வெளியாகியுள்ள அதிகாரபூர்வ தகவலில் இதுவரை 272 பேர் வரை பலியாகியுள்ளதாகவும், 1,500க்கும் மேற்பட்டவர்கள் படுகாயம் அடைந்து பல்வேறு வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருவதாக மீட்பு பணியில் ஈடுபட்டுள்ள பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-5)

# நல்லெண்ண நடவடிக்கையாக 83அரசியல் கைதிகள் விடுதலை

## 4 பத்திரிகையாளர்களும் உள்ளடக்கம்


(நேப்பிதா.)

மியன்மாரில் அரை நூற்றாண்டுக்கு பின்னர் இப்போதுதான் மக்களாட்சி மலர்ந்துள்ளது. அந்த நாட்டின் ஜனாதிபதியாக சூகியின் வலதுகரமாக கருதப்படக்கூடிய அவரது முன்னாள் சாரதியும், நண்பருமான ஹதின் கியாவ், கடந்த மாத இறுதியில் பதவி ஏற்றார்.

இந்த நிலையில் நல்லெண்ண நடவடிக்கையாக அந்த நாட்டில் பல்வேறு அரசியல் குற்றங்களில் ஈடுபட்டு, சிறைவாசம் அனுபவித்து வந்த அரசியல் கைதிகள் 83 பேரை விடுதலை செய்வதற்கு ஜனாதிபதி ஹதின் கியாவ் அதிரடி உத்தரவு பிறப்பித்தார்.

இது தொடர்பாக அவர் கடந்த (சனிக்கிழமை) பிறப்பித்த உத்தரவில், "நல்லெண்ண நடவடிக்கையாகவும், மன அமைதியை ஏற்படுத்தும் விதமாகவும் மியன்மார் புத்தாண்டையொட்டி இந்த பொது மன்னிப்பு வழங்கப்படுகிறது" என கூறி உள்ளார்.

ஜனாதிபதியின் உத்தரவை அடுத்து விடுதலை செய்யப்பட்ட அரசியல் கைதிகளில் 4 பத்திரிகையாளர்கள், ஒரு பத்திரிகை அலுவலக அதிகாரி ஆகியோரும் அடங்குவர். இவர்கள் இராணுவத்தின் ரசாயன ஆயுத தயாரிப்பு தொழிற்சாலை பற்றிய செய்தியை வெளியிட்டதற்காக கடந்த 2014 ஆம் ஆண்டு 10 ஆண்டு கடுங்காவல் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டவர்கள் ஆவார்கள்.



மியன்மாரில் தேசிய ஜனநாயக லீக் கட்சி பதவிக்கு வந்த இந்த 18 நாளில் 282 அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட்டுள்ளனர் அல்லது அவர்கள் மீதான குற்றச்சாட்டு ரத்து செய்யப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# கச்சதீவை மீட்பேன் என்பது ஜெயாவின் கபட நாடகமே

## கருணாநிதி குற்றச்சாட்டு



(சென்னை)

கச்சதீவை மீட்பேன் என்பது ஜெயலலிதாவின் கபட நாடகம் என கலைஞர் கருணாநிதி தெரிவித்துள்ளார்.

தி.மு.க. தலைவர் கருணாநிதி நேற்று முன்தினம் வெளியிட்ட அறிகையில் கூறியிருப்பதாவது,

தேர்தல் பிரசாரம் செய்ய ஜெயலலிதா தொடங்கிய நாளிலிருந்து, என்னைப் பற்றி ஏதாவது குறை சொல்லிப் பேசாவிட்டால் அவருக்கு பேசிய மனநிறைவே இருக்காது போலும். ஆனால் நம்மைப் பொறுத்தவரையில் அவர் எழுப்பும் பிரச்சினைகளின் மூலம் நாட்டு மக்களுக்கு விளக்கம் அளிக்க நல்ல வாய்ப்பு கிடைக்கிறது என்ற வகையில் மகிழ்ச்சிதான்.

வாக்களிக்கப் போகும் முன்னர், ஜெயலலிதாவின் குற்றச்சாட்டுகளையும் படிக்கட்டும், நான் அவற்றிற்கு அன்றாடம் தருகின்ற விரிவான பதில்களையும் படிக்கட்டும், எது உண்மை, யார் பக்கம் நியாயம் என்று தெளிவடையட்டும். அருப்புக்கோட்டையில் பேசிய ஜெயலலிதா, 'கச்சதீவு தாரை வார்க்கப்பட்டதற்கு கருணாநிதி உடந்தை என்பதை நான் அழுத்தம் திருத்தமாகக் குற்றம் சாட்டுகிறேன். அ.தி.மு.க. ஆட்சி அமைந்தவுடன் உச்ச நீதிமன்றத்தின் மூலம் கச்சதீவு மீட்கப்பட்டு தமிழக மீனவர்களின் உரிமைகள் நிலைநாட்டப்படும்' என்று குறிப்பிட்டிருக்கிறார்.

20.04.1992 அன்று தமிழகச் சட்டப்பேரவையில் பேசிய ஜெயலலிதா என்ன சொன்னார் தெரியுமா? 'கச்சதீவை மீட்பது என்பது விரைவில் நடக்கக்கூடிய, நடைபெறக்கூடிய ஒன்றாக தெரிய வில்லை' என்று, மீட்பதற்கு முற்றுப்புள்ளி வைத்ததைப் போலப் பேசியது அவைக் குறிப்பில் இன்னமும் இருக்கிறது.

இந்த பிரச்சினையில் நான் துரோகம் செய்து விட்டதாக அம்மையார் (ஜெயலலிதா) இதுவரை எத்தனை முறை அறிக்கை விடுத்திருக்கிறார் என்று எண்ணித்தான் பார்க்க வேண்டும்.

ஒவ்வொரு முறையும், கச்சதீவினை நானும், மத்திய அரசும் சேர்ந்து கொண்டு தாரை வார்த்து விட்டதாகப் புகார்களை அடுக்கத் தொடங்கி விடுவார்.

கச்சதீவைத் தாரை வார்க்க தி.மு.க. எந்த காலத்திலும் ஒப்புக் கொள்ளவில்லை.

தாரை வார்க்க உடன்படவும் இல்லை என்பதை எந்த நேரத்திலும், ஏந்த இடத்திலும் நான் அறைகூவல் விட்டுச் சொல்லத் தயார் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## இந்த விஜயகாந்தை நம்புங்கள்!



திருவண்ணாமலை மாவட்டம் ஆரணி தொகுதி தே.மு.தி.க. வேட்பாளர் ஆர்.எம்.பாபுமுருகவேலை ஆதரித்து ஆரணியில் நடைபெற்ற தே.மு.தி.க.பிரசாரப் பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் பேசினார்.

அதில் அவர் பேசியதாவது, அ.தி.மு.க. என்னை பயமுறுத்தினால் நான் பயப்படமாட்டேன். எங்கள் கட்சிக்காரர்கள் மிலிட்டரிக்காரர்கள், நாங்கள் அதற்கெல்லாம் பயப்படமாட்டோம்.

தே.மு.தி.கவிலிருந்து நிர்வாகிகள் சிலர் விலகி சென்றுள்ளதால் கட்சிக்கு எந்த பாதிப்பும் இல்லை. அ.தி.மு.க. ஆட்சிக்கு முடிவு கட்டவே தே.மு.தி.க.-மக்கள் நலக் கூட்டணியில் 6 கட்சித் தலைவர்கள் ஒன்றிணைந்து உள்ளோம்.

தி.மு.க. பொருளாளர் மு.க. ஸ்டாலின், அப்பாவையும் அண்ணனையும் ஏமாற்றி அறிவாலயத்தை வேண்டுமானால் பிடிக்கலாம்.

ஆனால், ஆட்சியை பிடிக்க முடியாது. அன்று வெள்ளைக்காரர்களை வெளியேற்ற மக்கள் ஒன்று கூடினார்கள் இன்று கொள்ளைக் காரர்களை வெளியேற்ற 6 தலைவர்கள் ஒன்றாக சேர்ந்திருக்கிறோம்.

இந்த விஜயகாந்தை நம்புங்கள். 6 கட்சிகள் கூட்டணி சேர்ந்து, எனக்கு 234 தொகுதிகளிலும் வெற்றியை கொடுப்பார்கள் என்று தெரிவித்தார். (இ-5)

## பணநாயகத்தை ஒழித்து ஜனநாயகத்தை மக்கள் ஒளிரச் செய்ய வேண்டும்- சீமான்



இந்த தேர்தலில் பணநாயகத்தை ஒழித்து ஜனநாயகத்தை மக்கள்ஒளிரச் செய்யவேண்டும்என்று நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்துள்ளார்.

கடலூர் சட்டமன்ற தொகுதியில் போட்டியிடும் நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான், கடலூரில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வருகிறார்.

அப்போது பேசிய அவர், மாற்றம் என்பது ஆட்சி மாற்றம் அல்ல. கொள்கை மாற்றம். பணம் இருந்தால்தான் அரசியல் செய்ய முடியும் என்றால் பணநாயகம் தான் இருக்கும். ஜனநாயகம் இருக்காது.

பணக்காரர்களுக்கும், முதலாளிகளுக்கும் அரசியல் செய்தால் மக்களுக்கான அதிகாரம் இருக்காது. மண்ணையும், மக்களையும் நேசிக்கிறவர்கள் அரசியல் செய்ய முடியும் என்பதை உருவாக்க வேண்டும்.

பணநாயகத்தை ஒழித்து ஜனநாயகத்தை மக்கள் ஒளிரச் செய்ய வேண்டும். தீய, சர்வாதிகார ஆட்சியை அகற்றி, தன்னலமற்ற தூய ஆட்சியை மலரச் செய்வதே மாற்றம்.

இந்த தேர்தலில் பணம் ஒரு பொருட்டாக இருக்கப் போவதில்லை. மாற்றத்திற்கான தேர்தலாக இதை பார்க்க வேண்டும்.

அதற்காக தான் மாற்றம் என்பது சொல் அல்ல, செயல் என்று நாங்கள் கூறிவருகிறோம். இரட்டை இல்லை, உதய சூரியன் சின்னத்துக்கு வாக்களித்து அடிமைப்பட்டு கிடக்கப்போகிறீர்களா? என சீமான் கேள்வி எழுப்பினார். (இ-5)

## இருபது ஆண்டுகளின் பின்னர் சட்டசபைத் தேர்தலில்.வைகோ



(சென்னை)

ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ 20 வருடங்களுக்கு பின்னர் மீண்டும் சட்டசபைத் தேர்தல் களத்தில் இறங்கியுள்ளார்.

வைகோ தேர்தல்களில் போட்டியிட்டது மிக மிகக் குறைவுதான். இத்வரை அவர் மொத்தமே 5 முறைதான் தேர்தலில் போட்டியிட்டுள்ளார்.

ஆனால் அதிக முறை அவர் ராஜ்யசபா உறுப்பினராக இருந்துள்ளார். வைகோ முதன் முறையாக சட்டசபைத் தேர்தலில் போட்டியிட்டது 1996 ஆம் ஆண்டு தான்.

1993 இல் தான் அவர் ம.தி.மு.கவைத் தொடங்கியிருந்தார். அடுத்த 3 வருடத்தில் சட்டசபைத் தேர்தலில் போட்டியிட்டார்.

1996இல் நடந்த தேர்தலில் வைகோ விளாத்திகுளம் தொகுதியில் போட்டியிட்டார். ஆனால் வெறும் 634 வாக்குகள் வித்தியாசத்தில் அவர் தோல்வியைத் தழுவினார்.

அதன்பின்னர் அவர் சட்டசபைத் தேர்தலில் போட்டியிடவில்லை. மாறாக மக்களவை தேர்தலில் போட்டியிட ஆரம்பித்தார்.

1996இல் நடந்த மக்களவை தேர்தலில் சிவகாசி தொகுதியில் போட்டியிட்டு 3வது இடத்தைப் பிடித்தார். இதையடுத்து 1998 மற்றும் 1999இல் நடந்த மக்களவை தேர்தலில் அதே சிவகாசி தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

2014 ஆம் ஆண்டு மீண்டும் மக்களவை தேர்தலில் விருதுநகரில் போட்டியிட்டார். இதில் அவருக்குத் தோல்வியே கிடைத்தது.

இந்நிலையில் தற்போது மீண்டும் சட்டசபைத் தேர்தலுக்கு திரும்பியுள்ளார் வைகோ. கோவில்பட்டியில் அவர் களம் காண்கிறார்.

இதுவரை சட்டசபைக்குள் நுழைந்திராத வைகோவுக்கு கோவில்பட்டி வாசல் திறக்குமா என்பதை பொருத்திருந்துதான் பார்க்க வேண்டும். (இ-5)

### பாரதச் செய்தி

## தேர்தல் ஆணையத்தை மதித்து நடக்க வேண்டும்

### மம்தாவுக்கு மோடி அறிவுரை



தேர்தல் ஆணையத்தை மதித்து நடக்க வேண்டும் என மம்தா பானர்ஜிக்கு பிரதமர் மோடி அறிவுரை வழங்கியுள்ளார்.

மேற்கு வங்க மாநிலத்தில் முதல் கட்ட தேர்தல் நடந்து முடிந்துள்ளது. இரண்டாம் கட்ட தேர்தல் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்நிலையில், 3ஆம் கட்ட தேர்தலை முன்னிட்டு நாடியா மாவட்டம் கிருஷ்ணன் நகரில் நடந்த தேர்தல் பிரசாரத்தில் பிரதமர் மோடி கலந்துகொண்டு பேசியுள்ளார்.

அவர் பேசுகையில், நடைபெறும் சட்டசபைத் தேர்தலில் மம்தா, அரசியல் கட்சிகளுடன் மட்டும் மோதாமல், தேர்தல் ஆணையத்துடன் மோதுகிறார்.

உலக நாடுகள் அனைத்தினாலும் மதிக்கப்படும் அமைப்பு நம் தேர்தல் ஆணையம். நாம் தேர்தல் ஆணையத்தை மதிக்க வேண்டும். அரசியல் சாசனப்படி அமைக்கப்பட்ட அமைப்புகளுக்கு மரியாதை அளிக்கப்பட வேண்டும்.

மம்தாவின் பேச்சுக்கு எதிராக தேர்தல் ஆணையம் நோட்டீஸ் அனுப்பியது. இந்த நோட்டீசுக்கு மேற்கு வங்க தலைமைச் செயலாளர் பதில் அனுப்பியதாக கேள்விப்பட்டேன்.

இது உண்மையாக இருந்திருந்தால், மிகப்பெரிய தவறு ஆகும். தேர்தல் ஆணையம் நோட்டீஸ் அனுப்பியது திரிணமுல் காங்கிரஸ் கட்சி தலைவர் மம்தாவிற்கு. முதல்வர் மம்தாவிற்கு அல்ல.

அரசு இயந்திரத்தை தவறாக பயன்படுத்தியதற்காக முன்னாள் பிரதமர் இந்திரா கூட தண்டிக்கப்பட்டுள்ளார். இந்தியாவின் கிழக்குப்பகுதி முன்னேறாவிட்டால், இந்தியாவின் வளர்ச்சி முற்றுப் பெறாது.

காங்கிரசும் இடதுசாரிகளும் ஒருவரை ஒருவர் நன்கு அறிவார்கள். இவர்களுக்கு பொது வாழ்க்கையில் எந்த கொள்கையுமில்லாமல் மக்களை தவறாக வழிநடத்துகின்றனர்.

மேலும், நான் மேற்கு வங்கத்தை மாற்ற மூன்று அம்சத் திட்டத்தை வைத்துள்ளேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# 24 மணித்தியாலத்திற்குள் ரூ.2 கோடி வருமானம்

கடந்த 15ஆம் திகதி வெள்ளிக் கிழமையன்று மாத்திரம், அதி வேக நெடுஞ்சாலை மூலம் ஒரு கோடியே 76 இலட்சம் ரூபாய் வருமானம் ஈட்டப்பட்டுள்ளதாக, அதிவேக நெடுஞ்சாலைகள் பணிப்பாளர் எஸ்.ஓபநாயக்க தெரிவித்தார்.

குறித்த தினத்தில் மாத்திரம், அதிவேக நெடுஞ்சாலையில் 5 இலட்சத்து 57 ஆயிரத்து 023 வாகனங்க்ள் பயணித்துள்ளன என்று தெரிவித்த அவர், அவற்றில் பெருமளவான வாகனங்கள் (9,600 வாகனங்கள்) கடவத்தையூடாகவே, அதிவேக நெடுஞ்சாலைக்குள் பிரவேசித்துள்ளன என்றும் கூறினார்.

கடந்த 8 ஆம் திகதிக்கும் 12 ஆம் திகதிக்கும் இடையில், அதி வேக நெடுஞ்சாலை, அதிக வேலைப பளுவுடன் காணப்பட்டது. அக்காலப் பகுதியில் அதிவேக நெடுஞ்சாலையில் 23 விபத்துகள் ஏற்பட்டு, மூவர் காயமடைந்தனர். அத்துடன், 100 தொழில்நுட்பக் கோளாறுகள் இடம் பெற்றன என்றும் அவர் தெரிவித்தார்.

அத்துடன், சுமார் 300 மீற்றர் தூரத்துக்கு வாகன நெரிசல் ஏற்பட்டதுடன், இதனால், பயணப் பணத்தை வசூலிக்கும் அதிகாரிகள், வாகனங்களுக்கு அருகில் சென்று பணத்தை வசூலித்ததாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ)

## நாணயமாற்று விகிதம்

மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கை-18.04.2016

| நாணயம் | நாடு | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|---|
| டொலர் | அமெரிக்கா | 142.86 | 146.66 |
| பவுண்ட் | பிரிட்டன் | 201.67 | 208.86. |
| ஈரோ | ஐரோப்பிய ஒன்றியம் | 160.20 | 166.61 |
| பிராங் | சுவிட்சர்லாந்து | 146.69 | 152.82 |
| டொலர் | கனடா | 109.54 | 114.12 |
| டொலர் | அவுஸ்திரேலியா | 108.46 | 113.53 |
| டொலர் | சிங்கப்பூர் | 104.70 | 108.72 |
| ரூபா | இந்தியா | 2.1594 | ------- |
| யுவான் | சீனா | 22.2017 | ------- |

மத்திய கிழக்கு நாடு

| நாடு | நாணயம் | பெறுமதி |
|---|---|---|
| பகரெயின் | டினார் | 381.6470 |
| குவைத் | டினார் | 477.0429 |
| ஓமான் | ரியால் | 373.7517 |
| கட்டார் | ரியால் | 39.5167 |
| சவுதி அரேபியா | ரியால் | 38.3713 |
| ஐக்கிய அரபு எமிரேட்ஸ் | டிராம் | 39.1671 |

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 100 | 45 | 80 | 80 | 80 |
| உருளைக்கிழங்கு | 90 | 100 | 75 | 80 | 90 | 90 |
| பச்சைமிளகாய் | 120 | 100 | 100 | 100 | 100 | 100 |
| தக்காளி | 100 | 100 | 80 | 100 | 120 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 50 | 40 | 40 | 60 | 50 |
| கோவா | 60 | 80 | 35 | 70 | 80 | 50 |
| கரட் | 100 | 100 | 90 | 80-200 | 120 | 100 |
| பூசணி | 30 | 30 | 15 | 40 | 40 | 40 |
| புடோல் | 70 | 40 | 35 | 60 | 60 | 40 |
| வாழைக்காய் | 30 | 40 | 30 | 60 | 40 | 40 |
| சின்ன வெங்காயம் | 120 | 100 | 90 | 80-120 | 100 | 70 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 70 | 90 | 80 | 80 |
| பாகற்காய் | 100 | 100 | 100 | 100 | 120 | 100 |
| வெண்டிக்காய் | 80 | 100 | 50 | 80 | 100 | 100 |
| கருணைக் கிழங்கு | 80 | 100 | — | 80 | 120 | 100 |
| பயற்றங்காய் | 70 | 100 | 60 | 80 | 60 | 80 |
| லீக்ஸ் | 120 | 100 | 100 | 120 | 160 | 140 |
| பீற்றூட் | 100 | 100 | 65 | 80 | 120 | 70 |
| கறிமிளகாய் | 80 | 100 | 80 | 100 | 160 | 100 |
| முருங்கைக்காய் | 400 | 400 | 250 | 300-500 | 400 | 400 |
| போஞ்சி | 250 | 300 | 100 | 120 | 200 | 140 |
| கத்தரிதம்புள்ள | 40 | 40 | 40 | — | 60 | 70 |
| கீரை - 1பிடி | 20 | 30-50 | 20 | 40 | 20 | 20 |
| தேசிக்காய் | 300 | 400 | 300 | 400 | 450 | 250 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 30-50 | 15-30 | 50 | 30-40 | 40 |
| இராசவள்ளி | 150 | 250 | 110 | 140 | 160 | 140 |
| வெங்காயப்பூ | 240 | 300 | — | — | — | — |
| முள்ளங்கி | 60 | 60 | 30 | 50 | 120 | 40 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 70 | 30 | 40 | 25 |
| வல்லாரை | 10 | 20 | 10 | 10 | 20 | 15 |
| ஈரப்பலா | 80 | — | — | — | — | — |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## பிரபாகரன் முதல் குற்றவாளியாக சேர்ப்பு 159

சென்னை கொடுங்கையூரில் சிவராசனின் கூட்டாளி சாந்தன் கைது செய்யப்பட்டான். அவனிடமிருந்து சிவராசனின் ரகசிய டைரி கைப்பற்றப்பட்டது.

**சிவராசன் தற்கொலை**

பெங்களூர் அருகில் உள்ள கோனை குண்டேயில் சிவராசன், சுபா மற்றும் கொலையாளிகள் பதுங்கி இருப்பதாக பொலிஸாருக்குத் தகவல் கிடைத்தது.

ஓகஸ்ட் 19 ஆம் திகதி அன்று அந்த வீட்டைப் பொலிஸார் முற்றுகையிட்டனர். பொலிஸாக்கும் அவர்களுக்கும் துப்பாக்கிச் சண்டை நடந்தது.

இறுதியில் யாரையும் உயிரோடு பிடிக்க இயலவில்லை. சுபா உட்பட 5 பேர் சயனைட் அருந்தி இறந்தனர். சிவராசன் துப்பாக்கியால் தலையில் சுட்டு தற்கொலை செய்து கொண்டான்.

கொலை நடந்த 91 நாட்களில் மேற்கண்ட சம்பவங்கள் சினிமா படம்போல நடந்து முடிந்தன.

**குற்றப்பத்திரிகை**

1992 ஆம் ஆண்டு மே மாதம் 20 ஆம் திகதி சிறப்புப் புலனாய்வு பிரிவினர் தனிக் கோர்ட்டில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தனர்.

1993 ஆம் ஆண்டு மே மாதம் 5 ஆம் திகதி சென்னையை அடுத்த பூத்தமல்லியில் உள்ள தனிக்கோர்டில் சாட்சிகள் விசாரணை தொடங்கியது. நவம்பர் 2 ஆம் திகதி அந்த விசாரணை முடிந்தது.

1994 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 19 ஆம் திகதி சாட்சிகளிடம் குறுக்கு விசாரணை தொடங்கியது.

**குற்றவாளியாக பிரபாகரன் அறிவிப்பு**

அதே ஆண்டு மே மாதம் 29 ஆம் திகதி இந்த வழக்கில் விடுதலைப்புலித் தலைவர் பிரபாகரன், பொட்டு அம்மன், அகிலா ஆகியோர் குற்றவாளிகளாக அறிவிக்கப்பட்டனர்.

ஜூன் மாதம் 3 ஆம் திகதி அவர்கள் 3 பேரையும் பிடித்துத் தரும்படி இலங்கை அரசுக்கு இந்திய அரசு வேண்டுகோள் விடுத்தது.

1997 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 11 ஆம் திகதி வழக்கு விசாரணை முடிவுக்கு வந்தது.

**26 பேருக்கும் தூக்குத் தண்டனை**



நீதிபதி நவநீதம்

1998 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 28 ஆம் திகதி இந்த வழக்கில் தீர்ப்பு அளிக்கப்பட்டது.

குற்றம் சாட்டப் பட்ட நளினி, முருகன் உட்பட 26 பேருக்கும் நீதிபதி வி.நவநீதம் தூக்குத் தண்டனை விதித்து தீர்ப்புக் கூறினார்.

குற்றங்கள் நிரூபிக்கப்பட்டதால் இந்த மிருகத்தனமான கொடூரமான கொலையைச் செய்த 26 பேருக்கும் தூக்குத் தண்டனை விதிப்பதாகவும் 26 பேரும் சாகும் வரை தூக்கில் தொங்கவிடப்பட வேண்டும் என்றும் நீதிபதி தனது தீர்ப்பில் குறிப்பிட்டார்.

சுப்ரீம் கோர்ட் உறுதி செய்த பின்னர் இவர்களின் மரண தண்டனையை நிறைவேற்ற வேண்டும் என்றும் நீதிபதி தனது தீர்ப்பில் கூறினார்.

ராஜீவ்காந்தி கொலை வழக்கு தீர்ப்பு 2 ஆயிரம் பக்கங்களைக் கொண்டதாகும். இதுபோன்ற பெரிய தீர்ப்பு இதுவரை வழங்கப்பட்டதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

**முதல் முறை**

ஒரே வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட 26 பேருக்கும் தூக்குத்தண்டனை விதிக்கப்பட்டிருப்பது இந்திய வரலாற்றில் இதுவே முதல் முறையாகக் கருதப்படுகிறது.

மகாத்மா காந்தி கொலை வழக்கு 1 1/2 ஆண்டில் விசாரித்து முடிக்கப்பட்டது. இந்திராகாந்தி வழக்கு 2 1/2 ஆண்டில் விசாரிக்கப்பட்டது. இந்த வழக்கில் அப்பீல் விசாரணை எல்லாம் முடிய மொத்தம் 5 ஆண்டு ஆயின.

ஆனால் ராஜீவ்காந்தி கொலை வழக்கு தனிக் கோர்ட்டில் விசாரணை செய்து முடிக்க 7 1/2 ஆண்டு ஆகிவிட்டது என்பது குறிப்பிடத்தக்கது. அதிக ஆண்டுகள் விசாரணை நடந்த வழக்கு இதுதான்.

(தொடரும்)



நளினி (பிறகு ஆயுள் தண்டனையாக மாற்றப்பட்டது)



முருகன்



பேறறிவாளன்



சாந்தன்



ரவிச்சந்திரன்



ராபர்ட் பயாஸ்



ஜெயக்குமார்

# புலிகளின் இலக்கில் மகிந்த, கோத்தா!

## தயான் ஜெயதிலக கண்டுபிடிப்பு

(கொழும்பு)



**மகிந்த ராஜபக்ஷவும், கோத்தபாய ராஜபக்ஷவுமே புலிகளின் இலக்காக இருப்பர் என்று, முன்னாள் இராஜதந்திரியும் மகிந்த ராஜபக்ஷவின் ஆலோசகர்களில் ஒருவருமான கலாநிதி தயான் ஜயதிலக தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது, "தற்கொலை அங்கி கண்டுபிடிப்பு தொடர்பான சம்பவத்தை அனைத்துலக அனுபவங்கள், நடப்புகள் மூலம் நோக்கும்போது ஒரு விடயத்தை குறிப்பிடலாம். பிரபலமான பயங்கரவாத இயக்கமொன்று தோல்வி கண்ட பின்னர் முன்பிருந்த பெயரிலோ வேறு பெயரிலோ தலைதூக்கலாம்.

இதற்கு சிறந்த உதாரணம் ஐ.எஸ்.ஐ.எஸ் பயங்கரவாத அமைப்பாகும். பல ஆண்டுகளுக்கு முன்னர், இந்த இயக்கம் வட ஆபிரிக்காவில் அல்கைதா அமைப்பாக செயற்பட்டது. இன்று ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பாக மாறியுள்ளது.

விடுதலைப் புலிகள் இயக்கம் தோல்வியை கண்டது. ஆனால் அதிலிருந்து தப்பிச் சென்ற பெரும்பாலானோர் மேற்கத்தேய நாடுகளிலும், தென்னிந்தியாவிலும் தஞ்சமடைந்துள்ளனர். இவர்கள் அனைவரும் புலிகளாக செயறபடாமல் இருக்கலாம்.

ஆனால் அனைத்துலக புலிகளின் வலைப்பின்னலில் இணைந்திருந்தவர்கள், மீண்டும் புலிகளின் செயற்பாடுகள் இங்கு தலைதூக்க இடமளித்துள்ளன.

ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் வடக்கு, கிழக்கில் தேசிய பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டது. எனவே புலிகள் தலைதூக்க முடியாமல் போனது.

அந்த பிரதேசங்களில் படையினர் மற்றும் உளவுப் பிரிவினர் அதிகம் மக்களுடன் மக்களாக இருந்தனர். எனவே புலிகள் முயற்சித்தாலும் அவர்களால் தலைதூக்க முடியவில்லை.

ஆனால் புதிய அரசாங்கத்தில் வடக்கு, கிழக்கின் பாதுகாப்பில் ஓட்டை ஏற்பட்டுள்ளது. குழப்பகரமான சூழ்நிலை தலைதூக்கியுள்ளது. இந்த ஓட்டை ஊடாகவே சாவகச்சேரி, மன்னார் சம்பவங்கள் அரங்கேறியுள்ளன.

ஒருபிரிவினர் இதன்மூலம் புலிகளின் பயங்கரவாத தாக்குதலொன்றுக்கு தயாராவது புலப்படுகின்றது. இதில் ஆச்சரியப்படுவதற்கு எதுவுமில்லை.

அனைத்துலக ரீதியிலும் தமிழ் நாட்டில் எஞ்சியுள்ள புலிகள் அமைப்பின் பயங்கரவாத செயற்பாடுகள் மீண்டும் தலைதூக்கும். இதனை ஆழமாக ஆராய்ந்தால் புலிகளின் இலக்கு அரச தரப்பில் எவரையும் இலக்கு வைத்ததாக அமையாது.

மேற்கத்தேய நாடுகளின் நண்பனான அரசின் மீது தாக்குதல் நடத்தினால் மேற்குலத்தின் கடும் போக்கிற்கு ஆளாகலாம் என்பதை புலிகள் அறிவார்கள். எனவே இதற்கு புலிகள் தயாராக மாட்டார்கள்.

இதனால் புலிகளின் இலக்கு மகிந்த ராஜபக்ஷவும் கோத்தபாய ராஜபக்ஷவாகவுமே இருக்கும் இதனை வெற்றிகரமாக நிறைவேற்றினால் புலம்பெயர் புலிகள் மகிழ்ச்சயடைவார்கள்" என்றும்அவர் தெரிவித்துள்ளார். (இ-5)

# ஊடகங்களுக்கு செய்தியில்லாத நிலையை நல்லாட்சி அரசாங்கம் ஏற்படுத்தியுள்ளது

## அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவிப்பு

சில ஊடகங்கள் செய்தியை புனைவதாக பெருந்தெருக்கள் அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

கண்டியில் நேற்று முன்தினம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அஸ்கிரி மல்வத்து பீடாதிபதிகளை சந்தித்து ஆசிபெற்றுக்கொண்ட போது அவருடன்சென்றிருந்த அமைச்சர் கிரியெல்ல, ஊடகவியலாளர்களிடம் இதனைக் கூறியுள்ளார்.

கடந்த அரசாங்கத்துடன் ஒப்பீடு செய்யும் போது இந்த அரசாங்க ஆட்சிக் காலத்தில் ஊடகங்களுக்கு செய்தி இல்லாத நிலைமை ஏற்பட்டுள்ளது. சில ஊடகவியலாளர்கள் என்னை தொடர்பு கொணடு ஏதாவது சொல்லுங்கள் என கோருகின்றனர்.

தற்போது ஊடகவியலாளர்களுக்கு கேள்வி கிடையாது. வெள்ளை வான்களில் கடத்தப்படுவதில்லை. தாக்கப்படுவதில்லை. ஊடக சுதந்திரம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

மரத்தில் கட்டப்படுவதில்லை, கடத்தல்கள் கிடையாது, பிரதம நீதியரசர் விரட்டப்பட்டார், சரத் பொன்சேகா இழுத்துச் செல்லப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். தற்போது அவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுவதில்லை.



அது நல்லது இல்லையா? அரசாங்கம் அபிவிருத்திப் பணிகளின் நிமித்தம் பல நாடுகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றது என அவர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் 20 நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுயாதீனமாக இயங்க உள்ளமை குறித்து ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பிய போது, செய்திகளை புனைய வேண்டாம் என அவர் தெரிவித்துள்ளார். (இ-5)

## பொலிஸ் நிலையத்தில்

# ஆயுதங்கள் திருட்டு குறித்து 100 பேரிடம் வாக்குமூலம்

(கொழும்பு)

லக்கலை பொலிஸ் நிலையத்தில் இருந்து ஆயுதங்கள் திருடப்பட்ட சம்பவம் தொடர்பில் 100 இற்கும் அதிகமானவர்களிடமிருந்து வாக்குமூலம் பெறப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் இரண்டு பொலிஸார் விசாரணைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

இதற்கிடையில், லக்கலை பொலிஸ் நிலையத்தில் இருந்து காணாமற் போன ஆயுதங்கள் பின்னர் விகாரை ஒன்றில் இருந்து மீட்கப்பட்டிருந்த நிலைமையில் அவை தற்போது கொழும்பு குற்ற விசாரணைப் பிரிவுக்கு கொண்டு வரப்பட்டு மேலதிக பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆயுதங்களில் பதிந்துள்ள கைவிரல் அடையாளங்கள் உள்ளிட்ட ஆதாரங்களைப் பெற்று, அவற்றை கொண்டு சந்தேக நபர்களைக் கைது செய்ய எதிர்பார்த்திருப்பதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (இ-5)

## இன்று ஒரு தகவல்

### முன் யோசனை

மூன்று விடயங்களால் வரக் கூடிய நட்டங்கள் மிகப் பயங்கரமானவை.

ஒன்று ஞாபகசக்திக் குறைவு. இரண்டு சோம்பல், மூன்று முன்யோசனைகள் இன்மை.

எந்தப் பிரச்சினையையும் முன்யோசனையுடன் அணுகுகிறவர்கள் அவற்றை வெற்றிகரமாக சமாளிக்கிறார்கள்.

முன்யோசனையின்றி ஒரு பிரச்சினையை அணுகுவதென்பது எவ்வித ஆயுதமும் இன்றி ஒரு போர்க்களத்தில் குதிக்கும் செயலுக்கும் ஒப்பானது.

வரட்டும் பார்த்துக் கொள்ளலாம் என்ற மிதப்பான உணர்வு என்றைக்குமே நல்லதல்ல.

எப்படி வரும்? எந்த ரூபத்தில் வரும்? எவ்வளவு வரும்? எப்போது வரும்? என்றெல்லாம் யோசனை செய்து பார்த்து அவற்றிற்கு ஏற்ப நம்மைத் தயார் செய்து கொள்வதுதான் புத்திசாலித்தனமான அணுகுமுறை.

அதற்காக–

நினைத்துக் கூடப் பார்க்க முடியாத விடயங்களை யோசனை செய்து பார்ப்பதோ, கண்டவற்றையும் எண்ணிக் கொண்டு மூளையைப் போட்டுக் குழப்பிக் கொள்வதோ முன்யோசனையாகாது.

இருக்கின்ற சூழ்நிலையை ஒட்டிச் சிந்திப்பதும், அறிகுறிகள் தெரிய ஆரம்பித்து விட்ட விடயங்களை ஆராய்வதுமே பயனுள்ள முன்யோசனையாக அமையும்.

வெளியூரிலிருந்து ரயிலில் வரும் ஒருவரை வரவேற்கச் செல்லும் சாதாரண விடயம் முதல் மகளுக்குத் திருமணம் செய்யும் பெரிய விடயம் வரை அனைத்து விடயங்களிலுமே முன்யோசனை வேண்டப்படுகிறது.

முன்யோசனை மூலம் சிந்திப்பதற்கு ஏராளமான அவகாசம் கிடைக்கிறது. குழப்பத்திலும் அவசரத்திலும் சரியான முடிவுகளை எடுக்க மனித மனம் திணறும். அதைத் தவிர்க்கவே முன்யோசனை.

உடலை மட்டுல்லாமல், உள்ளத்தை மட்டும்மில்லாமல் சூழ்நிலையையும் நமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளும் அரிய முயற்சியே முன்யோசனை.

வாழ்வில் வெற்றியாளர்களாகத் திகழ்பவர்கள் எல்லாரும் முன்யோசனையாளர்களாகவே இருக்கிறார்கள். ஏதாவது ஒரு புதிய பிரச்சினையை இவர்களிடம் சொன்னால் எனக்கு அப்போதே தெரியும் இப்படி நடக்கும் என்று, இதோ மாற்று ஏற்பாடு என்று அவர்கள் சொல்லும் போது நம் கண்கள் அகல விரிகின்றன.

முன்யோசனையாளர்கள் வாழ்வில் ஏமாற்றத்தை தவிர்க்கிறார்கள். சந்தர்ப்பங்களை நழுவ விடாமல் சிறப்பாக பயன்படுத்திக் கொள்கிறார்கள். நேரத்தையும் பொருளையும் மிச்சப்படுத்துகிறார்கள்.

இதற்கான முன்யோசனையை உடனே செய்து–இவர்களது பட்டியலில் நாமும் இடம் பெற வேண்டும்.

லேனா தமிழ்வாணன்



# சிறுவர் அரங்கம்

1412



## தவறான பதில்!

ஓர் ஊரில் அறிஞர் ஒருவர் இருந்தார். அறிவு நிரம்பிய அவர் யார் எப்படிப்பட்ட கேள்வி கேட்டாலும், அதற்குச் சரியான பதிலைச் சொல்வார். வாதத் திறமை மிகுந்திருந்த அவர் பல நாடுகளுக்குச் சென்றார். யாராலும் அவரை வாதிட்டு வெல்ல முடியவில்லை. அவர் புகழ் உலகெங்கும் பரவியது. தற்பெருமை மிகுந்த அவர் ஒரு நாட்டுக்கு வந்தார். அரசவைக்கு வந்த அவரை, அரசன் சிறப்பாக வரவேற்றான்.

"உலகம் போற்றும் அறிஞரே! விலை உயர்ந்த இந்த முத்து மாலையை என் அன்புப் பரிசாக ஏற்றுக்கொள்ளுங்கள்!" என்று தந்தான்.

பரிசைப் பெற்றுக்கொண்ட அவர், "இங்கு என் அறிவுத் திறமையைக் காட்டவே வந்தேன். என்னுடன் போட்டியிட்டு வெல்லும் அறிஞருக்கு இந்த முத்து மாலையை நான் பரிசாகத் தருகிறேன். இங்கே என்னுடன் போட்டியிடுபவர் யார்?" என்று ஆணவத்துடன் கேட்டார்.

அந்த அவையே அமைதியில் ஆழ்ந்து இருந்தது. "என்னுடன் போட்டியிட இங்கு யாரும் இல்லையா? அறிஞர்கள் நிறைந்த நாடு என்று கேள்விப்பட்டுத்தானே இங்கு வந்தேன்!" என்று கேலி பொங்கக் கேட்டார் அவர்.

தன் நாட்டின் பெருமை குலைவதை விரும்பாத அரசன் எழுந்தான். அவையில் இருந்த அறிஞர்களைப் பார்த்து, "உங்களில் யார் போட்டியில் கலந்து கொள்கிறீர்கள்?" என்று கேட்டான்.

எல்லாரும் தலை கவிழ்ந்தபடி இருந்தனர். அவமானத்தால் அரசனின் முகம் சிவந்தது. "அரசே! நான் இந்த அறிஞருடன் போட்டி இடுகிறேன்!" என்று எழுந்தான் அரண்மனைக் கோமாளி.

"என்ன நீயா?" என்று வியப்புடன் கேட்டான் அரசன்.

"ஆம் அரசே! நான் இந்த அறிஞரை ஆறு கேள்விகள் கேட்பேன். எல்லாவற்றிற்கும் இவர் தவறான பதிலையே சொல்லவேண்டும். சரியான பதிலைச் சொன்னால் தோற்றவர் ஆவார். இந்தப் போட்டிக்கு இவர் உடன்படுகிறாரா? கேளுங்கள்!" என்றான் கோமாளி.

"நீ கேட்கும் ஆறு கேள்விகளுக்குத் தவறான பதில் சொல்ல வேண்டும். அவ்வளவுதானே. எவ்வளவு எளிமையான போட்டி இப்படிப்பட்ட போட்டியை நான் இங்கே எதிர்பார்க்கவில்லை!" என்றார் அவர்,

"போட்டி தொடங்கலாம்!" என்றான் அரசன்.

"நாம் அரசவையில்தான் இருக்கிறோம்!"

"இல்லை!"

"அரியணையில் அமைச்சர் அமர்ந்து இருக்கிறார்!"

"ஆமாம்!"

"உம் புகழ் பல நாடுகளிலும் பரவி உள்ளது!"

"இல்லை!"

"அரசர் உமக்குப் பரிசாக கொடுத்தது வெள்ளி நகை!"

"ஆமாம்!"

"இதுதானே நமக்கிடையே நடக்கும் போட்டி. எதற்கும் தவறான பதிலையே சொல்ல வேண்டும்!"

"இல்லை!"

"ஆ! எவ்வளவு பெரிய அறிஞர் நீர். நான் எப்படிப்பட்ட கேள்வி கேட்டாலும் நீர் தவறான பதிலையே சொல்கிறீர். நான் உம்மை எத்தனை கேள்விகள் கேட்டேன்!"

"ஐந்து கேள்விதான் முடிந்து உள்ளது. நான் வெற்றி பெற இன்னும் ஒரு கேள்வி கேட்க வேண்டும்!" என்று ஆணவத்துடன் சொன்னார் அவர்.

"வெற்றி உமக்கா? எனது கடைசிக் கேள்விக்குச் சரியான பதில் தந்து தோல்வி அடைந்துவிட்டீரே!" என்று சொல்லிச் சிரித்தான் அவன்.

"ஆ! எவ்வளவு எளிதில் ஏமாந்துவிட்டோம். என் தற்பெருமையே எனக்குத் தோல்வியைத் தந்தது!" என்று வருந்தினார் அவர்.

விலை உயர்ந்த முத்து மாலையைக் கழற்றி கோமாளியிடம் தந்தார் அவர். பின்னர் தலை கவிழ்ந்தபடி அங்கிருந்து வெளியேறினார்.



## 19.04.2016 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1587 - ஸ்பானிய போர்க் கப்பலை சேர் பிரான்சிஸ் டிரேக் மூழ்கடித்தார்.
- 1775 - அமெரிக்கப் புரட்சிப் போர் ஆரம்பித்தது.
- 1810 - வெனிசுவேலாவில் இராணுவ ஆட்சி நிறுவப்பட்டது.
- 1861 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: மேரிலாந்தின் பால்ட்டிமோர் நகரில் கூட்டமைப்பின் ஆதரவாளர்களினார் ஐக்கிய அமெரிக்கப் படைகள் தாக்கப்பட்டனர். நான்கு படையினரும் 12 பொது மக்களும் கொல்லப்பட்டனர்.
- 1892 - ஐக்கிய அமெரிக்காவில் முதன் முதலில் தானுந்து ஒன்றை சார்ல்ஸ் டூரியா என்பவர் மசாசுசெட்சில் ஸ்ப்றிங்ஃபீல்ட் என்ற இடத்தில் செலுத்தினார்.
- 1902 - குவாத்தமாலாவில் 7.5 ரிக்டர் நிலநடுக்கம் தாக்கியதில் 2,000 பேர் இறந்தனர்.
- 1904 - கனடாவின் டொரோண்டோ நகரத்தின் பெரும் பகுதிகள் தீயினால் அழிந்தது.
- 1936 - பாலஸ்தீனர்களின் ஆங்கிலேயர்களுக்கெதிரான முதலாவது கிளர்ச்சி தொடங்கப்பட்டது.
- 1954 - உருது, மற்றும் வங்காள மொழி ஆகியன பாகிஸ்தானின் தேசிய மொழிகளாக அறிவிக்கப்பட்டன.
- 1971 - முதலாவது விண்வெளி ஆய்வுகூடமான சோவியத் ஒன்றியத்தின் சல்யூட் 1 விண்ணுக்கு அனுப்பப்பட்டது.
- 1975 - இந்தியாவின் முதலாவது செய்மதி ஆரியபட்டா விண்ணுக்கு ஏவப்பட்டது.
- 1988 - அன்னை பூபதி மட்டக்களப்பில் ஆக்கிரமிப்பாளருக்கெதிராக உண்ணா நோன்பிருந்து இறந்தார்.
- 1989 - அமெரிக்காவின் அயோவா என்ற கப்பலில் பீரங்கி மேடை ஒன்று வெடித்ததில் 47 கடற்படையினர் கொல்லப்பட்டனர்.
- 1995 - சந்திரிகா - விடுதலைப்புலிகள் பேச்சுவார்த்தை முறிவடைந்ததாக விடுதலைப்புலிகள் அறிவித்தனர். அதனை அடுத்து திருகோணமலைத் துறைமுகத்தில் இரண்டு பீரங்கிக் கப்பல்கள் புலிகளால் மூழ்கடிக்கப்பட்டன.
- 1999 - ஜேர்மனியின் நாடாளுமன்றம் பெர்லின் நகருக்கு மாற்றப்பட்டது.
- 2006 - நேபாளத்தில் மன்னராட்சியை எதிர்த்து பொதுமக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

### பிறப்புகள்

- 1832 - ஜொசே ஐசாகிர், நோபல் பரிசு பெற்ற எழுத்தாளர் (இ. 1916)
- 1912 - கிளென் சீபோர்க், நோபல் பரிசு பெற்ற அமெரிக்க வேதியியலாளர் (இ. 1999)
- 1957 - முகேஷ் அம்பானி, இந்தியாவின் தொழிலதிபர்

### இறப்புகள்

- 1882 - சார்ள்ஸ் டார்வின், பரிணாமக் கோட்பாட்டைக் கண்டுபிடித்தவர் (பி. 1809)
- 1906 - பியரி கியூரி, நோபல் பரிசு பெற்றவர் (பி. 1859)
- **1988 - அன்னை பூபதி, ஈழத்தில் உண்ணா நோன்பிருந்து உயிர்நீத்தவர (பி. 1932)**
- 1998 - ஒக்டாவியோ பாஸ், நோபல் பரிசு பெற்ற மெச்சிக்கோ எழுத்தாளர் (பி. 1914)
- 2013 - சிவந்தி ஆதித்தன் தினத்தந்தி உரிமையாளர் (பி. 1936)



### அன்னை பூபதி

அன்னை பூபதி நவம்பர் 3, 1932 ஆம் ஆண்டு பிறந்தார். இவர் மட்டக்களப்பில் இந்திய அமைதி காக்கும் படைக்கு எதிராக ஈழத்தில் உண்ணா நோன்பிருந்து உயிர் நீத்தவர.

விடுதலைப் புலிகளுக்கும் இந்திய அமைதிப்படைக்கும் சண்டை நடந்து கொண்டிருந்த காலம். அந்தக் காலத்தில் இந்தியப் படைக்கு எதிராக குரல் கொடுக்க, அறப் போராட்டங்களை நடத்த மட்டு-அம்பாறை மாவட்ட அன்னையர் முன்னணி முடிவு செய்தது. அவர்கள் இரண்டு கோரிக்கைகளை முன்வைத்து இந்திய அரசுக்கெதிராக உண்ணா நோன்புப் போராட்டத்தைத் தொடங்கினர்.

அன்னையர் முன்னணியின் கோரிக்கைகள் எதுவுமே இந்தியப் படையினரின் கவனத்தை ஈர்க்கவில்லை. ஆனால் தமிழ்ப் பெண்கள் அடையாள உண்ணாநோன்புப் போராட்டத்தில் அணி திரண்ட நிலையில் 1988 ஆம் ஆண்டு ஜனவரி 4 ஆம் திகதி அன்னையர் முன்னணியைத் திருமலைக்குப் பேச்சு வார்த்தைக்கு வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டது. ஆனால் கோரிக்கைகள் எதுவும் நிறைவேற்றப்படவில்லை. போராட்டம் தொடர்ந்து நடந்தது. 1988 ஆம் ஆண்டு பெப்ரவரி 10 ஆம் திகதி அன்னையர் முன்னணியின் நிர்வாகக் குழுவினர் கொழும்பில் இந்திய அதிகாரிகளுடன் பேச்சு வார்த்தையில் ஈடுபட்டனர். பேச்சுவார்த்தை முறியவே சாகும் வரை உண்ணாநோன்புப் போராட்டத்தைத் தொடங்க முடிவு எடுத்தனர்.

அப்போது பலர் சாகும் வரை உண்ணா நோன்புப் போராட்டத்தில் குதிப்பதற்காக முன்வந்தனர். இறுதியில் குலுக்கல் முறையில் தேர்வு இடம் பெற்றது. முதலில் அன்னம்மா டேவிட் தெரிவு செய்யப்பட்டார். 1988ஆம் ஆண்டு பெப்ரவரி 16 ஆம் நாள் அமிர்தகழி மாமாங்கேஸ்வர் கோயிலில் அன்னம்மாவின் உண்ணா நோன்புப் போராட்டம் தொடங்கியது. ஆனால் படையினர் உண்ணாவிரத மேடையில் இருந்தவரைக் கடத்திச் சென்றதில் அவரால் தனது போராட்டத்தை நிறைவேற்ற முடியவில்லை.

இந்த நிலையில் தான் பூபதியம்மாள் தன் போராட்டத்தை மார்ச் 19 1988 இல் தொடங்கினார். முன்னெச்சரிக்கையாக "சுயவிருப்பின் பேரில் உண்ணாவிரதமாயிருக்கிறேன். எனக்கு சுயநினைவிழக்கும் பட்சத்தில் எனது கணவனோ, அல்லது பிள்ளைகளோ என்னை வைத்தியசாலையில் அனுமதிக்க முயற்சிக்கக் கூடாது" எனக் கடிதம் எழுதி வைத்தார். பத்துப்பிள்ளைகளுக்கு, தாயார் இவர்.நீர் மட்டும் அருந்தி சாகும் வரை உண்ணாநோன்பு இருந்தார். இடையில் பல தடங்கல்கள் வந்தன. உண்ணாவிரதத்துக்கு ஒத்துழைப்பு வழங்கியவர்களையும், அன்னை பூபதியின் பிள்ளைகள் சிலரையும், இந்திய இராணுவம் கைது செய்தது. ஆயினும் போராட்டம் நிறுத்தப்படவில்லை. அவர் உறுதியாகப் போராட்டத்தைத் தொடர்ந்தார். கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்படாத நிலையில் சரியாக ஒரு மாதத்தின் பின் 19.04.1988 அன்று உயிர் நீத்தார்.

# இறால் பண்ணையை தடைசெய்யக்கோரி வாகரையில் வீதியை மறித்து போராட்டம்



மட்டக்களப்பு - திருகோணமலை பிரதான வீதியை மறித்து வாவிக்கரையோர மக்கள், நீர் வாழ் உயிரின வளர்ப்பு கைத்தொழில் வலய திட்டத்தினை நிறுத்தக்கோரி கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை நேற்று மேற்கொண்டுள்ளனர்.

இதன்போது "நல்லாட்சியே கவனத்தில் கொள், இயற்கையை பாதுகாத்தால் தான் இராதோறும் இரணம் கிடைக்கும், வாகரை பிரதேச மக்களின் வயிற்றிலா அடிக்கின்றீர்?, போராடுவோம் போராடுவோம் தீர்வு கிடைக்கும் வரை போராடுவோம், எம் மக்களின் வாழ்வின் தொழில் முதலைகளின் வேட்டையா?, இயற்கையின் அழகை அழித்தா அபிவிருத்தி? அது வேணடாம்" என பல சுலோகங்களை அடங்கிய பதாகைகளை கையில் ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர். (இ-5)

# ஊடகவியலாளர்களுக்கு மோ.சைக்கிள் வழங்கும் அரசாங்கத்தின் திட்டம் தோல்வி

(கொழும்பு)

ஊடகவிலயாளர்களுக்கு மோட்டார் சைக்கிள் வழங்கும் திட்டம் தோல்வியடைந்துள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

சலுகை வட்டி கடன் அடிப்படையில் மோட்டார் சைக்கிள்களை ஊடகவியலாளர்களுக்கு வழங்க ஊடக அமைச்சு திட்டமிட்டிருந்தது என ஜாஎல ஊடகவியலாளர் ஒன்றியத்தின் பிரதம அமைப்பாளர் பிரசங்க பெரேரா தெரிவித்துள்ளார்.

சிங்கள ஊடகமொன்றுக்கு அவர் தொடர்ந்தும் கருத்து வெளியிடுகையில்,

புத்தாண்டுக்கு முன்னதாக நிகழ்வு ஒன்றை நடத்தி மோட்டார் சைக்கிள்களை சலுகை வட்டி கடன் அடிப்படையில் கொள்வனவு செய்யத் தேவையான காசோலைகளை ஊடக அமைச்சர் கயந்த கருணாதிலக்க ஊடகவியலாளர்களுக்கு வழங்கவிருநதார்.

இற்காக திகதியும் ஒதுக்கப்பட்டிருந்தது. எனினும், குறைந்தளவிலான ஊடகவியலாளர்களே கடன் அடிப்படையில் மோட்டார் சைக்கிள் பெற்றுக்கொள்ள விண்ணப்பம் செய்திருந்தனர்.

இதனால் இந்த நிகழ்வு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

அரசாங்கம் புதிய ஆட்சி அமைக்கும் முன் சலுகை அடிப்படையில் ஊடகவியலாளர்களுக்கு மோட்டார் சைக்கிள் வழங்குவதாக அறிவித்திருந்தது.

எனினும் தற்போது ஊடகவ்யலாளர்களை கடன் பொறியில் சிக்க வைக்க அரசாங்கம் முயற்சிக்கின்றது.

தீர்வையற்ற மோட்டார் சைக்கிள்களைப் பெற்றுக் கொள்வதற்கான எமது போராட்டத்திற்கு அனைத்து ஊடகவியலாளர்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

மக்கள் வங்கியின் ஊடாக 9 வீத வட்டி அடிப்படையில் மோட்டார் சைக்கிள் கொள்வனவு செய்ய கடன் வழங்கப்படவுள்ளது.

இதில் இரண்டு வீதத்தை ஊடகவியலாளர் செலுத்த வேண்டும். ஏனைய 7 வீதம் அரசாங்கம் செலுத்தும்.

எனினும் இதன் ஊடாக ஊடகவியலாளர்களுக்கு மிகவும் சொற்ப அளவிலான நன்மையே கிடைக்கின்றது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# சட்டங்களுக்கமையவே துறைமுக நகரத்திட்டம்

## அமைச்சர் நிரோஷன் தெரிவிப்பு



கடல் கடந்த நிதிச் சந்தை நடவடிக்கைகளுக்கான நிலையமொன்றை உருவாக்குவதற்கான திட்டமொன்று காணப்படுவதாக, கொழும்பு துறைமுக நகரத்திட்டத்துக்கு எதிரான இயக்கத்தால் முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளுக்குப் பதிலளித்த தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்களுக்கான இராஜாங்க அமைச்சர் நிரோஷன் பெரேரா, தேசத்துக்குப் பாதிப்பான எதையும் அரசாங்கம் செய்யாது எனத் தெரிவித்தார்.

கொழும்பு துறைமுக நகரத்திட்டத்துக்கு எதிராகப் பல்வேறான குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன, ஆனால், தேசத்துக்குப் பாதிப்பான எதையும் செய்யப் போவதில்லை என்ற உறுதியான நிலைப்பாட்டை அரசாங்கம் எடுத்துள்ளது என அவர் தெரிவித்தார்.

இதேவேளை, முன்னர் கருத்துத் தெரிவித்திருந்த இராஜாங்க அமைச்சர், இந்த வேலைத்திட்டம் தொடர்பாகப் பல நிபந்தனைகளை அரசாங்கம் முன்வைத்துள்ளதாகவும் அவற்றைச் சீனா ஏற்றுக் கொண்டுள்ளதாகவும் தெரிவித்திருந்தார். இந்த நிபந்தனைகளில், சூழலியல் விடயங்களும் உள்ளடங்கியிருந்ததாக அவர் தெரிவித்தார். அத்தோடு, துறைமுக நகரம், இலங்கையின் பொருளாதாரத்தோடு இணைக்கப்பட்டிருக்குமெனவும் இலங்கையின் மாநகர அபிவிருத்தித் திட்டத்தின் அங்கமாகக் காணப்படுமெனவும் நாட்டின் சட்டங்களால் வழிநடத்தப்படுமெனவும் தெரிவித்தார்.

கடலிலிருந்து மீட்கப்படவுள்ள நிலத்தின் ஒரு பங்கை வழங்கும் முன்னைய ஏற்பாடு மாற்றப்பட்டு, புதிய ஒப்பந்தத்தின்படி, 99 ஆண்டுகளுக்கான குத்தகைக்கு வழங்கப்படுமெனவும் அவர் தெரிவித்தார். அத்தோடு, இந்த வேலைத்திட்டத்தில், சீனா தவிர்ந்த ஏனைய நாடுகளைச் சேர்ந்த முதலீட்டாளர்களுக்கும் அழைப்பு விடுக்கப்படுமென இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 696

சர்மி சர்மிளா



நல்ல மீசைன்னா அதுல எலுமிச்சம்பழம் நிக்கனும். விட்டா இந்த பெருசு ஆரஞ்சு பழத்தையே நிக்க வப்பாரு போலருக்கே...!

ரூபன் லிங்கா

கணவன் : 30 வருசத்துக்கு அப்புறம் இப்போதான் உன் சாப்பாட்டுல மாறுதல் தெரியுது...

மனைவி : அப்படியா..?

கணவன் : அப்போ கறுப்பு முடி கிடக்கும், இப்போ வெள்ள முடி கிடக்குது.



சிந்துஜா



நூறு மாடுகளை மேய்க்க ஒரு குச்சி போதும் ஆனால் ஒரு மனிதனை மேய்க்க நூறு குச்சிகள் வேண்டும்.

நைஜீரிய பழமொழி

உஷாந்தன் நெய்மார்

வாய்விட்டு சிரிங்க....ப்ளீஸ்...

மனைவி: கணவன் - மனைவி சண்டைன்னா நாலு சுவத்துக்குள்ளேதான் இருக்கனும்.

கணவன்: அப்ப தப்பிச்சு ஓட கூட எனக்கு உரிமை இல்லையா?

றட்டை

சத்தியமா உன் பிகருக்கு நான் மசேஜ் பண்ணலடா.



மது

கழுதை: என் முதலாளி என்னை ரொம்ப அடிக்கிறான்.

நாய்: அப்ப எங்கேயாவது ஓடிபோக வேண்டியதுதானே?

கழுதை: அப்படிதான் நினைத்தேன். ஆனா, முதலாளி பொண்ணு படிப்புல எப்ப மார்க் குறைவா வாங்கினாலும்" இந்த கழுதைக்குதான் உன்னை கட்டிவைப்பேன்" என்று சொல்கிறான்; அதான் கொஞ்சம் வெயிட் பண்றேன்.

நம்பிக்கை தான் வாழ்க்கை



நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# "துர்முகி வருஷ" இராசி பலன்கள்

## 14.04.2016-13.04.2017

# கன்னி இராசியில் குரு வந்ததும் எண்ணியதெல்லாம் நிறைவேறும்!

ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்



***கன்னி ராசியில் குரு வந்ததும், எண்ணியதெல்லாம் நிறைவேறும்!***

***நன்றி மறக்காத நல்ல குணம் படைத்த இடப ராசி நேயர்களே!***

'துர்முகி' வருடம் பிறந்திருக்கிறது. இந்தப் புத்தாண்டு புதிய வாய்ப்புகளை வழங்குமா?, பொருளாதாரத்தில் முன்னேற்றத்தைக் கொடுத்திடுமா? சப்தமச் சனியில் ஏற்பட்ட சஞ்சலங்கள் அகலுமா? வாழ்க்கைத்தேவைகளைப் பூர்த்தி செய்ய நண்பர்கள் உதவி செய்வார்களா? போன்ற சிந்தனைகள் ஆண்டு தொடங்குவதற்கு முன்னதாகவே உங்கள் அடி மனதில் தொடங்கி விடும்.

வருடம் பிறக்கும் பொழுது உலா வரும் கிரக நிலைகள் உங்களுக்குச் சாதகமாக இருந்தால் சந்தோஷங்களை நாளும சந்திக்க இயலும். அதுபோல உங்கள் சுய ஜாதகத்தில் திசாபுத்தி பலம் பெற்றிருந்தாலும் நல்ல வாய்ப்புகள் இல்லம் தேடிவரும். பலமிழந்து திசாபுத்திகள் நடைபெறும் பட்சத்தில் பரிகாரங்களைச் செய்து நற்பலன்களைப் பெற இயலும்.

இந்த ஆண்டு சித்திரை மாதப் பிறப்பு பங்குனி 31 ஆம் திகதி மாலை நேரத்திலேயே நிகழ்ந்திருக்கிறது. புதன் உங்கள் ராசிக்கு 2, 5 ஆகிய இடங்களுக்கு அதிபதியாவார். தனபஞ்சமாதிபதியாக விளங்கும் புதனுக்குரிய கிழமையில், சந்திரன் உச்சம் பெற்ற ராசியாக விளங்கும் உங்கள் ராசிக்கு உகந்த மாலை நேரத்தில், சுக்ரனுக்குச் சொந்த வீடாக விளங்கும் துலாம் லக்னத்தில், இந்த ஆண்டு பிறந்திருப்பதால் வேண்டிய நற்பலன்களை அள்ளிக் கொடுக்கப்போகின்றது.

அடியெடுத்து வைக்கும் ஆண்டின் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்த்தால் உங்கள் ராசிநாதன் சுக்ரன் உச்சம் பெற்றிருக்கின்றார். அவருக்குப் பகைவரான குரு வக்ரம் பெற்றிருக்கின்றார். சகாய ஸ்தானாதிபதியான சந்திரனோ தன ஸ்தானத்தில் சஞ்சரிக்கின்றார். யோகம் செய்யும் சனி சப்தம ஸ்தானத்தில் சஞ்சரிக்கின்றார். எனவே பணப்புழக்கம் நன்றாக இருக்கும். அனைத்து முயற்சிகளிலும் வெற்றி கிடைக்கும். ஆற்றல் மிக்கவர்கள் உங்களுக்குப் பின்னணியாக இருப்பர்.

இப்படியெல்லாம் நல்ல பலன்கள நடைபெற்றாலும் இந்த ஆண்டு முழுவதும் சனியின் பார்வை உங்கள் ராசியில் அல்லவா பதிகிறது?. எனவே, ஆரோக்கியத் தொல்லையும், அதிக மனக்குழப்பமும் ஏற்படும். செவ்வாய், சனி விருச்சிகத்தில் இணைந்திருக்கும் நேரத்தில் சிறப்பு வழிபாடுகளையும், குலதெய்வ வழிபாடுகளையும், பிரதோஷத்தில் கவனம் செலுத்தி நந்தி வழிபாட்டையும் மேற்கொள்ளுங்கள்.

சகல தோஷங்களில் இருந்தும் விடுபட வைப்பது பிரதோஷ வழிபாடு. உங்கள் ராசிக்குரிய நாயகனே காளை வாகனம்தான். எனவே சிந்தித்த காரியங்கள் செயற்பட, ஆலயத்திற்கு சென்று நந்தியை வழிபடலாம். இல்லத்து பூஜையறையிலும் சிவனையும், நந்தியையும் வைத்து சிவ பூஜையில் கவனம் செலுத்தலாம்.

வருடத் தொடக்கத்தில் அர்த்தாஷ்டம குருவாக இருக்கிறதே என்று கவலைப்பட வேண்டாம். அஷ்டம இலாபாதிபதியான குரு, வக்ர இயக்கத்தில் அல்லவா சஞ்சரிக்கின்றார். இந்த வக்ர இயக்கம் உங்கள் வளர்ச்சிக்கு வித்திடும். அக்கறை காட்டாத செயலில் கூட ஆதாயம் கிடைக்கும். பக்கபலமாக இருப்பவர்கள் உங்கள் பணத் தேவையைப் பூர்த்தி செய்வர்.

சென்ற ஆண்டில் ஏற்பட்ட இழப்புகளை ஈடுசெய்ய புதிய வாய்ப்புகள் வந்து சேரும். அந்நிய தேசத்திலிருந்து சம்பாதிக்காமல் தாய்நாடு திரும்பி விட்டோமே என்று கவலைப்பட்டவர்களுக்கு புதிய இடத்திலருந்து அழைப்புகள் வந்து சேரும. தொழில் புரிபவர்களுக்கு தொழில் மாற்றச் சிந்தனை மேலோங்கும் பழைய தொழிலில் வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்தி மீண்டும் அதை நடத்த முன்வருவீர்கள.

உங்கள்ராசிநாதன் சுக்ரனுக்கு குருபகைக கிரகமாக இருந்தாலும் நவக்கிரகங்களில சுபகிரகம் என்று பெயர் பெற்றவர் அல்லவா? அதிலும் தன் வீட்டை, தானே பார்க்கின்றார். எனவே கொடிகட்டிப் பறந்த குடும்பப் பிரச்சினைகள் படிப்படியாக நல்ல முடிவிற்கு வரும். உங்கள் இலட்சியங்கள் நிறைவேற நல்லவர்கள் துணை நிற்பர்.

மங்கையர்கள் வழி ஒத்துழைப்பும் பங்காளிப் பகையில் மாற்றமும் ஏற்படும். பொருளாதாரம் அதிகரிக்க புது முயற்சிகளில் ஈடுபடும் பொழுது, அதில் வெற்றி வாய்ப்புகளைக் கொடுப்பது குரு பார்வை மட்டும் தான். அந்த குருவையும் வழிபாடு செய்யுங்கள். அவரோடு இணைந்திருக்கும் ராகுவிற்கும், 10 இல் சஞ்சரிக்கும் கேதுவிற்கும் உரிய சர்ப்பக் கிரக வழிபாட்டை மேற்கொள்ளுங்கள்.

**ஆண்டின் தொடக்கம் முதல் ஆடி 17 வரை**

இக்காலத்தில் உள்ள கிரக நிலைகளின் அமைப்பின்படி விரயங்களை அதிகம் சந்திக்கும் சூழ்நிலை உருவாகலாம். விரயங்கள் இரண்டு வகைப்படும் ஒன்று சுபவிரயம். மற்றொன்று வீண் விரயம். சுபவிரயம் என்பது இல்லத்திற்குத் தேவையான பொருட்களை வாங்குவது, அசையும் சொத்துக்கள், அசையாச் சொத்துக்கள் போன்றவற்றை சேர்க்க முன்வருவது.

இவற்றில் சுக ஸ்தானத்தில் குரு இருப்பதால் ஆண்டின் தொடக்கத்தில் சுபவிரயங்கள் அதிகரிக்கும். துணிவும், தன்னம்பிக்கையும் கூடும். வழக்குகள் சாதகமாகும். வாங்கிப் போட்ட இடத்தில் வீடு கட்ட முடியவில்லையே என்ற கவலை அகலும்.

உத்தியோகத்தில் உள்ளவர்கள் உயர் அதிகாரிகளின் ஒத்துழைப்போடு உன்னத நிலை காண்பர். சக பணியாளர்களாலும், உங்களைச் சார்ந்து இருப்பவர்களாலும் நன்மை கிடைக்கும்.

செவ்வாய் சனியின் பார்வை உங்கள் ராசியில் பதிவதால் உடன் பிறப்புகள் உங்கள் குணமறிந்து நடந்துகொள்வது அரிது. அவர்களது கடன் பிரச்சினைகளைக் கூட நீங்கள் தீர்க்கும் சூழ்நிலை உருவாகலாம்.

**ஆடி 18 இல் தேடி வரும் யோகம**

துர்முகி வருடம் ஆடி மாதம் 18 ஆம் திகதி (2.8.2016) அன்று கன்னி ராசியில் குரு சஞ்சரிக்கப் போகின்றார். இந்தக் குருப்பெயர்ச்சியின் விளைவாக நல்ல மாற்றங்கள் உங்களை நாடி வரப் போகின்றது. பொருளாதாரத்தில் முதன்மை வகிப்பீர்கள். புகழ் கூடும். பொது வாழ்வில் புதிய பொறுப்புகளும், பதவிகளும் கிடைக்கும். தகராறு செய்தவர்கள் தானாக விலகுவர்.

5 ஆம் இடம் எனப்படும் புத்திர ஸ்தானம், பூர்வ புண்ணிய ஸ்தானம் பலம்பெறும் விதத்தில் குரு சஞ்சரிக்கப் போகின்றார். இதன் விளைவாக பிள்ளைகளால் ஏற்பட்ட தொல்லைகள் அகலும். அவர்கள் கல்யாண வாய்ப்பு கைகூடும். செய்தொழிலில் வளர்ச்சி ஏற்படும். எடுத்த காரியங்களில் அனுகூலம் உண்டு.

5 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் குரு அற்புதப்பலன்களை அள்ளி வழங்கப் போகின்றது. அயல்நாட்டிலிருந்தும், அனுகூலத்தகவல் வரும. உள்நாட்டிலிருந்தும் உள்ளம் மகிழும் செய்தி வரும். வளர்ச்சியில் இருந்த தளர்ச்சி அகலும். வருங்கால நலன் கருதி சில முக்கிய முடிவெடுப்பீர்கள்.

உங்கள் ராசிக்கு அஷ்டம இலாபாதிபதியாக விளங்கும் குருபகவான் சஞ்சரிக்கும் இடம் ஒளிமயமான எதிர் காலத்திற்கு உத்திரவாதம் தரும் இடமாகும். அதன் பார்வை 1, 9, 11 ஆகிய இடங்களில் பதிகின்றது. எனவே, உடல் நலம் சீராகும். உள்ளத்தில் நினைத்ததை உடனே செய்து முடிப்பீர்கள். தெள்ளத்தெளிவாக எடுத்த முடிவுகளால் சிறப்பான முன்னேற்றம் வரப்போகின்றது. தாய் தந்தையரின் ஒத்துழைப்பும், பூர்வீக சொத்துக்களின் விற்பனையால் தன இலாபமும் வந்து சேரும்.

"ராசியைக் குருதான் பார்த்தால் இனியதோர் வாழ்க்கை அமையும்" என்பர். எனவே இதுவரை வாழ்க்கையில் இருந்த இடர்பாடுகள் அகலும். போட்டிக் கடை வைத்தோர விலகுவர். பொருளாதார வளர்ச்சி அதிகரித்து புதிய பாதை புலப்படப் போகின்றது.

அருளாளர்களின் தொடர்பும், அமைதியான வாழ்க்கையும் கைகூடும். சரிந்த தொழில நிமிர்ந்து நன்னடை போடவும் வாய்ப்புகள் கைகூடிவரப் போகின்றது.

"ஒன்பதைக் குருதான் பார்த்தால் உன்னத நிலை தான் வாய்க்கும்" என்பர். பொதுவாக ஒன்பதாமிடம் என்பது பிதுர்ரார்ஜித ஸ்தானம் ஆகும். எனவே தந்தை வழி உறவினர்களில் இருந்த விரிசல் அகலும். தடையாக இருந்த பாகப்பிரிவினைகள் நல்ல முடிவிற்கு வரும். அண்ணன், தம்பிகள் அரவணைத்துக் கொள்வர். பெண் வழிப் பிரச்சினைகள் அகலும்.


"பதினொன்றை குருதான் பார்த்தால் பணத் தேவை பூர்த்தியாகும்" என்பர். எனவே இனி பரிசு மழையிலும், பண மழையிலும் நனையப் போகிறீர்கள். உரிய நேரத்தில் தொகை வந்து உள்ளத்தை மகிழ்விக்கும். திசாபுத்தி பலம் பெற்றவர்கள் உத்தியோகத்திலிருந்து விடுபட்டு விருப்ப ஓய்வில் வெளியில் வந்து சுய தொழில் செய்ய முன்வருவர். செய் யும் தொழிலால் வருமானம் இருமடங்காகும்.

**மாங்கையருக்கான மகத்தான பலன்கள்!**

துர்முகி வருடத்தில் ரிஷப ராசியில் பிறந்த பெண்களுக்கு வருடத் தொடக்கத்தில் தாய்வழி ஆதரவு கூடும். சகோதர சச்சரவுகளை சமாளிக்க வேண்டிய நிர்ப்பந்தம் வந்து சேரும். வருமானம் வந்த மறு நிமிடமே செலவாகின்றதே என்று கவலைப்படுவீர்கள்.

இருப்பினும் பற்றாக்குறை ஏற்படாது. ஆடை, ஆபரண சேர்க்கை அதிகரிக்கும். நகை வாங்குவதில் நாட்டம் செல்லும். கணவன-மனைவிக்குள் விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. அடிப்படை வசதிகளைப் பெருக்கிக்கொள்ள அருகில் உள்ளவர்களை அனுசரித்துச் செல்ல வேண்டிய சூழ் நிலை உருவாகும்.

உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு வேலைப்பளு கூடும். ஜூன் மாதத்திற்கு மேல் உத்தியோக உயர்வும், ஊதிய உயர்வும் கிடைப்பதற்கான அறிகுறி தோன்றும். உங்கள் பெயரிலேயே சொத்துக்களை வாங்க குடும்பப் பெரியவர்கள் ஆலோசனை சொல்வர். பௌர்ணமி அன்று மலை வலம் வருவதன்மூலம்மகத்தான பலனை வரவழைத்துக் கொள்ளலாம். ராகு-கேது பரிகாரம் நன்மையைத் தரும்.






**குரு மற்றும் சனியின் வக்ர காலங்கள்!**

குருவின் வக்ர காலத்தில் கொடுத்த கடன்கள் வசூலாகும். குல தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றிக் கொள்வீர்கள். அடுத்தடுத்து நல்ல சம்பவங்கள் நடந்து கொண்டேயிருக்கும்.

அதிகரிக்கும் உடல்நிலைத் தொல்லை அகல, மாற்று மருத்துவத்தை மேற்கொள்வது நல்லது. பங்காளிப் பகை நல்ல முடிவிற்கு வரும். உத்தியோகத்தில் நல்ல மாற்றங்கள் வந்து சேரலாம்.

சனியின் வக்ர காலத்தில் சஞ்சலங்கள் அதிகரிக்கும். தொழில மற்றும் பிதுர்ரார்ஜித ஸ்தானத்திற்கு அதிபதியானவர் சனிபகவான். எனவே தொழிலில் குறுக்கீடு வந்து சேரும்.

துணிவும், தன்னம்பிக்கையும் குறையும். பணியில் இருக்கும் தொய்வு அகல விழிப்புணர்ச்சி தேவை. நண்பர்களால் ஏமாற்றங்களைச் சந்திக்க நேரி டும்.

புதிய பங்குதாரர்கள் திருப்தியாக நடந்துகொள்ள மாட்டார்கள். பெற்றோர்களின் உடல நலனில் கவனம் தேவை.

**வளர்ச்சிக்கு வித்திடும் வழிபாடு!**

வெள்ளிக்கிழமை தோறும் விரதமிருந்து மகாலட்சுமியை வழிபட்டு வாருங்கள். அஷ்டலட்சுமி கவசத்தை பாராயணம் செய்வதன் மூலம் அதிர்ஷ்ட வாய்ப்புகள் வந்து சேரும்.

நாளை மிதுனம்...

# வங்கி மோசடி விசாரணைகளிலிருந்து இலங்கை அதிகாரிகள் விலக முடிவு?

பங்களாதேஷ் மத்திய வங்கி மோசடி தொடர்பிலான விசாரணைகளிலிருந்து விலகிக்கொள்ள இலங்கை அதிகாரிகள் தீர்மானித்துள்ளனர்.

பங்களாதேஷ் மத்திய வங்கியில் பாரியளவில் நிதி கொள்ளையிடப்பட்ட சம்பவம் தொடர்பிலான விசாரணைகளை அந்நாட்டு அதிகாரிகளே மேற்கொள்ள வேண்டுமென இலங்கை அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த நிதி மோசடி குறித்து விசாரணை நடத்தும் பொறுப்பு இலங்கைக்கானதல்ல என தெரிவித்துள்ளனர்.

மத்திய வங்கி மற்றும் புலனாய்வுப்பிரிவு அதிகாரிகள இதனைத் தெரிவித்தனர்.

இலங்கையிடம் காணப்படும் விபரங்கள் பங்களாதேஷ் அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் விசாரணை நடத்துவது பங்களாதேஷ் அதிகாரிகளின பொறுப்பாகும் எனவும் புலனாய்வுப் பிரிவின் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பீ.ஆர். எஸ்.ஆர். நாகமுல்ல தெரிவித்துள்ளார்.

இந்த விசாரணைகளை பங்களாதேஷ் அதிகாரிகளே மேற்கொள்ள வேண்டுமென மத்திய வங்கியின் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரனும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இந்த நிதி மோசடி மிகவும் சிக்கல் மிகுந்தது எனவும் இலங்கையில் இடம்பெற்ற மோசடிகள் குறித்து நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் கிடையாது எனவும் இலங்கைக்கு விஜயம் செய்துள்ள பங்களாதேஷ் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இலங்கையில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பில் இலங்கை அதிகாரிகள் விசாரணை நடத்துவார்கள் என எதிர்பார்ப்பதாகத் தெரிவித்துள்ளனர். (இ-5)

# ஈழத்தமிழர் ஒரு தேசிய இனம்

## கனடாவில் ஓங்கி ஒலித்த குரல்



(கொழும்பு)

ஈழத்தமிழர் ஒரு தேசிய இனமென்பதையும் இடம்பெறும் தமிழர் இனவழிப்பிற்கான அனைத்துலக விசாரணையை கோருவோமென்றும் கனடாவின் பழைமைவாதக் கட்சி அறிவித்துள்ளது.

கனேடியத் தமிழர் தேசிய அவையினரும் மற்றும் கனடாவில் தமிழர் பிரதேசங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மார்க்கம், மிசிசாகா, பிராம்டன், ஆட்டாவாவைச் சேர்ந்த அமைப்புக்களின் பிரதிநிதிகளும் கனடாவின் பழைமைவாதக் கட்சியின் தலைவி ரோணா அம்புரூஸை கடந்த வியாழக்கிழமை சந்தித்தனர்.

இச்சந்திப்பில் தமிழர் தரப்பில் சில முக்கிய பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

இச்சந்திப்பில் ஈழத்தமிழர்களின் வரலாற்றுப் பதிவையும், தமிழர்களுக்கு காலம் காலமாக இலங்கை அரசினால் இழைக்கப்பட்ட அநீதிய்யையும் ஆதாரபூர்வமாக எடுத்துரைக்கப்பட்டது. ஈழத்தமிழர் ஒரு தேசிய இனமென்பதையும் அவர்களுக்கு உரித்தான சுய நிர்ணய உரிமையையும் அங்கீகரிக்கக் கோரி ஆதாரங்கள் முன்வைக்கப்பட்டன. மேலும் தற்போதுள்ள புதிய இலங்கை அரசு கண்துடைப்பிற்காக சில முன்னேற்றத்தைக் காட்ட முயற்சிக்கின்றனர் என்றும், தமிழர்களுக்கு எதிரான இன அழிப்பு நடவடிக்கைகளை மறைமுகமாக தொடர்ந்தும் நடத்தி வருகின்றனர் என்றும் ஆதாரத்துடன் எடுத்துக் கூறினர். கனேடியத் தமிழர் தேசிய அவையினால் ஏப்ரல் 13, 2014 இல் ஒருங்கமைக்கப்பட்ட 80 அமைப்புக்கள் ஒன்று கூடி ஏற்படுத்திய தமிழர் சமூக பொது ஆயத்தினால் உருவாக்கப்பட்ட ஆவணமும் இச்சந்திப்பில் அவர்களிடம் கையளிக்கப்பட்டது.

இச்சந்திப்பில் கலந்து கொண்ட எதிர்க்கட்சி தலைவி தமிழர்கள் தரப்பின் ஆதாரபூர்வமான தரவுகளை முற்று முழுதாக உள்வாங்கி, தமது கட்சி தமிழர்களின் தேவைகளை முன்னின்று அனைத்து உதவிகளையும் செய்யும் என உறுதி வழங்கினார். தமது கட்சி ஆட்சியிலிருக்கும் போது பொது நலவாய நாடுகளின் கூட்டத்தை இலங்கையில் வைத்த காரணத்தால் முற்று முழுதாக பகிஷ்கரித்தது மட்டுமல்லாது போர்க்குற்றம், மானிடத்திற்கு எதிரான குற்றம் மற்றும் இன அழிப்புக்கெதிராக தொடர்ச்சியாக உலக அரங்கில் உரத்துக் குரல் கொடுத்ததென்பதையும் நினைவூட்டினார்.

இச் சந்திப்பைத் தொடர்ந்து, எதிர்க்கட்சித் தலைவி விடுத்த உத்தியோகபூர்வ அறிக்கையில் ஈழத் தமிழ்த் தேசிய இனத்திற்கெதிரான போர்க்குற்றம் மற்றும் இன அழிப்பை அனைத்துலக விசாரணைக்கு உட்படுத்த வேண்டும் என்றும், இதனை தற்போதுள்ள அரசாங்கத்திடமும் வேண்டுகோளாக முன்வைத்தார்.

ஈழத்தமிழர் ஒரு தேசிய இனமென்பதற்கான அங்கீகாரமென்பது ஈழத்தமிழர் வரலாற்றில் ஒரு முக்கிய மைல் கல்லாகப் பார்க்கப்படுகின்றது.

கனேடியத் தமிழர் தேசிய அவையும் மற்றைய அமைப்புக்களும் வரும் நாட்களில் மற்றைய முக்கிய கட்சிகளான லிபரல் மற்றும் என்.டி.பி.கட்சிகளுடன் இப்படியான சந்திப்புக்களை மேற்கொண்டு ஈழத்தமிழர் ஒரு தேசிய இனமென்பதையும், இனவழிப்பிற்கான சர்வதேச விசாரணையையும் வலியுறுத்துவார்கள் என தெரிவித்தனர். (இ-5)

# எதிர்வரும் மே 2 முதல் வற்வரி 15 வீதமாக அதிகரிப்பு வாழ்க்கைச் செலவு 10 ஆயிரம் ரூபாவினால் உயரும்

(கொழும்பு)

எதிர்வரும் மே மாதம் 2 ஆம் திகதி முதல் வற்வரி (VAT- பெறுமதி சேர்வரி) 15 வீதமாக அதி கரிக்கப்படவுள்ளது.

2016 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் 8, 12.5 வீதங்களாக வற்வரி வீதம் முன்மொழியப்பட்டிருந்தது.

எனினும்பொருளாதாரவிவகாரங்கள் அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க இதனை 15 வீதமாக அதிகரிப்பதற்கு அமைச்சரவையின் அனுமதியைப் பெற்றிருந்தார்.

இந்நிலையில் சர்வதேச நாணய நிதியத்துடன் இடம்பெறுகின்ற பேச்சுவார்த்தைகளையடுத்து வற்வரி அதிகரிப்பை சித்திரைப் புதுவருடத்திற்குப் பின்னர் மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி அறிவுறுத்தியிருந்தார்.

இந்நிலையில் எதிர்வரும் 2 ஆம் திகதி முதல் வற்வரி அமுலுக்கு வருகின்றது.

இதன் பிரகாரம் கேபிள் தொலைத்தொடர்புகளுக்கு மாதாந்தம் அறிவிடப்படும் 2 ஆயிரத்து 500 ரூபா, வற்வரி அதிகரிப்பினால் 2ஆயிரத்து 875 ரூபாவாகவும் மாதாந்த நீர் கட்டணமாக அறிவிடப்படும் ஆயிரத்து 500 ரூபா, ஆயிரத்து 725 ரூபாவாகவும் மின்சாரக் கட்டணம் 5 ஆயிரம் ரூபாவில் இருந்து 5 ஆயிரத்து 750 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இவற்றுடன் மருந்து சேவைகள் கட்டணங்கள், தனியார் பாடசாலைக் கட்டணங்கள், உணவுப்பொருட்கள் உட்பட பொருட்களின் விலைகளும் அதிகரிக்கப்படுகின்றன.

அரசாங்கத்தின் இந்த வரி அதிகரிப்பினால் குறைந்த வருமானம் மற்றும் நடுத்தர வருமானம் பெறும் குடும்பங்கள் அதிக பாதிப்பிற்குள்ளாகவுள்ளன.

மேற்படி வரி அதிகரிப்பினால் குறைந்த மற்றும் நடுந்தர வருமானங்களைக் கொண்ட குடும்பங்கள் 10 ஆயிரம் ரூபா அல்லது அதற்கு மேற்பட்ட வரி அதிகரிப்பைச் சுமக்க வேண்டியுள்ளது. (3)

# செய்தித்துளிகள்

## மின்னல் தாக்கி பெண் ஒருவர் பலி!

பாதுக்க-முருதகஹஹேன பிரதேசத்தில் மின்னல் தாக்கி பெண் ஒருவர் பலியாகியுள்ளார்.

குறித்த பிரதேசத்தைச் சேர்ந்த 66 வயதான பெண் ஒருவரே இவ்வாறு பலியாகியுள்ளதாக பாதுக்க பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவரது சடலம் பாதுக்க வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (இ-5)

## புத்தளத்தில் 6அடி நீளமுடைய முதலை பிடிக்கப்பட்டுள்ளது

புத்தளம் - ஆனமடு - மஹாஉஷ்வெப் பகுதியில் சுமார் 6 அடி நீளமுடைய முதலை ஒன்று பிடிக்கப்பட்டுள்ளது.

மஹாஉஷ்வெப் பகுதியில் தோண்டப்பட்டிருந்த குழியில் இருந்து நேற்று முன்தினம் மாலை இந்த முதலை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. (இ-5)

## தாக்குதலில் நால்வர் காயம்

மட்டக்களப்பு மாவட்டம் ஏறாவூர் பொலிஸ் பிரிவிலுள்ள கொம்மாதுறைக் கிராமத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு இடம்பெற்ற தாக்குதல் சம்பவமொன்றில் நால்வர் காயமடைந்திருப்பதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது,

கொம்மாதுறை 10 ஆம் கட்டையிலுள்ள வீடொன்றில் இரவுச் சாப்பாட்டுக்காகச் சென்று கொண்டிருந்த இருவர் மீது அங்கிருந்த இருவர் பொல்லு மற்றும் தடிகள் கொண்டு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (இ-5)

## 5 கைக்குண்டுகளுடன் காலியில் இருவர் கைது

காலி-மீட்டியாகொட- கிரலகஹவெல பகுதியில் 5 கைக்குண்டுகளுடன் இரண்டு பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த நபர்கள் மோட்டார் சைக்கிள் ஒன்றில் கைக்குண்டுகளுடன் பயணித்துக் கொண்டிருந்த போதே நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.இவர்களிடம் மீட்கப்பட்ட கைக்குண்டுகள் வெளிநாட்டில் தயாரிக்கப்பட்டவை எனவும் பொலிஸார் சுட்டிக்காட்டியுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புடையவர்கள் எனவும் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை தாம் மேற்கொள்வதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (இ-5)

## இராணுவ தினத்தை முன்னிட்டு ஈரானில் இராணுவ கண்காட்சி

ஈரானில் இராணுவ தினத்தை முன்னிட்டு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பாரிய இராணுவ கண்காட்சியும், அணிவகுப்பும் இடம்பெற்றதாக அந்நாட்டு செய்திகள் தெரிவிக்கின்றன.

ஈரானின் முப்படைகளின் பங்குபற்றுதலுடன் இடம்பெற்ற இந்த இராணுவ கண்காட்சியை ஈரான் ஜனாதிபதி ஹசன் ரூஹாணி தலைமை தாங்கி, ஆரம்பித்து வைத்தார்.இதன்போது, ஈரான் ரஷ்யாவிடம் இருந்து கொள்வனவு செய்த அதிநவீன ஆயுதங்களும் காட்சியப்படுத்தப்பட்டதாக மேலும் அந்த செய்திகள் குறிப்பிடுகின்றன.இந்நிகழ்வுக்கு அமெரிக்கா, இஸ்ரேல் உள்ளிட்ட நாடுகள் கடும் கண்டனம் தெரிவித்து இருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

## அமெரிக்காவில் 5 வயதுச் சிறுவன் துப்பாக்கியால் சுட்டதில் தங்கை பலி

அமெரிக்காவில் 5 வயதுச் சிறுவன் துப்பாக்கியால் சுட்டதில் அவனது 4 வயது தங்கை பரிதாபமாக உயிரிழந்தாள்.கடந்த சனிக்கிழமை நிகழ்ந்த இந்த சம்பவம் குறித்து பொலிஸ் அதிகாரிகள் கூறியதாவது, பிலடெல்பியாவின் கிங்ஸ்டன் பகுதியில் வசிக்கும் குடும்பத்தில் 5 வயதுச் சிறுவன் தனது 4 வயது தங்கையை துப்பாக்கியால் சுட்டான்.

முகத்தின் மீது குண்டு பாய்ந்து அந்தச் சிறுமி விழுந்தாள். சம்பவம் அறிந்து அங்கு விரைந்து வந்த வைத்தியர்கள் நடத்திய பரிசோதனையில் அந்தச் சிறுமி உயிரிழந்துவிட்டாள் என்பது தெரியவந்தது. (இ-5)

# தமிழ் சினிமா வரலாறு

141

## மனைவியின் சம்மதத்துடன் வி.என்.ஜானகியை மணந்தார் எம்.ஜி.ஆர்

அதனால் அவரும் காதலிப்பார். எம்.ஜி.ஆருக்கு கத்திச்சண்டை கற்றுத்தருவார் ஜானகி!

அரசருக்கு எதிராக அரசரின் இளைய மனைவியின் சகோதரன் திட்டம் தீட்டுவான். அதை எம்.ஜி.ஆரும் ஜானகியும் சேர்ந்து முறியடிப்பார்கள்.

இந்தப்படத்தில் எம்.ஜி.ஆர். ஒரு வேட்டி மட்டும் அணிந்து சாதாரண குடிமகனாக நடிப்பார். படம் முழுவதும் இந்த ஒரே உடைதான்!

கருணாநிதியின் வசனம் அருமையாக அமைந்தது. எம்.ஜி.ஆரும் ஜானகியும் சிறப்பாக நடித்திருந்தனர். எம்.ஜி.ஆரின் கத்திச் சண்டைகள் ரசிகர்களைக் கவர்ந்தன. படம் வெற்றி பெற்றது.

### வாழ்க்கைத் துணைவி

மருதநாட்டு இளவரசி 1950 இல் வெளிவந்தது. அதைத் தொடர்ந்து ஜானகியையும் தனது வாழ்க்கைத் துணைவியாக ஏற்க எம்.ஜி.ஆர். தீர்மானித்தார். அதற்கு முன் மனைவியின் சம்மதத்தைப் பெற எண்ணினார்.

ஜாணகியை தன் வீட்டுக்கு அழைத்துச் சென்று மனைவி சதானந்தவதியிடம் அறிமுகம் செய்து வைத்தார். சதானந்தவதியை அக்கா என்றே அழைத்தார் ஜானகி. இருவரும் சகோதரி போலவே பழகினார்கள்.

நாளடைவில் எம்.ஜி.ஆர் மனதில் ஜானகி இடம் பெற்றிருப்பதை சதானந்தவதி தெரிந்து கொண்டார். கணவரை ஒருநாள் அழைத்து வாழ்நாள் முழுவதும் உங்களுக்குப் பாரமாக இருந்து வருகிறேன். என்னால் உங்களுக்கு ஒரு சுகமும் இல்லை. என் தங்கையை (ஜானகி) நீங்கள் ஏற்றுக் கொள்ளுங்கள் என்று கூறினார்.

இதைக் கேட்டு எம்.ஜி.ஆர். கண் கலங்கினார். நீ மனப்பூர்வமாகத்தான் சொல்கிறாயா? என்று கேட்டார்.

மனப்பூர்வமாகத்தான் கூறுகிறேன். ஜானகியை நீங்கள் மணந்து கொள்ளுங்கள். ஆனால் நானும் ஜானகியும் ஒரே வீட்டில் இருக்க வேண்டாம் அவளுக்குத் தனி வீடு பார்த்து குடி வையுங்கள் என்றார் சதானந்தவதி.

மனைவியின் பூரண சம்மதத்துடன் ஜானகியை வாழ்க்கைத் துணைவியாக ஏற்றார், எம்.ஜி.ஆர்.

பாகவதர்-சின்னப்பா காலத்தில் பெரிய பாடல் ஆசிரியராகத் திகழ்ந்த பாபநாசம் சிவனின்





அண்ணன் பி.ஆர்.ராஜகோபாலய்யரின் மகள்தான் வி.என்.ஜானகி. (வைக்கம் நாராயணி ஜானகி என்பதன் சுருக்கமே வி.என்.ஜானகி).

எம்.ஜி.ஆர். சாதாரண வேடங்களில் நடித்து வந்த காலகட்டத்திலேயே அவர் கதாநாயகியாகப் புகழ் பெற்று விளங்கினார். எம்.ஜி.ஆரை விட அதிக சம்பளம் வாங்கி வந்தவர். எனினும் எம்.ஜி.ஆரை மணந்தபின் நடிப்பதை நிறுத்தி விட்டார். கணவரின் சாதனைகளுக்குத் துணை நின்றார்.

மருதநாட்டு இளவரசி, அந்தமான் கைதி, மர்மஜோகி ஆகிய படங்களில் எம்.ஜி.ஆர். நடித்தார். இந்த இரண்டு படங்களும் 1951 இல் வெளிவந்தன.

அந்தமான் கைதியின் கதை, வசனம், பாடல்களை கு.சா.கிருஷ்ணமூர்த்தி எழுதியிருந்தார். டி.கே.எஸ். சகோதரர்கள் மேடையில் நடித்த வெற்றி நாடகம். இதில் குணச்சித்திர வேடத்தில் எம்.ஜி.ஆர். நடித்தார்.


இப்படம் சுமாரான வெற்றியைத்தான் பெற்றது.

### “ஏ” சர்டிபிகேட்

மர்ம யோகி ஜுபுடர் பிக்சர்ஸ் தயாரிப்பு. திரைக்கதை- வசனத்தை ஏ.எஸ்.ஏ.சாமி எழுதியிருந்தார். டைரக்ஷன்-கே.ராம்நாத்.

இதில் எம்.ஜி.ஆருக்கு ஜோடி மாதுரிதேவி. வில்லியாக- ஆனால் முக்கிய பாத்திரத்தில் அஞ்சலிதேவி நடித்தார்.

ராபிஹூட் ஆங்கில படத்தைத் தழுவி தயாரிக்கப்பட்ட இப்படத்தில் கதாநாயகன் கரிகாலனாக எம்.ஜி.ஆர். பிரமாதமாக நடித்தார். கரிகாலன் குறி வைத்தால் தவற மாட்டான். (தொடரும்)



# ரணில் அரசாங்கத்தையும் கவிழ்க்குமா இந்தியா?

மைத்திரி- ரணில் அரசாங்கத்தால் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ள கொழும்புத் துறைமுக நகரத் திட்டமானது இந்தியாவின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக அமையாது என்பதைக் குறித்து நிற்கிறது.

**இவ்வாறு சிலோன் ருடே நாளிதழில் உபுல் ஜோசப் பெர்னாண்டோ எழுதியுள்ள கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார். இதனை மொழியாக்கம் செய்துள்ளவர் நித்திய பாரதி.**

சீனாவிற்கான ரணிலின் பயணம் தொடர்பாக இந்தியா அமைதி காத்து வருகிறது. இந்த அமைதிக்குப் பின்னரான இரகசியம் என்ன என்பது இந்தியாவிற்கு மட்டுமே தெரியும்.

கொழும்பு துறைமுக நகரத் திட்டத்தை நிறுத்துமாறு இந்தியப் பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல் தன்னிடம் தெரிவித்ததாக, மகிந்தவின் தேர்தல் தோல்வியைத் தொடர்ந்து, அவரது சகோதரரும் முன்னாள் பாதுகாப்புச் செயலருமான கோத்தபாய தெரிவித்திருந்தார். இத்திட்டத்தை இடைநிறுத்துமாறு இந்தியாவால் கோரிக்கை விடுக்கப்பட்ட போதிலும் இத்தீர்மானத்தை தனது சகோதரரின் அரசாங்கம் ஏற்றுக்கொள்ள மறுத்தமையாலேயே இந்தியாவுடன் முரண்பாடு ஏற்பட்டதாக கோத்தபாய தெரிவித்தார்.

கொழும்புத் துறைமுக நகரத் திட்டத்தை இடைநிறுத்துமாறு கோத்தபாயவிடம் டோவல் தெரிவித்திருந்தால், இதேவிடயத்தை இந்தியாவானது மைத்திரியிடமோ அல்லது ரணிலிடமோ கூறாமல் விடுவதற்கு எவ்வித காரணமும் இல்லை. எனினும், மைத்திரி மற்றும் ரணிலின் இந்தியப் பயணத்தின் போது, கொழும்புத் துறைமுக நகரத் திட்டத்தைத் தொடர்வதற்கான அனுமதியை இந்தியா வழங்கியிருந்ததாக கூறப்படுகிறது.

மகிந்தவின் ஆட்சிக் காலத்தில், காலிமுகத்திடலில் இடம்பெறும் கொழும்பு துறைமுக நகரத்திட்டத்தைச் சூழவுள்ள பிரதேசத்தை பரமாரிப்பதற்கான ஒப்பந்தமானது கிங்ஸ்பெரி விடுதியிடம் கையளிக்கப்பட்டது. இப்பராமரிப்புப் பணியைப் பிறிதொரு நிறுவனத்திடம் ஒப்படைக்க விரும்புவதாக அண்மையில் கிங்ஸ்பெரி விடுதி அறிவித்த போது, இந்த ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்வதற்கான தனது விருப்பத்தை இந்திய எண்ணெய் நிறுவனம் (IOC) வெளிப்படுத்தியிருந்தது.

திருகோணமலையில் எரிபொருள் தாங்கிகளை சீரமைக்கும் திட்டத்திற்கு இந்திய எண்ணெய் நிறுவனமே பொறுப்பாக உள்ளது. இதேவேளையில், இந்த நிறுவனமானது திருகோணமலைத் துறைமுக அபிவிருத்தித் திட்டத்திற்கும் பொறுப்பாக உள்ளது. இந்நிலையில் இந்நிறுவனமானது சீனத் துறைமுகத் திட்டத்திற்கு அருகிலுள்ள வளாகத்தைக் பராமரிப்பதற்கான ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவது தொடர்பாக சீனா எவ்வாறான கருத்தைக் கொண்டுள்ளது என்பது எமக்குத் தெரியாது. இதனை இந்திய எண்ணெய் நிறுவனத்திடம் கையளிப்பதற்கு இலங்கை அரசாங்கமானது தனது ஒப்புதலை இன்னமும் தெரிவிக்கவில்லை.

சீனாவிற்கான ரணிலின் பயணம் தொடர்பாகவும், இலங்கையில் மேற்கொள்ளப்படும் சீனாவின் துறைமுகத் திட்டம் மற்றும் இதற்கு அருகிலுள்ள வளாகத்தை இந்திய எண்ணெய் நிறுவனம் பொறுப்பெடுத்தல் போன்றன தொடர்பாக இந்தியா அமைதி பேணுவதன் பின்னால் இரகசியம் ஒன்று புதைந்துள்ளது.

மகிந்தவின் ஆட்சிக் காலத்தில், அம்பாந்தோட்டைக்கு அருகில் இந்தியத் துணைத்தூதரகத்தை அமைப்பதற்கு இந்தியா விரும்பியது. சீனாவின் துறைமுக நகரத் திட்டமானது இந்தியாவின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக இருக்காது என ரணில் இந்தியாவிடம் தெரிவித்துள்ளார்.

எனினும், சீனாவிற்கான ரணிலின் பயணம் தொடர்பான நிகழ்ச்சி நிரலை இந்தியா மிகவும் உற்றுநோக்கியது. ஆனால் இது தொடர்பாக ரணில் விழிப்புடன் இருந்தாரா என்பது தெரியவில்லை. சீனாவிற்கான தனது பயணத்தின் நிகழ்ச்சி நிரலை தனது அலரி மாளிகையிலிருந்து வெளியுறவுச் செயலகம் வரை ரணில் கவனமாகத் தயாரித்திருந்தார். இந்த நிகழ்ச்சி நிரலானது மிகவும் இரகசியமாக அலரிமாளிகையில் வைத்துத் தயாரிக்கப்பட்டது. ஆகவே, இது தொடர்பான தகவலைப் பெற்றுக் கொள்வது மிகக் கடினமானது என்பதை இந்தியா கண்டறிந்தது.(தொடரும்)

குழப்பத்திலும் தளர்ச்சியிலும் செயலை விட்டு விலகுவது பேடித்தனம்.

~ ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# தேர்தல் பிரசாரத்தின் போது சம்பந்தர் கூறாதது ஏன்?

ஒருவருக்கு கடுமையான மறதி நோய். மறதி நோய்க்காக அவர் டாக்டரைச் சந்தித்தார். டாக்டர் எனக்கு கடுமையான மறதி என்றார் அந்த நபர்.

அதற்கு டாக்டர் எவ்வளவு காலமாக இருக்கிறது என்று கேட்டார். நோயாளியோ எதை டாக்டர் கேட்கிறீர்கள் என்றார்.

மறதி என்று சொன்னதையே அந்தாள் மறந்து போனார். இதுதான் உண்மையான மறதி என்பதை அந்த டாக்டர் புரிந்து கொண்டார்.

இப்படியான மறதி எங்கள் அரசியல் தலைவர்களுக்கு வந்து விட்டால், என்ன கதி என்று நினைத்த போது தலை சுற்றியது.

சரி, முதுமைப் பருவத்தில் மறதி என்ற நோய் தாக்குவதாக மருத்துவர்கள் கூறுகின்றனர். அத்தகையதொரு மறதிக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தர் ஆளாகி விட்டாரோ என்று எண்ணத் தோன்றுகின்றது.

இதை நாம் கூறும் போது ஐயா! மறதிக்கும் அறளைக்கும் என்ன வித்தியாசம் என்று நீங்கள் கேட்பதும் புரிகிறது.

அறளை என்பதும் முதுமையில் ஏற்படுகின்ற ஒரு வியாதிதான். அதற்காக எல்லா முதியவர்களுக்கும் அறளை ஏற்பட்டு விடுவதில்லை என்பதையும் இங்கு கவனத்தில் கொள்ள வேண்டும்.

எதுவாயினும் மறதியும் அறளையும் வேறுபட்ட நோய்கள் என்பது மட்டும் இப்போதைக்குத் தெரிந்திருந்தால் பின்னர் இரண்டுக்குமான வித்தியாசத்தைக் கண்டு கொள்ள முடியும்.

இது ஒரு புறம் இருக்க 2016ஆம் ஆண்டில் தீர்வு எட்டப்படும் என்பது தனது சொந்தக் கருத்து என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் கூறியிருப்பதானது தமிழ் மக்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த பொதுத் தேர்தலின் போது 2016ஆம் ஆண்டில் இனப்பிரச்சினைக்கு இறுதித் தீர்வு அடையப்படும். இது நிச்சயம். இதை நம்புங்கள் என்று உறுதிபடக் கூறிய இரா.சம்பந்தன், இப்போது அது சொந்தக் கருத்து எனக் கூறுவதானது எவ்வளவு ஏமாற்றத்தனம் என்பதை அப்பட்டமாக வெளிப்படுத்தியுள்ளது.

2016ஆம் ஆண்டுக்குள் இனப்பிரச்சினைக்குத் தீர்வு கிடைத்துவிடும் என்று நம்புகிறேன். இது தனது தனிப்பட்ட கருத்து என தேர்தல் பிரசாரத்தின் போது இரா.சம்பந்தன் கூறியிருந்தால் அது நியாயமானதாக இருந்திருக்கும்.

இதைவிடுத்து ஜனாதிபதித் தேர்தலின் போது மைத்திரிபால சிறிசேனவை ஆதரித்து அவரின் வெற்றிக்குப் பின்னர் நடந்த பொதுத்தேர்தல் பிரசாரத்தின் போது,

2016க்குள் தீர்வு என்று கூறினால் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சம்பந்தருக்கு உத்தரவாதம் அளித்துள்ளார். அதனையே சம்பந்தர் ஐயா கூறுகின்றார் என்றே மக்கள் நினைப்பர்.

இவ்வாறாக மக்களை நம்பவைத்து வாக்குப் பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இர்ா.சம்பந்தர் இப்போது,

2016இல் தீர்வு காணப்படும் என்று கூறியது தனது சொந்தக் கருத்து எனத் தெரிவிப்பது எந்த வகையிலும் நியாயமற்றது. இத்தகைய பிறழ்வுகள் நொந்து போன தமிழ் மக்களை திட்டமிட்டு ஏமாற்றுவதாகவே அமையும்.

# ஜீ7 மாநாட்டில் பங்கு பற்றுவது நல்ல அபிப்பிராயத்தை வலுப்படுத்தும்

## இலங்கை அரசு நம்பிக்கை

(கொழும்பு)

ஜனாதிபதியின் ஜப்பான் விஜயம் தொடர்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அமைச்சர் மகிந்த சமரசிங்க கருத்து பகிர்ந்துள்ளார்.

ஜீ7 நாடுகளின் தலைவர்களது உச்சி மாநாட்டில் பங்கு பற்றுவதன் நிமித்தம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மே மாதம் ஜப்பானுக்கு விஜயம் செய்யவுள்ளார்.

ஜீ7 மாநாட்டில் கலந்து கொள்ளும் பலம் வாய்ந்த 7 நாடுகளினதும் தலைவர்களிடத்திலும் இலங்கை தொடர்பில் நல்லபிப்பிராயத்தை உருவாக்க மேற்கொள்ளும் ஜனாதிபதியின் பிரயத்தனத்துக்கு இது சிறந்ததொரு சந்தர்ப்பம் என ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்தார்.

சமகால அரசியல் விடயங்கள் தொடர்பிலும் இங்கு கருத்து தெரிவிக்கப்பட்டது.

எந்தவொரு கட்சியாக இருந்தாலும் அவற்றுக்கு இரண்டு தலைவர்கள் இருக்க முடியாது. இன்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சட்ட ரீதியான தலைவராக செயற்படுவது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அல்லாது வேறெவருமல்ல.

பொறுமை காத்து இருந்து விட்டுத்தான் திருந்துவதற்கு சந்தர்ப்பங்கள் ஏராளமாக வழங்கியிருந்தும் அவற்றை எல்லாம் பயன்படுத்தாத சிலரை மத்திய செயற்குழுவன் தீர்மானத்திற்கு அமைய ஜனாதிபதி கட்சியிலிருந்து நீக்குவதற்கு தீர்மானத்தை எடுத்திருந்தார்.

மைத்திரிபால சிறிசேன அவர்கள் எமது கட்சியின் தலைவராக இருப்பதால் தான் எமது ஆதரவாளர்கள் நல்ல முறையில் இருக்கின்றார்கள் என்பதை மறந்து விட வேண்டாம்.

இதை ஏற்றுக்கொண்டே ஒன்றிணைந்த எதிர்க் கட்சியினர் சிலர் அரசுடன் இணைந்து கொண்டுள்ளனர் என அவர் தெரிவித்தார். (செ-11)

# தனியார் வாகன சாரதி மீது ஆட்டோவில் வந்து தாக்குதல்

## அணிந்திருந்த சங்கிலியும் அபகரிப்பு

(யாழ்ப்பாணம்)

வீதியால் சென்ற தனியார் நிறுவன வாகன சாரதியை தாக்கிய குழுவினர் அவரது தங்க சங்கிலியையும் அபகரித்து தப்பிச் சென்றனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணியளவில் யாழ்ப்பாணம் கொட்டடி முஸ்லிம் கல்லூரி வீதி சந்தியில் இடம்பெற்றது.

இதன் போது தனியார் வாகனச்சாரதி வழமை போன்று வாகனத்தை நிறுவனத்திற்கு கொண்டு சென்றுள்ளார்.

அவ்வேளை அவரைப் பின்தொடர்ந்த ஆட்டோ ஒன்றில் வந்த குழுவினர் குறித்த தனியார் நிறுவன வாகனத்தை இடைமறித்ததுடன் சாரதியை இறக்கி கும்பலாக சேர்ந்து தாக்கியுள்ளனர்.

எதிர்பாராத தாக்குதலினால் நிலைகுலைந்த சாரதி சிறிது மயக்கம் அடைந்துள்ளார். இதனை அவதானித்த அக்குழு சாரதியின் கழுத்தில் இருந்த தங்கச் சங்கிலி, வாகனச் சாவி என்பவற்றை அபகரித்துச் சென்றுள்ளது.

சாரதியை குறித்த குழு தாக்கும் போது உலோக துண்டுமுள்ளினால்(நகளீஸ்) இடித்ததில் அவரது உடலில் கீறல்கள் ஏற்பட்டுள்ளன.

பச்சை நிறத்திலான ஆட்டோவில் சுமார் 6 பேர் கொண்ட குழுவினரே வந்து பட்டப்பகலில் இவ்வாறு அட்டகாசம் செய்துவிட்டு தப்பி சென்றுள்ளனர்.

சம்பவ இடத்திற்கு யாழ்ப்பாண குற்றத்தடுப்பு பொலிஸார் வருகை தந்ததுடன் சம்பவம் நடந்த சுற்றுச்சூழலில் தேடுதலிலும் ஈடுபட்டனர்.

எனினும் தாக்குதலாளிகள் எவரும் இதுவரை கைது செய்யப்படவில்லை. வாகனம் மாற்று சாவி இன்மை காரணமாக நீண்ட நேரம் நடுவீதியில் க்கைவிடப்பட்டு காணப்பட்டது. தாக்குதலுக்கு உள்ளான சாரதி தற்போது யாழ்ப்பாணம் போதனா வைததியசாலையில் சிகிச்சை பெற்றுவருகின்றார்.

சாரதியின் முகத்தில் கடுமையான தாக்குதல் அடையாளங்கள் தென்படுகின்றன. சம்பவம் தொடர்பாக பொலிஸ் விசாரணைகள் தொடர்கின்ற போதிலும் இவ்வாறான வழிப்பறி சம்பவங்கள் யாழில் அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (செ-4)

# கடற்பரப்பில் சட்டவிரோத பயணம் 11 பேருக்கு தண்டப்பணம் விதிப்பு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை கடற்பரப்பில் சந்தேகத்துக்கிடமான முறையில் பயணம் சென்ற புத்தளம் வென்னப்புவ பகுதியை சேர்ந்த 11 பேரும் தமது குற்றத்தை ஒப்புக்கொண்டதற்கிணங்க அவர்களுக்கு 23 ஆயிரம் ரூபாய் தண்டம் விதித்து பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதிபதி பொ.சிவகுமார் நேற்றைய தினம் தீர்ப்பளித்துள்ளார்.

பருத்தித்துறை கடற்பரப்பில் கடந்த 6 ஆம் திகதி புதன்கிழமை பலநாட்கலம் மற்றும் இரண்டு சிறிய படகுகளுடன் சந்தேகத்துக்கிடமான முறையில் சென்ற 11 பேரை இலங்கை கடற்படையினர் கைது செய்து காங்கேசன் துறைக்கு கொண்டு செல்லப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டனர்.

மேலதிக விசாரணைக்காக யாழ் கடற்தொழில் நீரியல் வளத்துறை அதிகாரிகளிடத்தில் ஒப்படைக்கப்பட்ட போது குறித்த சந்தேக நபர்கள் புத்தளம் வென்னப்புவ பகுதியை சேர்ந்தவர்கள் என்றும், அவர்கள் பயணித்த பலநாட்கலனில் 30 சிலிண்டர்கள் மட்டுமே காணபட்டதாகவும் மீன்பிடிப்பதற்கான வேறு உபகரணங்கள் எவையும் இல்லை என்றும,

பலநாட்கலனின் பதிவுச்சான்றிதழ் இல்லை என்றும் நடப்பாண்டு மீன்பிடி அனுமதிப்பத்திரம் இன்மை, படகுக்கான பதிவு புதிப்பிக்கப் படாமை என்பன விசாரணையின் போது தெரியவந்ததை அடுத்து பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர்.

நீதவான் இவர்களை பிணையில் விடுவித்திருந்த நிலையில் நேற்றைய தினம் இவர்களுடைய வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது அவர்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டதற்கமைய பலநாட்கலத்தில் இருந்த 7 பேருக்கும் மீன்பிடி சட்டத்தை மீறிய குற்றத்துக்காக தலா ஆயிரம் ரூபாயும் 2 சிறிய படகுகளில் இருந்த 4 பேருக்கு நடப்பாண்டு மீன்பிடி அனுமதிப்• பத்திரம் இன்மை, படகுக்கான பதிவு புதிப்பிக்கப்படாமை போன்ற குற்றத்துக் காக தலா 4 ஆயிரம் ரூபாயும தண்டமாக விதித்து நீதவான் தீர்ப்பளித்துள்ளார். (செ-9)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



எல்லா விலங்குகளையும் எல்லா தேவதூதர்களையும் விட மனிதன் உயர்ந்தவன். மனிதனைவிட உயர்ந்தவர்கள் யாரும் இல்லை. தேவர்களும் மீண்டும் கீழே வந்து மனித உடல் வாயிலாகவே முக்தி பெறமுடியும். மனிதன் மட்டுமே பூரணமடைகிறான். தேவர்களாலும் அடையமுடியா‌து.

நமது நாட்டுக்கு இப்போது வேண்டியது இரும்பை ஒத்த தசைகளும் உருக்கைப் போன்ற நரம்புகளுமே. மேலும் எதனாலும் தடைபடாத உலகின் விந்தைகளையும் மறை பொருட்களையும் ஊடுருவிப் பார்க்கவும் கடலின் அடிவரை செல்ல நேரிட்டாலும் எவ்வாறாயினும் கருதியதை முடிக்கும் ஆற்றல் பெற்றளவும் ஆன்மீகப் பெரும் வலிமை கொண்ட மனாங்களுமே.

நாம் போதிய காலம் அழுதாயிற்று. இனியும் அழ வேண்டாம். எழுந்து நின்று ஆண்மையுடைவர்கள் ஆகுங்கள். மனிதர்களை உருவாக்கும் மதமே நமக்கு வேண்டுவது. வீரர்களாக்கும் கொள்கைகளே நமக்குத் தேவை. எல்லா வகையிலும் வீரர்களை உருவாக்கும் கல்வியே நமக்கு வேண்டுவது. இதுவே உண்மைக்கு உரைகல். உங்கள் உடலையும் அறிவையும் பலவீனமாக்கும் எதையும் விஷம் என ஒதுக்கிவிடு. அதில் உயிரில்லை.அது உண்மையானதல்ல. உண்மை வலிமை தரும். உண்மை தூய்மையாகும். உண்மை எல்லா அறிவுமாகும். உண்மை வலிமைதர வேண்டும். ஒளிவீச வேண்டும். ஆற்றல் பொழிய வேண்டும்.

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணியிலிருந்து 6 மணி வரைமன்னார்பிரதேசத்தில் அரிப்பு, சவேரியார் குளம், CECB வெள்ளிமலை ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

# வடக்கின் வல்லவனாகியது குருநகர் கார்மேல்போய்ஸ்






ஜமகாவிளையாட்டுக்கழகம்லிட்ரோ ஹாஸ் அனுசரணையுடன் நடத்திய வடக்கின் வல்லவனுக்கான 9 பேர் 8 ஓவர்களை கொண்ட துடுப்பாட்ட போட்டி அண்மையில் நடைபெற்றது. இறுதியில் கார்மேல்போய்ஸ்சை எதிர்த்து சாவகச்சேரி சிவன் அணி மோதியது.

நாணயசுழற்சியில்வெற்றிபெற்ற கார்மேல் போய்ஸ் முதலில் களத்தடுப்பில் ஈடுபட்டது.

துடுப்பெடுத்தாடிய சிவன் அணி 8 ஓவர்கள் நிறைவில் 5 இலக்குகளை இழந்து 70 ஓட்டங்களை பெற்றது. அவ் அணி சார்பாக ஜதுர்சன் 18, காந்தன்17 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் கார்மேல் போய்ஸ் சார்பாக குசாந்3, விமல் 01, றகீம்1 இலக்கினைக் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கார்மேல் போய்ஸ் 6.4ஓவர்களில் 3 இலக்கினை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. இதில் ஜிந்தா 35,தேசிகன்22 ஓட்டங்களை பெற்றனர். பந்து வீச்சில் சிவன் அயி சார்பாக அமல், ஜெனி, காந்தன் தலா ஒரு இலக்கினை கைப்பற்றினர்.

ஆட்டநாயகனாககார்மேல்போய்ஸ் ஜிந்தா தெரிவானார். இவ் வெற்றியுடன் வடக்கின் வல்லவனாக கார்மேல் போய்ஸ் மகுடம் சூடியது. (கு)


### புதிய விடியல் உதைபந்தாட்டம்

## சென். மேரிஸ் அணியை வீழ்த்தி பாடும்மீன் வி.கழகம் சம்பியன்



புதிய விடியல் உதைபந்தாட்ட இறுதியாட்டத்தில் சென் மேரிஸை 1.0என்ற கோல் அடிப்படையில் வீழ்த்தி வெற்றிக்கிண்ணத்தை கைப்பற்றியது பாடும்மீன் வி.கழகம். கடந்தசனிக்கிழமை இளவாலைஹென்றி அரசர்கல்லூரிமைதானத்தில் மேற்படி போட்டி இடம்பெற்றது. இப்போட்டியில் சிறந்த வீரராக ஒரு கோலினை அடித்த மயூரனும் சிறந்த கோல் காப்பாளராகபிரதீபனும் தெரிவாகினர். மேலும் ஒன்பது மாத கால தடைக்குப் பிறகு குருநகர் பாடும்மீன் கலந்து கொண்ட முதலாவது போட்டித் தொடரிலே சம்பியன் ஆகியது குறிப்பிடத்தக்கது. (கு)

## கலைஒளியை வீழ்த்தி ஞானம்ஸ் சம்பியன்



குப்பிளான்விக்னேஸ்வரா விளையாட்டுக்கழகம் வருடாந்தம் நடத்தும் மென்பந்து சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டியில் இணுவில் கலை ஒளி விளையாட்டுக் கழகத்தை 45 ஓட்டங்களால் வெற்றிகொண்டு சம்பியன் கிண்ணத்துடன் 10 ஆயிரம் ரூபா பணப் பரிசிலையும் தமதாக்கியது கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக்கழகம். சம்பியன் ஆன அவ் அணியை படத்தில் காணலாம். (கு)


## பிராவோக்கு எச்சரிக்கை



மும்பை இந்தியன்ஸ் அணிக்கு எதிராக நடைபெற்ற ஐ.பி.எல். லீக் ஆட்டத்தின்போது நடுவரின் முடிவுக்கு அதிருப்தி தெரிவிக்கும் வகையில் நடந்து கொண்ட குஜராத் லயன்ஸ் அணி ஓல் ரவுண்டர் டுவைன் பிராவோவை போட்டி நடுவர் கடுமையாக எச்சரித்துள்ளார்.

அந்த போட்டியில் பிராவோ 4 ஓவரில் 39 ஓட்டங்கள் விட்டுக் கொடுத்து ஒரு விக்கெட் வீழ்த்தியதுடன் 6 பந்தில் 2 ஓட்டங்கள் மட்டுமே எடுத்து ஏமாற்றமளித்தார். (க)

# மாஸ்டர்ஸ் டென்னிஸ் ரபேல் நடால் சம்பியன்



மொனாக்கோ நாட்டில் நடைபெற்ற மான்டி கார்லோ மாஸ்டர்ஸ் டென்னிஸ் போட்டித் தொடரின் ஆண்கள் ஒற்றையர் பிரிவில், நட்சத்திர வீரர் ரபேல் நடால் (ஸ்பெயின்) 9 ஆவது முறையாக சம்பியன் பட்டம் வென்றார்.

இறுதிப் போட்டியில் பிரான்ஸ் வீரர் கேல் மான்பில்சுடன் நேற்று முன்தினம் மோதிய நடால் 7-5 என்ற கணக்கில் முதல் செட்டை வென்று முன்னிலை பெற்றார்.

இரண்டாவது செட்டில் கடும் நெருக்கடி கொடுத்த மான்பில்ஸ் 7-5 என வென்று சமநிலை ஏற்படுத்தினார். எனினும், கடைசி செட்டில் அதிரடியாக விளையாடி ஆதிக்கம் செலுத்திய நடால், மான்பில்சின் சர்வீஸ் ஆட்டங்களை எளிதாக முறியடித்து 7-5, 5-7, 6-0 என்ற செட் கணக்கில் வென்று சம்பியன் பட்டத்தை தட்டிச் சென்றார். விறுவிறுப்பான இப்போட்டி 2 மணி, 46 நிமிடம் நீடித்தது. நடப்பு சீசனில் நடால் பெறும் முதல் பட்டம் இது. அவர் 9 ஆவது முறையாக மான்டி கார்லோ தொடரில் பட்டம் வென்றது குறிப்பிடத்தக்கது.

இதில் 2005 முதல் 2012 வரை அவர் தொடர்ச்சியாக கோப்பையை கைப்பற்றி ஆதிக்கம் செலுத்தி வந்தார். 2013 இறுதிப்போட்டியில் ஜோகோ விச்சிடம் தோற்றார். ஏடிபி மாஸ் டர்ஸ்1000 அந்தஸ்துள்ள போட்டிகளில்தனது 28 ஆவது சம்பியன் பட்டத்தை வென்ற நடால், ஜோகோவிச் சாதனையை சமன் செய்தார். (க)

# கடந்த அரசின் திட்டங்களை கைவிட்டதாலேயே நெருக்கடி

## மக்கள் பாதிக்கப்படுவதாக மகிந்த விசனம்

(கொழும்பு)

கடந்த அரசாங்கத்தின் திட்டங்கள் கைவிடப்பட்டதனால் அரசாங்கம் நெருக்கடிகளை எதிர்நோக்கி வருவதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கடந்த அரசாங்கத்தின் அபிவிருத்தித்திட்டங்கள் நிறுத்தப்படாது முன்னெடுக்கப்பட்டிருந்தால் நாடு இந்தளவு பொருளாதார நெருக்கடிகளை எதிர்நோக்கியிருக்காது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

குருநாகலில் நேற்று இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது அபிவிருத்தித்திட்டங்களை கைவிட வேண்டாம் என நாம் தற்போதைய அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்கினோம் எனினும் அதை அரசு கருத்தில் எடுக்காது சீனாவின் திட்டங்களை ஆரம்பத்தில் உதறித் தள்ளியது.

சீனாவுடனான நட்புறவில் மாற்றம் கொண்டுவரக் கூடாது என பல முறை சுட்டிக்காட்டியும் அவர்கள் அதை புறந்தள்ளி கேலி செய்துவிட்டு இப்போது பொருளாதாரம் சரிந்துவிட மீண்டும் சீனாவை நோக்கி ஓடுகின்றனர்.

நாட்டின் பொருளாதார சுமை தாக்கத்தை ஏற்படுத்தியுள்ள நிலையில் வற்வரி அதிகரிப்பானது மக்களின் வாழ்க்கையை நேரடியாக பாதிக்கும்.

இவ்வாறு அரசாங்கத்தின் பிழைகளினால் மக்கள் பல நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகின்றனர் என மகிந்த தெரிவித்துள்ளார். (செ-12)

# நடேஸ்வரா கல்லூரிக்கு மாவை நேற்று விஜயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வலிகாமம் வடக்கு காங்கேசன்துறை நடேஸ்வரா கல்லூரியை மீள ஆரம்பிப்பதுதொடர்பாக ஆராய்வதற்காக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா குறித்த பாடசாலைக்கான விஜயம் ஒன்றை நேற்றையதினம் காலை மேற்கொண்டுள்ளார்.

கடந்த 23 வருடங்களாக இயங்காத நிலையில் இருந்த மேற்படி பாடசாலை கடந்த மாதம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனாவினால் விடுவிக்கப்பட்டது.

இந்நிலையில் குறித்தபாடசாலை 2ஆம் தவணை பரீட்சை காலத்தில் திறக்கப்படும் என கூறப்பட்ட நிலையில்அதற்கான முய ற்சிகள் குறித்து ஆராய்வதற்காகவே நேற்றைய தினம் காலை 10.30 மணிக்கு மாவை சேனாதிராஜா குறித்த பகுதிக்கு சென்றிருந்தார்.

நாடாளுமன்ற உறுப்பினருடன் வலிகாமம் வலயக் கல்வி பணிப்பாளர், மற்றும் முன்னாள் வலி. வடக்கு பிரதேச சபை தவிசாளர் ஆகியோரும் சென்றிருந்தனர்.

இதன்போது பாடசாலையின் தேவைகள்குறித்தும் நாடாளுமன்ற உறுப்பினர் ஆராய்ந்தார்.

மேலும் பாடசாலையை மீள ஆரம்பிப்பதற்காகபடையினர் மேற்கொண்டு வரும் துப்புரவு பணிகளையும் நாடாளுமன்ற உறுப்பினர் பார்வையிட்டதுடன், மேற்படி பாடசாலைக்குச் செல்லும் காங்கேசன்துறை பிரதானவீதியில் உள்ள படையினரின் சோதனை சாவடியை அகற்றவேண்டும் என பொதுமக்கள் மற்றும்பாடசாலை சமூகம்விடுத்த கோரிக்கையை உரிய இடத்திற்கு கொண்டு செல்வோம் எனவும்நாடாளுமன்ற உறுபபினர் இதன்போது கூறியுள்ளார். (செ-11)

## சிறுநீரக வர்...

முதலாம் சந்தேக நபரே இவ்வாறு தப்பிச் சென்றுள்ளார். குற்றச் செயல்களுடன் தொடர்புடைய அல்லது சந்தேகிக்கப்படும் நபர்கள் மிரிஹானவில் அமைந்துள்ள வெளிநாட்டு பிரஜைகளை தடுத்து வைக்கும் முகாமில் தடுத்து வைப்பது வழமையானதாகும்.

அவ்வாறு தடுத்து வைக்கப்பட்டிருந்த வெளிநாட்டு பிரஜை ஒருவரே தப்பிச் சென்றுள்ளார். இந்த விடயம் குறித்து குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்திற்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தப்பிச் சென்ற நபர் தவிர்ந்த ஏனைய ஏழு இந்தியர்களும் நேற்றையதினம் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர்.

இந்த முகாமில் தொடர்ந்தும் சந்தேக நபர்களை தடுத்து வைக்க முடியுமா என ஆராயுமாறு நீதவான் நிசாந்த பீரிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு அறிவுறுத்தல் விடுத்துள்ளார்.

இந்த மனு மீதான விசாரணைகள் எதிர்வரும் 2-ம் திகதி மீளவும் விசாரணைக்கு உட்படுத்தப்பட உள்ளது. (செ-11)

## வாளால் வெட்...

இதில் அண்மையில் லண்டனிலிருந்து யாழ்வந்த தச்சன்தோப்பினைச் சேர்ந்த பொன்னம்பலம் நந்தகுமார் (வயது 48) என்பவரே வாள்வெட்டுக்கு இலக்கானவராவார்.

இடது காலில் ஆழமான காயங்களுடன் மீட்கப்பட்ட அவர் சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவ் வாள்வெட்டுச் சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸில் முறைப்பாடு ஒன்றும் செய்யப்பட்டுள்ளது. (செ-30,89)

## பொருத்து...

புனர்வாழ்வு, மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் தெரிவித்துள்ளார்.

மாதிரி வீடுகளைப் பார்வையிட்ட பின்னர், யாழ்ப்பாண மாவட்டத்தில், இந்த வீடுகளைப் பெறுவதற்கு, 32 ஆயிரம் பேர் விண்ணப்பித்துள்ளனர்.

அதுபோன்று வவுனியா மாவட்டத்திலும், 8 ஆயிரத்து 500 பேர் விண்ணப்பித்துள்ளனர். இது இந்த மாதிரி வீடுகளை மக்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர் என்பதை நிரூபிக்கிறது.

எனவே பாதிக்கப்பட்ட மக்களுக்கு, இந்த வீட்டுத்திட்டத்தை துரிதப்படுத்த வேண்டியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (செ-11)

# அனுமதியின்றி பருத்தித்துறை கடற்பரப்பில் கடலட்டை பிடித்தவர்களுக்கு அபராதம்

(கொழும்பு)

அனுமதிப்பத்திரமின்றி பருத்தித்துறை கடற்பரப்பில் கடலட்டை பிடித்த 11 தென்னிலங்கை மீனவர்களுக்கும் தலா 4 ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்து பருத்தித்துறை மாவட்ட நீதிவான் பெ.சிவகுமார் திங்கட்கிழமை (18) தீர்ப்பளித்தார்.

மேலும், மீனவர்களிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்ட உபகரணங்களை மீண்டும் மீனவர்களிடம் ஒப்படைக்குமாறும் யாழ்.மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்கள அதிகாரிகளுக்கு நீதிவான் உத்தரவிட்டார்.

மேற்படி மீனவர்கள் கடந்த 6ஆம் திகதி இரண்டு மீன்பிடி படகுகள் மற்றும் ஒரு விசைப்படகு ஆகியவற்றைப் பயன்படுத்தி கடலட்டை பிடித்துக்கொண்டிருந்த போது, காங்கேசன்துறை கடறபடையினரால் கைது செய்யப்பட்டு, யாழ்ப்பாணம் கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

அவர்களிடமிருந்து 6 எரிபொருள் பரல்கள், 30 ஒக்சிசன் சிலிண்டர்கள் என்பன மீட்கப்பட்டன.

நீதிமன்றத்தால் கடந்த 7ஆம் திகதி பிணையில் விடுவிக்கப்பட்ட குறித்த மீனவர்களின் வழக்கு நேற்று மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, குற்றம் நிரூபிக்கப்பட்டநிலையில் இவ்வாறு தீர்ப்பு வழங்கப்பட்டது. (செ-11)

## நான் வழங்கிய சுதந்திரத்...

அரசாங்கம் வடமாகாணத்திற்கு அதிகமான சேவைகளை வழங்கியிருப்பதாக வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அண்மையில் தெரிவித்திருக்கும் கருத்து தொடர்பாக மகிந்த ராஜபக்ஷ இங்கு பதில் கருத்து வெளியிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்தும் கருத்து தெரிவிக்கையில், வடமாகாண சபைக்கென தேர்தல் ஒன்றை நடத்த நான் நடவடிக்கை எடுத்தபடியினால்தான் இவ்வாறு மனதில்பட்ட கருத்துக்களையெல்லாம் தெரிவிப்பதற்கான சுதந்திரம் அவர்களுக்குக் கிடைத்திருக்கிறது.

தமிழீழ விடுதலைப் புலிகளை தோற்கடித்தும், அங்கு புதைக்கப்பட்டிருந்த கண்ணிவெடிகளை அகற்றியும் வடக்கில் அவர்களுக்கு சுதந்திர நடமாட்டத்தை ஏற்படுத்திக்கொடுத்தேன். அனைத்துவித பௌதிகவசதிகளையும்ஏற்படுத்திக்கொடுத்தேன.

குறிப்பாக மின்சார வசதி, குடிநீர் வசதி, வீதிகள், பாடசாலைகள் என்பவற்றை ஏற்படுத்திக் கொடுத்தேன். யாழ். போதனா வைத்திய சாலையிலுள்ள வசதிகளைப் போன்று இலங்கையிலும் வேறு வைத்தியசாலைகளில் வசதிகள் இல்லை.

அந்த வைத்தியசாலையின் முதலாவது மற்றும் 10 மாடியில் சத்திர சிகிச்சைப் பிரிவுகள், இரத்த வங்கி, ஆய்வுகூடம், எக்ஸ்ரே வசதி ஆகிய அனைத்தும் ஏற்படுத்திக்கொடுத்தேன். குறிப்பாக ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக்காலத்தில் சுட்டெரிக்கப்பட்ட யாழ்ப்பாண நூலகத்தை சரிப்படுத்திக் கொடுத்தேன்.

அந்தக் காலத்தில் இருந்த தேர்தல் வாக்களிப்பு வீதத்தையும், இன்றைய காலத்தில் அங்கு காணப்படுகின்ற தேர்தல் வாக்களிப்பு வீதத்தையும் பாருங்கள். அதன் மூலம் சுதந்திரத்தை எவ்வளவு விரைவாக ஏற்படுத்திக் கொடுத்துள்ளேன் என்பது புரியும.

இவ்வாறு அனைத்து வசதிகளும் ஏற்படுத்திக் கொடுத் திருப்பதால் அவர்கள் பல்வேறு விதங்களில் எதிர்பார்ப்புக்களை முன்வைத்து வருகிறார்கள்.

அதற்கு அடிபணிவது போல் இந்த அரசும் அதனை வழங்குவோம், இதனை வழங்குவோம் என்று கூறிவருகின்ற நிலையில் இவை அனைத்தையும் நாங்கள் பார்த்துக் கொண்டே இருக்கின்றோம் என்றார். (செ-11)

# மரண அறிவித்தல்

## திருமதி மயில்வாகனம் நாகேஸ்வரி



நவிண்டிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மயில்வாகனம் நாகேஸ்வரி அவர்கள் 18.04.2016 நேற்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மயில்வாகனம் (இளைப்பாறிய காணி விலை மதிப்பீட்டாளர்) அவர்களின் அன்பு மனைவியும் குகதாசன், வசந்தா, சண்முகதாசன், சாரதா, யோகதாசன், கிருஷ்ணதாசன் ஆகியோரின் அன்புத் தாயாரும் சத்தியதேவி, தெய்வேந்திரன், சிவரூபி, காலஞ்சென்ற ஜெயக்குமார் மற்றும் சுஜீபா, மைதிலி ஆகியோரின் மாமியாரும் சுதர்சன்-பார்வதி, சுலக்ஷன், தர்சி, நிரோஜன், நடீஸ், விமலி, விசாலி, பிரசாந்த், செந்தூரன், சிவாந்தி, சண்முகப்பிரியா, காயத்திரி, சகானா, லக்ஸ்கரன் ஆகியோரின் பேர்த்தியாரும் நிலாவின் பூட்டியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நாளை (20.04.2016) புதன்கிழமை காலை 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் எள்ளங்கும் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(4241)

கரணவாய் மத்தி,
நவிண்டில், கரவெட்டி.

தகவல்
குடும்பத்தினர்
0777734206 / 0212263806 /
0779678785

# ஜனாதிபதி...

வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கு அழைப்பு விடுத்திருந்தார். வடமாகாண சபையின் 49ஆவது அமர்வின்போது முதலமைச்சரும் இவ்விடயத்தை சபையில் தெரிவித்திருந்தார்.

இதில் பிரேரணைகள் குறித்த விவாதம் இடம்பெற்ற போது, வடமாகாணத்தில் சட்ட விரோதமான காணி சுவீகரிப்புக்கள் நல்லாட்சி அரசாங்கத்திலும் நடைபெற்று வருகின்றது. ஆனைக்கோட்டை கூழாவடி பகுதியில் காணிகள் அளப்பதற்கு நில அளவையாளரகள் முற்பட்ட போது, அங்கு போராட்டம் முன்னெடுக்கப்பட்டதுடன், யாழ்.மாவட்ட அரசாங்க அதிபரின் அலுவலகமும் முற்றுகையிடப்பட்டது.

எனவே, வடமாகாணத்தின் காணி மற்றும் சட்டத்தினை கையாள்வதற்கு வடமாகாண முதலமைச்சர் இருக்கின்றார். எனவே, காணி சுவீகரிப்பினை நிறுத்துவதற்கு உடனடியாக ஜனாதிபதிக்கு தெரிவிக்குமாறு வடமாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் கோரியிருந்தார். அதன்பின்னர், வடமாகாண முதலமைச்சர் கருத்து தெரிவிக்கும் போது, வடமாகாண காணி பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடுவதற்கு எதிர்வரும் 18 ஆம் திகதி (நேற்றைய தினம்) ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் இணைந்து அழைப்பு விடுத்துள்ளனர்.

அந்த கலந்துரையாடலின் போது, காணி சுவீகரிப்பு மற்றும் காணிப் பிரச்சினைகள் குறித்த ஜனாதிபதியின் கவனத்திற்கு எடுத்துக் கூறுவதற்கு, உறுப்பினர்களிடம் இருக்கும் தரவுகளை கையளிக்குமாறும் சட்டத்திற்கு புறம்பான காணிகள் எடுக்கப்படுகின்ற விடயம் பற்றியும், அதன் பாரதூரங்கள் பற்றியும் எடுத்துக் கூறவுள்ளதாக முதலமைச்சர் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் வடக்கு மாகாண முதலமைச்சருக்கு திடீர் சுகவீனம் ஏற்பட்டு வைத்தியசாலையில் கடந்த சில நாட்களாக சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட நிலையில் மேற்படி சந்திப்பு பிற்போடப்பட்டுள்ளது. இந்நிலையில் குறித்த சந்திப்பு இனி எப்போது இடம்பெறும் என்ற தகவல் வெளியிடப்படவில்லை.(செ-4)

# புதிய பொலிஸ்மா...

இதன்படி, நாட்டின் 34-வது பொலிஸ் மா அதிபராக பூஜித ஜயசுந்தரவை ஜனாதிபதி நியமிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

முன்னாள் பொலிஸ் மா அதிபர் என்.கே. இலங்கக்கோன் ஓய்வுபெற்றதை அடுத்து, அந்த வெற்றிடத்துக்கு மூன்று பேரின் பெயர்கள் அரசியலமைப்பு பேரவையிடம் பரிந்துரைக்கப்பட்டிருந்தன.

எஸ்.எம்.விக்கிரமசிங்க, பூஜித ஜயசுந்தர மற்றும் சந்தன விக்கிரமரத்ன ஆகிய மூன்று துணை பொலிஸ்மா அதிபர்களிலும் பூஜித ஜயசுந்தரவின் பெயரை அரசியலமைப்பு பேரவை ஜனாதிபதியிடம் பரிந்துரை செய்துள்ளது. (செ-11)

# 10 வருடங்களின்...

குறித்த நபர்கள் தொழில் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த நிலையில் திசைமாறி மாலைதீவு பகுதிக்கு சென்றதால் மாலைதீவு கடற்படை இவர்களை கடந்த 2006ஆம் ஆண்டு கைது செய்திருந்தது. மன்னார் மற்றும் வவுனியா ஆகிய பிரதேசங்களில் இருந்து வடபகுதி கடல் ஊடாக மாலைதீவுக்குச் சென்றபோதே இவர்கள் கைது செய்யப்பட்டதாக உறவினர்கள் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட குறித்த மூவரிற்கும் ஆதரவாக அந்த நாட்டில் இருந்து சட்டத்தரணிகள் யாரும் முன்னிலையாகாத காரணத்தினாலும், சரியான மொழி பெயர்ப்பு இல்லாத காரணத்தினாலும், இவர்களுக்கு 15 ஆண்டு காலசிறைத்தண்டனை விதித்து மாலைதீவு நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தது.

அதேவேளை இந்த மூன்றுபேரும் மாலைதீவு சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக காணாமல்போனவர்களை கண்டறியும் மெக்ஸ்வெல் பரணகம தலைமையிலான ஜனாதிபதி ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்யப்பட்டதாகவும் உறவினர்கள் தெரிவித்திருந்தனர்.

இதனடிப்படையில் இவர்கள் மூவரும் 10வருடங்களின் பின்னர் இலங்கை அரசாங்கத்தினால் மீட்கப்பட்டு கொழும்புக்கு வரவழைக்கப்பட்டு வெலிக்கடச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

வடக்கு, கிழக்கு பகுதிகளில் இருந்து காணாமல்போன பலர் வெளிநாடுகளில் வாழ்வதாக பரணகம ஆணைக்குழு கூறியிருந்த நிலையில், மேற்படி மூன்று பேரும் அரசாங்கத்தால் மாலைதீவில் இருந்து கொண்டு வரப்பட்டுள்ளனர்.

அதேநேரம் இவர்களை விடுதலை செய்வதாக கூறி மாலைதீவில் இருந்து இலங்கைக்கு அழைத்து வரப்பட்டநிலையிலும் இதுவரை அவர்கள் விடுதலை செய்யப்படாமல் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள் என்றும் அவர்களை விரைவில் விடுதலை செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் எனவும்கோரி 3 கைதிகளுடைய உறவினர்களும் நேற்றைய தினம் கொழும்பில் உள்ள மனித உரிமை ஆணைக்குழுவின் அலுவலகத்தில் தமது முறைப்பாட்டினைபதிவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-9)

# கோத்தா நேற்று...

களில் ஆஜராகத் தவறியுள்ளார்.

கோத்தபாய வெளிநாடு சென்றுள்ளதாக ஆணைக்குழுவின் முன்னிலையில் அறிவிக்கப்பட்டுள்ளது. இலங்கை விமானப்படை விமானப் பயணங்களில் இடம்பெற்ற மோசடிகள் தொடர்பிலான விசாரணைகளுக்காக கோத்தபாய நேற்று அழைக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில் மருத்துவ சிகிச்சைகளுக்காக தாம் வெளிநாடு சென்றுள்ளதனால் இன்றைய (நேற்றைய) விசாரணைகளில் பங்கேற்க முடியாது என கோத்தபாய ராஜபக்ஷ அறிவித்துள்ளார். இதன்படி கோத்தபாய ராஜபக்ஷ நாடு திரும்பியதும் ஆஜராக வேண்டிய நாள் பற்றி அறிவிக்கப்பட உள்ளதாகத் ஆணைக்குழுத் தகவல்கள் குறிப்பிடுகின்றன. (செ-12)

# துப்பாக்கி...

ள்ளார்.

கைது செய்யப்படும் போது, துப்பாக்கி, துப்பாக்கி ரவை கூடு, 8 தோட்டாக்கள், மூன்று செல்போன்கள் என்பன அவரிடம் இருந்து கைப்பற்றப்பட்டதாக அவரை கைது செய்த விசேட பொலிஸ் குழு தெரிவித்துள்ளது.

பலப்பிட்டிய பொலிஸ் நிலையத்திற்கு அருகில் பெப்ரவரி 16ம் திகதி இரண்டு பேர் மீது நடத்தப்பட்ட துப்பாக்கி பிரயோக சம்ப வத்துடன் சந்தேக நபருக்கு தொடர்புள்ளது என்பதை கண்டறிய பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அம்பாலங்கொட, ஊரகஸ்ஹந்திய, மீட்டியாகொட ஆகிய பிரதேசங்களில் நடந்த சில குற்றச் செயல்களுடன் இவருக்கு தொடர்பிருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

கொஸ்கொடையில் இயங்கும் பாதாள உலக குழு தொலைபேசியில் வழங்கும் ஆலோசனைகளுக்கு அமைய சந்தேக நபர் செயற்பட்டு வந்தமை விசாரணைகளில் கண்டறியப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது.

2015ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் கொழும்பு கொட்டாஞ்சேனையில் போதைப் பொருள் விற்பனையுடன் சம்பந்தப்பட்ட பெண்ணொருவர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்துடன் எழிலன் என்பவருக்கு தொடர்பிருக்குமா என்பது குறித்தும் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

கொழும்பு கொட்டாஞ்சேனையை வசிப்பிடமாக கொண்ட 29 வயதான எழிலன், புலிகள் அமைப்பில் இருந்த போது, மூன்று முறை இராணுவத்தின் துப்பாக்கி சூட்டுக்கு இலக்காகி படுகாயமடைந்தவராவார்.

பிரதிப் பொலிஸ் மா அதிபர் ரஞ்சித் பெரேரா தலைமையிலான விசேட குழுவினரே இந்த சந்தேக நபரை கைது செய்துள்ளனர்.(செ-11)

# பெறுமதி...

ப்படும் 2,500 ரூபா கட்டணத்துக்கு மேலதிகமாக 375 ரூபாயும், 1,500 ரூபா நீர்க்கட்டணத்துக்கு மேலதிகமாக 225 ரூபாயும்,

5 ஆயிரம் ரூபா மின் கட்டணத்துக்கு மேலதிகமாக 750 ரூபாயும் அறவிடப்படும். அத்துடன், தனியார் வைத்திய நிலையங்கள், தனியார் பாடசாலைகள், ஹோட்டல்கள், உணவகங்கள், போக்குவரத்து உள்ளிட்ட சகல துறைகளும் இந்தக் கட்டண உயர்வைச் செய்தேயாகவேண்டும்.

2016ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டத்தில் 11 சதவிகிதமாகவிருந்த வற் வரி 8 சதவிகிதமாகவும், 12.5 சதவிகிதமாகவும் இரு முறைகளாக மாற்றம் செய்யப்பட்ட போதிலும் அது நடைமுறைப்படுத்தப்படவில்லை.

அதனைத் தொடர்ந்து வற் வரியை 15 சதவிகிதமாக அதிகரிப்பதற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முன்வைத்த பிரேரணைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருக்கின்றது.

எவ்வாறாயினும், வற் வரி அதிகரிப்பால் சாதாரண மற்றும் நடுத்தர வர்க்கத்தினரே பெருமளவில் பாதிக்கப்படுவர் என பொருளாதார நிபுணர்கள் எதிர்வுகூறியுள்ளனர்.(செ-11)

# வரலாற்றிலேயே...

யத்தின் பணிப்பாளர் சரத் பிரேம லால் தெரிவித்துள்ளார்.

நாட்டின் அதிகூடிய வெப்பநிலை யான 38.9 பாகை (செல்சியஸ்) வவு னியாவிலும் அதற்கடுத்து பொலநறு வையில் 36.9 பாகையும், குருநாகல மற்றும் இரத்தினபுரியில் 36.2 பாகையும், பொத்துவிலில் 35.2 பாகையும் பதிவாகியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

கொழும்பின் சராசரி வெப்பநிலை 33 பாகை செல்சியஸாகப் பதிவாகியுள்ளதாகவும் இங்கு காற்றின் வேகம் மணிக்கு 16 கிலோமீற்றர்களாகக் குறைந்துள்ளமையே இதற்குக் காரணம் எனவும் கூறிய சரத் பிரேமலால்,

வசதி வாய்ப்புள்ள கொழும்பு வாசிகள் இந்தக் கோடை காலத்தை சமாளிப்பதற்காக நுவரெலியா போன்ற மலைப் பிரதேசங்களில் முற்றுகையிட்டுள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார். (செ-11)


**தேவை**

தங்கி நின்று பணிபுரியக்கூடிய வீட்டுப் பணிப் பெண் தேவை.
சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கப்படும்
தொடர்பு கொள்ளவும்:-
0777911980
(4240)






மனுவல் செபரட்ணம்

எமது கல்லூரி ஆசிரியை திருமதி மரியகுணசீலி பத்மநாதன் அவர்களின் அன்புத் தந்தையார் மனுவல் செபரட்ணம் அவர்கள் (விடத்தல்தீவு, மன்னார்) காலமானதையிட்டு அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக் கழகம்,
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி

(C-4377)

யாழ்.நகரில் இயங்கி வரும் பிரபல உணவகம் ஒன்றிற்கு தங்கி நின்று பணிபுரியக் கூடிய வேலையாட்கள் தேவைப்படுகின்றனர்

- உணவு பரிமாறுபவர் (ஆண்/பெண்)
- முன்னனுபவம் உள்ள சமையல் உதவியாளர் (ஆண்/பெண்)
- காசாளர் (பெண்கள் விரும்பத்தக்கது)
- தோசை, வடை தயாரிப்பதில் முன்னனுபவம் வாய்ந்த சமையலாளர்
- சுத்திகரிப்பு பணியாளர்
- வாகன சாரதி (auto, buddy)
- பாதுகாப்பான வசதியான தங்குமிடம் மற்றும் சுத்தமான உணவு இலவசம்.

தொடர்பு கொள்ளவும்:-0777911219
(4240)

ALLIANCE FRANÇAISE DE JAFFNA
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக் கொள்ளுங்கள்

பிரெஞ்சு மொழி





- பிரான்ஸ் FOREIGN MINISTRY & FRENCH EMBASSY யின் கீழ் இயங்குகிறது. தலைமை நிறுவனம் FRANCE இல் உள்ளது.
- எமது CERTIFICATES & INTERNATIONAL DIPLOMA ( DELF A1) பெற்றால் பிரான்ஸில் உள்ள கட்டாய பரீட்சை தேவையில்லை.
- இலவசம் படிக்கும் பாடங்களின் PHOTOCOPIES, படித்ததற்கான LETTRE, VISA FORM நிரப்புதல் CD, BOOKS பாவனை...
- யாழ், வன்னி, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு, கொழும்பைச் சேர்ந்த நூற்றுக்கணக்கானோர் AF இல் படித்தே வெளிநாடு செல்கிறார்கள்





ஆரம்பம் -23.04.2016 உடன் அழைத்துப் பதியவும்
021 222 8093 ஏ, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
(4215)

BRITISH COLLEGE OF HIGHER STUDIES
BCHS
சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும்

Spoken English with Grammar 1 1/2 Months
(ஆங்கிலத்தில் பேசுவதற்கு 100% உத்தரவாதம்) (Quick Learning course)

Diploma in English 2 1/2 Months

* எமது கற்கை நெறிகள் Writing, Speaking, Reading, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச்சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது.
* O/L, A/L பரீட்சை எழுதிய மாணவர்கள், தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும் ஏற்றது.
* Excellent Teachers' Panel & Individual Attenti

23.04.2016 1 : 11-07-2015
25.04.2016 2 : 13-07-2015
27.04.2016 3 : 15-07-2015
30.04.2016 4 : 18-07-2015

No.15 1/2, Siriampiyady Lane,
(Above Sathosa SM)
Jaffna. Tel :021-222
Hotlines
0770365728, 0777585913, 0777222422, 0714299935

கிழமை நாட்கள் மற்றும் சனி, ஞாயிறு வகுப்புக்களும் ஆரம்பமாகின்றன.
அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் தங்கள் பதிவுகளுக்கு முந்துங்கள்
(சி-4376)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.04.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.